மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பதினாறு

Registered as a New paper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 26 செவ்வாய்க்கிழமை (09.06.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 195

# ஈழத்தமிழருக்கு அதிகாரப் பகிர்வுடன் சம பிரஜை அந்தஸ்து வழங்க வலியுறுத்து

## இந்தியாவுக்கு மஹிந்த அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றக் கோரிக்கை



கொழும்பு, ஜூன் 09

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய அரசுக்கு வாக்குறுதி அளித்திருந்தார். அதே போன்று அந் நாட்டில் தமிழர்கள் சம பிரஜைகளாக நடத்தப்படுவர் என்றும் இலங்கை ஜனாதிபதி இந்திய அரசுக்கு வாக்குறுதி அளித்திருந்தார். அந்த வாக்குறுதிகள் இரண்டையும் தாமதமின்றி அவர் நிறைவேற்ற வேண்டும். அவற்றை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

இந்திய ஜனாதிபதியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இந்திய நாடாளுமன்றில் நேற்று இடம் பெற்ற விவாதத் தில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஜெயந்தி நடராஜன் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

மோதலால் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியிருக்கும் தமிழ் மக்களுக்கு உரிய முறையில் நிவாரணங்களை வழங்க இலங்கை அரசு துரித கதியில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மோதல் இடம்பெற்ற பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றி மக்களை உடனடியாக மீள்குடியமர்த்துவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் இலங்கை அரசு மேற்கொள்ளவேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர்களுக்கு அதிகாரப் பகிர்வு அரசியல் தீர்வாக வழங்கப்படும் என்று இலங்கை ஜனாதிபதி ஏற்கனவே இந்தியாவிடம் உறுதியளித்திருக்கின்றார்.

அவர் அந்த வாக்குறுதியை உடன் நிறைவேற்றவேண்டும். அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படுவதைசர்வதேச நாடுகள் எதிர்பார்த்து நிற்கின்றன. அத்தோடு தமிழர்களுக்கு எதிரான பாரபட்சம் முடிவுக்குக் கொண்டுவரப்பட (16 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே

ஜி.சி.+ உயர்தர மாணவர்களுக்கான 4 பக்கங்களில் மாதிரிவினாத்தாள்கள்

★பொருளியல் II ★பௌதீகவியல் I

★கணக்கீடு II ★உயிரியல் I

## நாளை

ஆசிரியர் - பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும் இலகுவழி ஆங்கிலம்

# திருப்பி அனுப்பப்பட்டது வணங்கா மண்!

கொழும்பு, ஜூன் 09

இலங்கையின் உள்நாட்டுப் போரின்



காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவிப் பொருள்களை எடுத்து வந்த 'கப்டன் அலி' (வணங்கா மண்) கப்பலை திருப்பி அனுப்பிவிட்டதாக அரசு தெரிவித்துள்ளது.

புலம்பெயர்ந்த தமிழர்களின் அமைப்பு ஒன்றினால் அனுப்பப்பட்டு கடந்த வார இறுதியில், (16 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைப் போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்

## ஜப்பானிய "ரைம்ஸ்" பத்திரிகை கருத்து

டோக்கியோ, ஜூன் 9

இலங்கையில் நடைபெற்றதாக கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்த சர்வதேச விசாரணை நடத்துவது அவசியம் என்று 'ஜப்பான் ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

போர் நடைபெற்ற பகுதியில் இருந்து வெளிப்பட்டுள்ள கவலை அளிக்கும் சான்றுகள் போர்க் குற்றங்கள், குறித்து மூடி மறைக்கப்படாத சர்வதேச விசாரணை நடத்த வேண்டியதன் தேவையை வலியுறுத்துகின்றன என்று அப்பத்திரிகை சுட்டிக்காட்டி உள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய வைத்தியக் குழுவினர் மனிக்பாம் பகுதிக்கு மாற்றம்

கொழும்பு, ஜூன் 09

வன்னிப் பகுதியில் மோதல்கள் இடம் பெற்றுக்கொண்டிருந்தபோது, அங்கிருந்து வெளியேறி அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரும் மக்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக இந்திய அரசினால் அனுப்பப்பட்டு, திருகோணமலை புல்மோட்டையில் செயற்பட்டுவந்த இந்திய வைத்தியக்குழு, கடந்த வியாழக்கிழமை முதல் வவுனியா (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்து அம்ச நடவடிக்கை குறித்து அறிவிக்கப்பட்ட பின்னர்

# ஈழத்தமிழருக்கு ஆதரவாக உண்ணாவிரதமிருந்த ரிம் 21 ஆம் நாள் முடிவில் நேற்று அதனைக் கைவிட்டார்



லண்டன், ஜூன் 09

லண்டனில் ஈழத் தமிழர்களுக்காக உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்த ரிம் மார்ட்டின் 21 ஆம் நாளான நேற்று தமது போராட்டத்தைக் கைவிட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

ஈழத்தமிழர்களின் இன்னல்களுக்குத் தீர்வுகாண அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தலையிட வேண்டும் என்று கோரியே மார்ட்டின் உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்தார். எனினும், அமெரிக்க ஜனாதிபதி தரப்பில் (16 ஆம் பக்கம் பார்க்க)

# ஏ – 9 வீதியூடாக குடாநாட்டுக்கு 120 லொறிகளில் பொருள்கள்

கொழும்பு, ஜூன் 09

யாழ்ப்பாணத்துக்கு ஏ-9 வீதியூடாக நாளைமறுதினம் 120 லொறிகளில் பொருள்கள் எடுத்துச் செல்லப்படவுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ். வர்த்தகர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய பேச்சின் பின்னர் இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கொழும்பிலிருந்து நாளை மறுதினம் வியாழக்கிழமை யாழ். வர்த்தகர்களின் 120லொறிகளில் வடபகுதிக்கு பொருள்கள் கொண்டுசெல்லப்படவுள்ளன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் கூட்டமைப்பினர் நாளை முக்கிய சந்திப்பு

கொழும்பு, ஜூன் 09

தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உடனடியாக அரசியல் தீர்வொன்றை முன்வைப்பதற்கும், இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கும் இந்திய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தங்கொடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுப்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நாளை சந்திக்கின்றது.

தற்போது தமிழ் நாட்டில் தங்கியுள்ள கூட்டமைப்பினர் நாளை புதுடில்லிக்குச் செல்கின்றனர். அங்கு மூன்று தினங்கள் தங்கியிருந்து பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் ஏனைய அரசியல் பிரமுகர்கள் ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான இந்தக் குழுவில் மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் அடங்குவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வலயக்கல்வி அலுவலகம் - தென்மராட்சி

## கேள்வி அறிவித்தல் - 2009

1.இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு உலக வங்கியிடம் இருந்து கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கென செலவுக்கான மானியத்தினைப் பெற்றுள்ளது. அதன் ஒரு பகுதியை கற்கைத்தாரகை (LEARNING STAR) அறிவுக் கோபுரம் (Tower of Knowledge) ஆகிய கட்டுமான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கான நிர்மாண வேலை ஒப்பந்தத்திற்கான கொடுப்பனவுகளுக்காகப் பெற்றுள்ளது. அந்நிதி ஒதுக்கீட்டில் இருந்து பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
2.ஒப்பந்தக்காரர் இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகம் உள்ளவராகவும், பதிவுப் புத்தகம் 2009 ஆம் ஆண்டு புதிப்பிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்கள் 2009.06.10ஆம் திகதி தொடக்கம் 2009.06.15 திகதி பி.பகல் 2 மணிவரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் எம்மால் 2009.06.18ஆம் திகதி மு.ப 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே எமது அலுவலகத்தில் மு.ப 11 மணிக்கு கேள்விப்பத்திரப் பெட்டி திறக்கப்படும்.
4.கேள்விப்பத்திரங்களுக்கான மீளளிக்கக்கூடிய மற்றும் மீளளிக்கமுடியாத வைப்புப் பணத்தை தென்மராட்சிக் கல்வி வலயக் கணக்குப் பகுதியில் செலுத்துவதன் பேரில் கேள்விப்பத்திர படிவங்களை தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் பகுதியில் பெற்றுக்கொள்ளவும்.
5.இல.03 இல் இருந்து 09 வரையான வேலைகளில் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் கேள்விப் படிவக் கட்டணம் மற்றும் பாதுகாப்பு வைப்புப்பணம் இன்றி பங்கெடுக்கமுடியும் .

| இல | பாடசாலையின் பெயரும், வேலை விபரமும் | மீளளிக்க முடியாத வைப்புப் பணம் | மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | யா/மீசாலை வீரசிங்கம் ம.வி பாடசாலைக்கட்டட மிகுதி வேலை | 500.00 | 17,200/= | M7/C8 |
| 02 | யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி O/L விஞ்ஞான ஆய்வுகூட மிகுதி வேலை | 750.00 | 22,000/= | M7/C9 |
| 03 | யா/ இயற்றாலை அ.மி.த.க பாடசாலை நிர்மாணம் வகுப்பறை மீதி வேலை | 250.00 | 1,200/= | M9/C9 |
| 04 | யா/ டிறிபேக் கல்லூரி வகுப்பறை கட்டட திருத்தம் | 250.00 | 1,800/= | M9/C9 |
| 05 | யா/ மட்டுவில் கமலாசினி வித்தி. பாடசாலை கட்டட திருத்தம் | 500.00 | 3,500/= | M9/C9 |
| 06 | யா/ கைதடி முத்துக்குமாரசாமி ம.வி கணனியறைத்திருத்தம் | 250.00 | 1,600/= | M9/C9 |
| 07 | யா/ கைதடி சேதுகாவலர் வித்தி. வகுப்பறை கட்டட திருத்தம் | 250.00 | 1,000/= | M9/C9 |
| 08 | யா/ கச்சாய் அ.த.க பாடசாலை வகுப்பறை கட்டட திருத்தம் | 250.00 | 1,500/= | M9/C9. |
| 09 | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி வகுப்பறை கட்டட திருத்தம் | 250.00 | 1,200/= | M9/C9 |

6.கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் எம்மால் வழங்கப்படும் இரண்டு கட்டட மதிப்பீட்டு அறிக்கைப் பத்திரங்களில் ஒன்றை மூலப்பிரதியாகவும் மற்றையதை பிரதியாகவும் கொள்ள வேண்டும்.
7. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப்படிவமும் கையொப்பம்,இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும். கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனிதனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விபரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனி யே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையில் இட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தக்காரரின் முத்திரை இடப்பட்டு தென்மராட்சி வலயக் கல்வி அலு வலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 18ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன் னர் இடப் பட வேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப்பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக் காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அன்றையதினம் எமது அலுவலகத்தில் மு.ப 11 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும்.
8. கேள்விப்பத்திரம் பெற வரும் ஒப்பந்தக்காரர் பாடசாலை வேலைகள் பகுதி பொறி யியலாளரின் கேள்விப்பத்திரம் பெறுவதற்கான அனுமதிக் கடிதத்துடன் வருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக்கல்வி அலுவலகம்,
தென்மராட்சி, சாவகச்சேரி.

கு.பிறேமகாந்தன்,
வலயக்கல்விப்பணிப்பாளர்,
தென்மராட்சி.

# மாநகரசபை, யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளை மேற்கொள்வதற்காக 'இக்ராட்' நிறுவனத்தில் பதிவுள்ளவர்களும் மாநகரசபையில் ஒப்பந்தகாரராக பதிவு செய்து கொண்டவர்களுமான ஒப்பந்தகாரர்களிடம் இருந்து என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன. பதிவுசெய்ய வேண்டிய தரம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி: 12.06.2009 பி.ப. 3 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 22.06.2009 நண்பகல் 12 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி: 22.06.2009 பி.ப. 2.30 மணி

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாவும் அரக்கு முத்திரை இடப்பட்டு இரு பிரதிகளில் வேறுவேறான கடித உறையில் வைக்கப்பட்டு மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என முகவரி இடப்பட்டு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அதற்கென செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியுள் இடப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரத்தை கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். வேலைத் திட்டங்கள் 01-05 வரையான வேலைகளுக்கான கேள்விப் படிவங்களை வேலைப் பகுதி அலுவலகத்திலும் 06 வது வேலைத்திட்டத்துக்கான கேள்விப் படிவங்களை நீர் வேலைப் பகுதி அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| வேலையின் பெயர் | இக்ராட் பதிவின் ஆகக் குறைந்த தரம் | மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம்(வற் உட்பட) |
|---|---|---|---|
| 01.அண்ணா சனசமூக நிலைய நிர்மாண வேலை | M 9 | 2000.00 | 500.00 |
| 02. கிறீன் கிங்ஸ் சனசமூக நிலைய மீதி வேலை | M 9 | 2000.00 | 500.00 |
| 03. ஈச்சமோட்டை சனசமூக நிலைய மதில் நிர்மாண வேலை | M 9 | 2000.00 | 500.00 |
| 04.யாழ். பாரதி சனசமூக நிலைய முன்பள்ளி மீதி வேலை | M 9 | 3000.00 | 500.00 |
| 05.நாவாந்துறை நூலக நிர்மாண வேலை | M 8 | 6000.00 | 500.00 |
| 06.மாநகர சபைக்குரிய எட்டு (08) பொதுக் கிணறுகள் திருத்தம் | M 9 | 5000.00 | 500.00 |

08.06.2009
திகதி

மு. செ[illegible],
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

# சம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம், ஜூன் 9

சாவகச்சேரி வாரிவள நாத சிவன் ஆலயத்தில் இன்று திருஞானசம்பந்தர் குருபூசை இடம்பெறும்.

தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத்தினரால் தேவார பாராயணமும் பெரிய புராணப் படனமும் இடம்பெறுமெனவும் சங்கத் தலைவி கு.கமலாதேவி அறிவித்துள்ளார். (1-207)

* * *

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் திருஞானசம்பந்தர் குருபூசைவைபவம்இன்று செவ்வாய்க்கிழமை காலை 7மணிக்கு யாழ்ப்பாணம் அத்தியடி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயிலில் ஆலயப் பூசையைத் தொடர்ந்து நடைபெறும்.

காலை 9.30 மணியளவில் நல்லூர் ஸ்ரீ சட்டநாதஸ்வாமி தேவஸ்தானத்திலும் காலைப்பூசையைத் தொடர்ந்து ஞானசம்பந்த பெருமானுக்கு அபிசேகமும் ஆராதனை பூசை நடைபெற்று அவர் அருளிய அற்புதத் திருப்பதிகங்கள் முற்றோதல் இடம்பெறும் (1)

# வாக்காளர் இடாப்பு பார்வைக்கு

இணுவில், ஜூன் 9

உள்ளூராட்சி அதிகார சபைக் குட்பட்ட யாழ். மாநகர சபைக்கான தேர்தலில்அஞ்சல்மூலம் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களின் விவரங்களை பார்வையிடுவதற்கு வசதியாக வாக்காளர் இடாப்புக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டச் செயலகத்தில்அமைந்துள்ள தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகத்தில் இதனைப் பார்வையிடலாம். (1-45)

# கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற தொழில்சார் பயிற்சி நெறிகள் தொடர்பில் மூன்றாம் நிலை, வாழ்கைத் தொழில் கல்வி ஆணைக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று உலக கனேடிய பல்கலைக் கழக உதவியுடன் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தொழில் சார் பயிற்சிநெறியினை வழங்கும் சகலநிறுவனங்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

# தேவை

முன்னனுபவமுள்ள லான்ட் மாஸ்ரர் சாரதி (Land Master Driver) தேவை. தகுதியுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை 13.06.2009 ஆம் திகதிக்கு முன்பாக கீழ் வரும் முகவரியில் நேரடியாக ஒப்படைக்கவும்.

**யூரோவில்,**
866, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# வேலை வாய்ப்பு

முழுமையாக அரசுடமையாக்கப்பட்ட யாழ். மண்ணில் 47 வருட காலமாக இயங்கி வரும் காப்புறுதி நிறுவனத்துக்கு நெல்லியடி, யாழ்.கிளைகளுக்கு திறமைமிக்க அமைப்பாளர்களின் கீழ் ஏக அரச நிறுவனத்தில் காப்புறுதி ஆலோசகராகப் பணியாற்ற ஓர் அரிய சந்தர்ப்பம்.

## அடிப்படைத் தகைமைகள்

*1) G.C.E. O/L கணிதம் உட்பட 6 பாடம் சித்தி*
*2) 18 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.*
*3) விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும். (கிராம சேவையாளர் நற்சான்றிதழ் அவசியம்).*

தகுதியும் திறமையும் உடையோர் தங்கள் சுயவிவரக் கோவையுடன் விண்ணப்பங்களை 18.06.2009 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
துடிப்புமிக்க இளைஞர் யுவதிகளே இவ் அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.

C/O உதயன்
விளம்பர இல:-3907

# மரண அறிவித்தல்கள்



## சின்னத்தம்பி சின்னத்துரை

அச்சுவேலி, தோப்பைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சின்னத்துரை 06.06.2009 சனிக்கிழமை கனடா, ரொறன்ரோவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னத்தம்பி தம்பதியினரின் இளையமகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சதாசிவம் தம்பதியினரின் அன்பு மருமகனும் ஜெயலட்சுமி (அச்சுவேலி), கனடாவைச் சேர்ந்த பரலோகநாதன், சற்குணநாதன், சத்தியநாதன், நித்தியலட்சுமி ஆகியோரின்அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஆனந்தராஜா மற்றும் கனடாவைச் சேர்ந்த சிவராணி, சுகுணா, ரதிஜோதி, மதிசூடி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, செல்லம்மா, இளையபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, சுப்பிரமணியம், கமலநாதன் மற்றும் பத்மநாதன் (சிறுப்பிட்டி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற கௌரி மற்றும் ஜெயந்தி, ஆனந்தி (சுவிஸ்), நகுலன், கனடாவைச்சேர்ந்த கஜேந்திகா, லாவண்யா, இந்துஜா, நேதன், சுரேஸ், சுபாங்கி, இளங்கோ மற்றும் றமணன் (சுவிஸ்), சாந்தகுமார், ரேணுகா, ஜீவன், றதன் ஆகியோரின் பேரனும் தர்ஷன், லக்ஷ னா, கௌசி, அபிஷன், காவியன், திவ்யா, அஞ்சனா, அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக நேற்று (08.06.2009) திங்கட்கிழமை(Hyland Funeral Hall, 3280 Toranto, Canada)வில் வைக்கப்பட்டு இன்று (09.06.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்கு தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜவீதி,
தோப்பு,அச்சுவேலி.

தகவல்:
ஜெயலட்சுமி (மகள்).

## திருமதி சுப்பிரமணி ஐயர் சரஸ்வதி அம்மா

கும்பகோணத்தைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற சுப்பிரமணி ஐயரின் மனைவி சரஸ்வதி அம்மா நேற்று (08.06.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ச.சிவசர்மா சொர்ணலக்சுமி அம்மா, காலஞ்சென்ற குமாரசாமி சர்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெகதீஸ்வரி, கெங்கேஸ்வரக்குருக்கள் (வட்டுக்கோட்டை),வைத்தீஸ்வரக்குருக்கள் (சித்தன்கேணி), காலஞ்சென்ற கேதீஸ்வரசர்மா மற்றும் வாலாம்பாள் (வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசுப்பிரமணிய சர்மா, பாலேஸ்வரி, கம்சவல்லி, சுபாசினி, நிராஞ்சனன், ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விமலாதேவி, சர்வேஸ்வரன், நளாயினி, திசாலினி, மதுராயினி,நிரோஜினி, பிரதீபகாந்தன், கிரிவாசினி, முகுந்தன், சுகந்தன், கிரிஜன், தனுஜன், சுஜந்தினி, சுஜேந்திரன், சுஜீதரன், சுபகரி,சுகீர்த்தனன், சிந்துஜா, லக்சிகா, தஜேந்தன், பிரவீந்திரன் ஆகியோரின் பேர்த்தியும் யதுசன், யதுசா, சிவாத்மிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2009) செவ்வாய்க்கிழமை பி.பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோயில் வீதி,
சித்தன்கேணி.

தகவல்:
சு.வைத்தீஸ்வரக்குருக்கள்
(கண்ணன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தார்மீகப் பொறுப்பைத் தட்டிக் கழிக்கலாமா?

வன்னியில் நடைபெற்ற போர் காரணமாக இடம் பெயர்ந்து, வவுனியாவில் அரசாங்கம் அமைத்துள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ளோரின் நிலைமை மிகவும் மோசமடைந்து வருவது குறித்து நாளாந்தம் வெவ்வேறு பாதகமான தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அங்கு பணியாற்றுவதற்கோ நேரில் சென்று அம்மக்களின் குறைகளை, கஷ்டங்களை கேட்டறிவதற்கோ வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்களுக்குக்கூட கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பதால் மக்கள் அனுபவிக்கும் நரக வேதனைகள் குறித்து போதிய தகவல்கள் வெளிவரும் சாத்திய நிலை இல்லை.

அம்மக்கள் படும் துன்பங்கள், அனுபவிக்கும் கஷ்டங்கள் குறித்துச் சிறிய அளவிலேயே அவ்வப்போது தகவல்கள் வெளியே கசிந்து வருகின்றன. அவற்றை அறியும் போது அந்த அகதிகள், மிருகங்களை விட மோசமான நிலையில் நடத்தப்படுவது, வாழ்க்கை நடத்துவது கல்நெஞ்சரையும் கவலை கொள்ள வைப்பனவாகவே உள்ளன.

சுமார் 3 லட்சம் மக்கள் 40 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான அலுவலகத்தின் செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது. அங்கு நாள்களை ஓட்டும் மக்கள் அனுபவிக்கும் அவலங்கள், துன்பங்கள், கஷ்டங்கள், இயலாமை உட்பட உயிர் வாழும் நிலையை கற்பனையும் செய்ய முடியாத, அதற்கு அப்பாற்பட்ட நிலையை அது எவருக்கும் உண்டாக்கும் என்பதில் ஒரு துளி ஐயமும் இல்லை.

அவர்களுக்குரிய வசதிகள் யாவும் செய்யப்பட்டுள்ளதாக அரச தரப்பில் கூறப்பட்டாலும், அகதி மக்கள் அடிப்படை வாழ்க்கை வசதிகள் இன்றியே நரகத்தில் உழல்வது போன்றே ஒவ்வொரு நிமிடத்தையும் கழிக்கிறார்கள் என்பதே உண்மை என்று எவரும் ஊகித்து உணரமுடியும். ஐ.நா. மனிதாபிமான அலுவலகத்தின் ஐ.ஆர்.ஐ.என்.செய்திச் சேவை பல சர்வதேச அமைப்புகளின் அதிகாரிகளை மேற்கோள்காட்டி வன்னி அகதி முகாம்களின் நிலை குறித்து வெளியிட்டிருக்கும் தகவல்கள் யாவுமே நெஞ்சை உருக்குவனவாகவே உள்ளன.

- 40 அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் 13 வீத சதமானவர்கள் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள். அவர்களில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் போசாக்கின்மையால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-நிவாரணப் பொருள்களை பெறுவதற்காக 10 மணித்தியாலங்களுக்கும் மேலாக வரிசையில் நிற்கவேண்டி உள்ளதால், குழந்தைகள் மற்றும் முதியோர், நோயுற்றோர், காயமுற்றோர் என்று பலதரப்பினராலும் அப்பொருள்களைப் பெறமுடியாத கஷ்ட நிலையும் உண்டு.

- 13 முகாம்களில் தங்கியுள்ள குழந்தைகளில் 25.5 வீதமானோர் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 5.2 வீதமானோர் போசாக்கின்மையால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

- இந்தப் புள்ளிவிபரங்கள் சில மாதங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்டதால் மேலும் அதிக எண்ணிக்கையான சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று '' யுனிசெவ்'' கவலை தெரிவிக்கிறது.

இந்தப் புள்ளி விபரங்களை எடுத்துக்கூறிய 'யுனிசெவ்', சிறுவர்களின் ஊட்டச்சத்து குறைபாட்டு நிலை எமக்கு முக்கிய கவலைக்குரியதாக உள்ளது. ஆனால் அகதி முகாம்களுக்குள் செல்வதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதால், போசாக்கின்மையைக் கட்டுப்படுத்த எதுவும் செய்ய முடியாதுள்ளது என்பதையும் அப்பட்டமாகச் சுட்டிக் காட்டி உள்ளது.

இன்றைய குழந்தைகள் நாளைய பிரசைகள். அவர்கள் போசாக்கின்மையால் பாதிப்புற்றுள்ளார்கள் என்பது அவர்களில் ஒரு பகுதியினர் மடிந்து போகக்கூட வழி செய்யலாம். இன்னொரு சதவீதத்தினர் சமூகத்திற்குப் பயன்படமுடியாத 'நோஞ்சான்'களாக வளரலாம். மொத்தத்தில் எதிர்காலத் தமிழ்ச் சந்ததியினரை மறைமுகமாக அழிக்கும் ஒரு செயற்பாடாகவும் இது கருதக்கூடியதாகும்.

தனக்கு அத்தகைய உள்நோக்கம் இல்லையென்று அரசாங்கம் மறுதலிப்பதாயின், அவர்களைக் காப்பாற்றும் பணியைச் செய்வதற்கு 'யுனிசெவ்' போன்ற சர்வதேச சிறுவர் தொண்டு நிறுவனங்களை அனுமதிக்கவேண்டும்.

வவுனியாவில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் - தமிழ் மக்கள் - அவர்களின் குழந்தைகள் இந்த நாட்டு எதிர்காலச் சந்ததியினரே என்று அரசு உரிமை கூறுவதாயின், இதயசுத்தியுடன் அவ்வாறே கருதுவதாயின், 'யுனிசெவ்' அமைப்பினர் அங்கு சென்று கட்டுப்பாடின்றிப் பணிசெய்து தமிழ்க் குழந்தைகளைக் காப்பாற்ற அனுமதிக்கவேண்டும்.

அகதி முகாம்களில் உள்ள தமிழ் இளைஞர்களை விசாரணை செய்த பின்னர், அவர்களுக்கு புனர்வாழ்வு தந்து புது வாழ்வு அளிக்கப்போவதாக அரச தரப்பில் அமைச்சர்களும் அதிகாரிகளும் கூறுகிறார்கள். அதற்கான திட்டங்கள் குறித்துப் பெரும் பிரசாரம் செய்யப்படுகின்றது. அதுவும் நேர்மையாக நடைமுறையாகுமெனில் முகாம்களில் உள்ள தமிழ்ப் பிஞ்சுக் குழந்தைகளைக் காப்பதற்கு, குழந்தைகள் நலனில் உண்மையான அக்கறைகொண்ட சர்வதேச மட்டத்தில் பெயர் பெற்ற 'யுனிசெவ்' அமைப்பை முகாம்களில் பணி செய்ய ஏன் அரசு அனுமதிக்கக்கூடாது ?

வவுனியா முகாம்களில் உள்ள மக்கள் மோசமான வாழ்க்கையை நகர்த்துகிறார்கள் என்ற 'பொட்டுக்கேடு' வெளிவந்துவிடும் என்பதற்காக, அதைத் தடுப்பதற்காக, தமிழ் மக்களின் எதிர்காலச் சந்ததியை சாகடிக்கலாமா? ஓர் அரசாங்கம் என்ற வகையில், நாட்டின் எதிர்காலச் சந்ததியினரை காப்பாற்றவேண்டிய தட்டிக்கழிக்கமுடியாத பெரும் தார்மீகப் பொறுப்பு தனக்கு உண்டு என்பதனை உணர்ந்தாக வேண்டும்.

ஏனைய சமாச்சாரங்கள் போலன்றி, குழந்தைகள் மடிந்துபோகும் ஆபத்தான விவகாரம் தனித்துப் பிரித்து நோக்கப்படவேண்டியது என்பதனை அரசாங்கம் உணரக்கூடாதா?

# சீநோர் நிறுவனப் படகு கட்டும் தளம் நவீன வசதிகளுடன் திருத்தியமைக்கப்படும்

## கைத்தொழில் அமைச்சர் வெலகம யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

நல்லூர்,ஜூன் 9

தற்சமயம் இயங்க முடியாத நிலையில் உள்ள குருநகர் 'சீநோர்' தாபனத்தின் படகு கட்டும் தளத்தை நவீன வசதிகளுடன் திருத்தியமைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என 'சீநோர்' நிறுவனத்திற்கு நேற்று வருகைதந்த கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் குமார வெலகம தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்த அமைச்சர் குமார வெலகம, அமைச்சின் செயலாளர் எல்.என்.டீ. சொய்சா பீரிஸ் உட்படப் பத்துப்பேர் அடங்கிய குழு 'சீநோர்' சிறுவனத்திற்குச் சென்றது.

யாழ் .அரச அதிபரும், 'சீநோர்' பணிப்பாளர் சபைத் தலைவருமான கே.கணேஷ் தலைமையில் அங்கு கூட்டம் நடைபெற்றது.

யூ.என்.டி.பி.நிறுவனம் 12 மில்லியன் பெறுமதியான வலை பின்னும் இயந்திரம் ஒன்றை உதவியாக வழங்கியுள்ளது. இதன்மூலம் வருடாந்தம் 25 முதல் 36 மெற்றிக்தொன் வலைகளை உற்பத்தி செய்யமுடியும். இதன் மூலம் யாழ்ப்பாணத்தின் வலைத் தேவைகளில் மூன்றில் ஒரு பகுதியை மட்டும் நிறைவு செய்யக்கூடியதாக உள்ளது. இதேபோன்று மேலும் ஒரு இயந்திரத்தை தந்துதவினால் யாழ். குடாநாட்டின் வலைத் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடியதாக இருக்கும் எனவும் வருடாந்தம் 72 மெற்றிக் தொன் வலைகளை உற்பத்திசெய்து வடபகுதி முழுவதும் விநியோகிக்கக்கூடியதாக இருக்கும் எனவும் 'சீநோர்' நிறுவனப் பிரதிப் பொது முகாமையாளர் பி.கேதீஸ்வரன் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினார்.

தற்போது சேதமடைந்துள்ள ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலையை முழுமையாகத் திருத்தியமைக்கும் பட்சத்தில் நாளொன்றுக்கு 10 தொன் ஐஸ் உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது இயங்கும் வலைபின்னும் தொழிற்சாலைக்கு மேலதிக முதலீடாக 3 மில்லியன் ரூபாவை உடனடியாக வழங்க அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மீனவர்கள் மிகவும் கஷ்ட நிலையில் வாழ்வதால் தமக்கான மீன்பிடிச் சாதனங்களைக் கொள்வனவு செய்வதில் மிகவும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர். இந்த நிலையில் மீனவர்கள் நியாயமான விலையில் தமது தொழிலுக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்யக்கூடியதான செயற்பாடுகளை 'சீநோர்' நிறுவனம் மேற்கொள்ள வேண்டியுள்ளது எனவும் அங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

செயல்இழந்திருந்த இந்த நிறுவனத்தை அதன் முக்கியத்தை உணர்ந்து இயங்க வைப்பதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொண்ட அனைவருக்கும் அமைச்சர் நன்றி தெரிவித்தார். அத்துடன் படகு கட்டும் தளத்தை உடனடியாக இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் அங்கு உறுதியளித்தார்.

# யாழ். மாநகர சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு விசேட அடையாள அட்டை வழங்க நடவடிக்கை

## நாளைமுதல் கிராமசேவையாளரிடம் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம் ஜூன் 09

யாழ்.மாநகரசபைத்தேர்தலில் வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு தற்காலிக அடையாள அட்டையினைப் பெற்றுக் கொடுக்க யாழ்.மாவட்ட தேர்தல் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

யாழ்.மாவட்டத் தேர்தல் திணைக்கள உதவித் தேர்தல் ஆணையாளர் பொ. குகநாதன் இத்தகவலை உதயனுக்குத்தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள மாநகரசபைத் தேர்தலில் தேசிய அடையாள அட்டை இன்றி வாக்காளர்கள் வாக்களிக்க முடியாது.

தேசிய அடையாள அட்டை இல்லாத வாக்காளர்கள் கடவுச் சீட்டு அல்லது சாரதி அனுமதிப் பத்திரம், அல்லது ஓய்வூதிய அடையாள அட்டை அல்லது ஆட்பதிவுத் திணைக்களத்தால் மதகுருமார்களுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை ஆகியவற்றை பயன்படுத்தி வாக்களிக்க முடியும்.

மேற்கூறப்பட்ட ஆவணங்கள் இல்லாத வாக்களிக்கத் தகுதியுடையவர்க்கு விசேட அடையாள அட்டை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

விசேட அடையாள அட்டையினை பெற்றுக்கொள்ளவுள்ள வாக்காளர்கள் நாளை புதன் கிழமை முதல் 1¼ x 1 அளவுடைய புகைப்படத்துடன் தத்தமது பிரிவு கிராம சேவையாளரின் அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்க முடியும்.

இந்தத் தற்காலிக அடையாள அட்டை மாநகரசபைத் தேர்தலில் வாக்களிக்க மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(50-9)

# சரணடையும் புலி உறுப்பினர்களை மனிதாபிமானத்துடன் நடத்துங்கள்!

## வாழைச்சேனை நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவு

மட்டக்களப்பு, ஜூன் 09

சரணடையும் விடுதலைப் புலி உறுப்பினர்களை சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு அமைய நடத்துமாறு வாழைச்சேனை மஜிஸ்திரேட் மாணிக்கவாசகம் கணேசராஜா நேற்றுப் பொலிஸாருக்கு கட்டளை பிறப்பித்துள்ளார்.

கடந்த 28 ஆம் திகதி வாகரைப் பிரதேசத்தில் இராணுவத்தினரிடம் சரணடைந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் 90 நாள்கள் அவசர கால சட்ட விதிகளின் கீழ் வாகரைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கொண்டையன் கேணியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அமரசிங்கம் (புகழேந்தி) வாகனேரியைச் சேர்ந்த பரமக்குட்டி சாமுவேல் (ஹரன்) மற்றும் முள்ளிவெட்டுவானைச் சேர்ந்த செல்லப்பா சிவானந்தன் (ராகுலன்) ஆகியோர் தொடர்பாக நேற்று வாகரைப் பொலிஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த மேலதிக அறிக்கையைப் பரிசீலனைக்கு எடுத்தபோதே நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

நேற்று பொலிஸார் சமர்ப்பித்துள்ள மேலதிக அறிக்கையொன்றில் எதிர்வரும் 29 ஆம் திகதி குறித்த மூவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த அனுமதியைக் கோரினர். இதற்கான அனுமதியை வழங்கிய, வாழைச்சேனை நீதிவான் மாணிக்கவாசகம் கணேசராஜா, சரணடையும் விடுதலைப் புலிகளை சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களுக்கு அமைவாக நடத்துமாறு பணிப்புரை விடுத்தார். (சி)

# தொழிற்பயிற்சி நிலையத்தின் திறப்பு விழா இன்று

நவாலி, ஜூன் 09

பண்டத்தரிப்பு, பிரான்பற்றில் அமைக்கப்பட்டுள்ள புதிய தொழிற்பயிற்சி நிலையத்தின் திறப்புவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும் உலக கனேடிய நிறுவனப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.ஜெயராஜசிங்கம், கட்டடத்திணைக்கள பிரதம பொறியியலாளர் கே.குகநேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (203-100)

# பயண எச்சரிக்கைகளைத் தளர்த்துமாறு ஐரோப்பிய நாடுகளிடம் இலங்கை கோரிக்கை

கொழும்பு, ஜூன் 09

இலங்கைக்கு பயணம் செய்வது தொடர்பில் ஐரேர்ப்பிய ஒன்றிய நாடுகளின் அரசாங்கங்கள் விடுத்துள்ள பயண எச்சரிக்கையை தளர்த்துமாறு இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் நிலவிய பாதுகாப்பு சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு இந்தப் பயண எச்சரிக்கையை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் விடுத்திருந்தன.

எனினும், தற்போது இலங்கையில் பாதுகாப்புச் சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ரிவன்த ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையுடனான வர்த்தக மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளை விஸ்தரிக்குமாறு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

உலக நாடுகளுடைய ஒத்துழைப்புடன் வடக்கு கிழக்கு மக்களின் இயல்பு வாழ்க்கையை நிலைநாட்ட முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 27 | 10.06.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | திருதியை |
| | பி.இ. 05.39 வரை |
| நட்சத்திரம்: | பூராடம் |
| | பி.ப. 06.46 வரை |
| சுபநேரம்: | 04.22 - 05.52 |
| ராகுகாலம்: | 11.52 - 01.22 |

# புதிய பிரதம நீதியரசராக அசோக என் டி சில்வா



கொழும்பு, ஜூன் 09

புதிய பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதிபதி அசோக என். டிசில்வா நேற்றுக் காலை ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றார்.

1971ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் தனது பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட இவர், 1972ம் ஆண்டு உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இலங்கை சட்டத் துறையிலே பல பதவிகளை வகித்து வந்த இவர் 2001 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றின் மேலதிக விசாரணை நீதிபதிகளுக்கான தலைவராக விளங்கியுள்ளார்.

2004ஆம் ஆண்டு முதல் ருவண்டாவில் நிறுவப்பட்ட சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் நிரந்தர நீதிபதிகளில் ஒருவராக அசோக என் டி சில்வா கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# A.M.T Transport Service

யாழ்.குடாநாட்டிற்கும் தென்பகுதிக்குமான தரை வழிப்பாதையில் எமது போக்குவரத்துச் சேவையினை மீண்டும் ஆரம்பிக்கின்றோம் என்பதனை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**யாழ்ப்பாணம் ⟷ கொழும்பு**

யாழ்.குடாநாட்டிலிருந்து விவசாயப்பொருள்கள், கருவாடு, தெங்கு, பனை உற்பத்திப் பொருள்களை தென்பகுதிக்கு நியாய கட்டணத்தில் கொண்டு செல்லப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

★ மூன்று தசாப்த காலமாக போக்குவரத்துச் சேவையில் தடம்பதித்த முன்னணி நிறுவனம்.

கொழும்பு:
இல.230/232 Wolfendhal Street,
Colombo -13.
T.P: 0115365166,
0112451558, 0112451716

யாழ்ப்பாணம்:
Point pedro Road,
Irupalai Junction, Kopay.
T.P: 021 222 5784,
Fax: 021 2225784.


## மரண அறிவித்தல்கள்

### நடராசா சரவணபவன் (ராசன்)



வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கொட்டடியை வசிப்பிட மாகக் கொண்டிருந்தவரும் தற்போது அத்தியடியில் வசித்தவருமாகிய நடராசா சரவணபவன் (ராசன்) நேற்று (08.06.2009) திங்கட்கிழமை அதிகாலை காலமாகி விட்டார்.

அன்னார் அமரர்களான செல்லையா நடராசா (முன்னாள் அரச மரக் கூட்டுத்தாபனம்), திலகவதி தம்பதியினரின் அன்பு மகனும் யோகலட்சுமியின் பாசமிகு கணவரும் சுபகரன், நிரஞ்சனா, கிரிஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி கிருஸ்ணாம்பிகை, திருமதி இராஜேஸ்வரி, திருமதி விஜயலட்சுமி (பிரான்ஸ்), திருமதி வீரலெட்சுமி (கனடா), ராஜகோபாலன் (பாலு-பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான இராசேந்திரன் (கனடா), அருள்நந்தி (கனடா) மற்றும் திருமதி பத்மாவதி (லண்டன்), ஆனந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
30/9, அத்தியடி குறுக்கு லேன், அத்தியடி.
மு.பரம்சோதி, ச.தெய்வேந்திரன் (மைத்துனர்மார்).
(85935)

### கந்தையா ஆனந்தராசா



(ஓய்வுபெற்ற கேபிள் ஜொய்ண்ரர், மின்சாரசபை)

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஆனந்தராசா நேற்றுமுன்தினம் (07.06.2009) ஞாயிற்றுக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-தங்கம்மா தம்பதியினரின் பாசமிகு மகனும் மயில்வாகனம் - செல்வலக்ஷ்மி தம்பதியினரின் அன்பு மருமகனும் சிவமனோகரியின் அன்புக் கணவரும் செல்லத்துரையின் அன்பு மருமகனும் சரஸ்வதி, பரமேஸ்வரி, ராசபூபதி, லோகநாதன், இராசேந்திரம், சறோஜினி தேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயகுமார், ராசகுமார், பவானி, றஜனி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மனோ வாசா"
பன்னாலை, தெல்லிப்பழை.
T.P: 0777448216
தகவல்: மனைவி

## தமிழ்த் தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 9

தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையேயான கோட்ட மட்ட தமிழ்மொழித் தினப் போட்டிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி நடை பெறவுள்ளன.

எனவே, தீவக வலயப் பாடசாலை அதிபர்கள் மேற்படி சுற்று நிருபத்துக்கமைய எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை மட்டப் போட்டிகளை நடத்தி முடிக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஸ்ணன் அறிவித்துள்ளார். (201-261)


புத்தம்புதிய வடிவங்களில் பல வர்ண நினைவு மலர் அட்டைகள்
விலை ரூபா 5/= மட்டுமே
"சிவரஞ்சனம்"
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(இந்துக் கல்லூரி அருகாமை)


## குத்தகைக்கு

நெல்லியடி பொதுச் சந்தைக்குச் சமீபமாக எதிர்ப் புறத்தில் யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில் 5பரப்புக் காணி குத்தகைக்கு அரச, அரசசார்பற்ற, தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

விளம்பர இல.3908
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

வயது 40ஐ உடைய, அழகான, உயரமான, கௌரவ குடும்பம், கிறிஸ்தவ மதம் (கத்தோலிக்கம்) லண்டனில் P.R. உள்ள குணசாலியான மணமகனுக்கு படித்த, அழகான, உயரமான, 35 வயதுக்கு மேற்படாத மணப்பெண் தேவை.

C/O உதயன்,
விளம்பர இல.3909.

## காணவில்லை

கறுப்பு வெள்ளை நிறமுள்ள பொமனேரியன் நாய்க்குட்டி ஒன்று 07.06.2009 கட்டுடை, அரசடிப் பிள்ளையார் கோயில் வயல் வெளியில் ஓடிவிட்டது. அதைக் கண்டு பிடித்துத் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 060 221 3306, 071 814 8152

## தவறிவிட்டது

வட்டு. தென்மேற்கு, வட்டுக்கோட்டை என்னும் முகவரியுடைய திருமதி சிவகல்யாணி நவரத்தினராஜா என்பவரது தே.அ.அட்டை (478112173 V) கடந்த வியாழன் யாழ்.பிரதம தபாலகத்திற்கும் யாழ். பஸ்தரிப்பு நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டது. [illegible] என்னும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தந்துதவும் [illegible] வழங்கப்படும். (85932)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பீதாம்பரம் திரேசம்மா (திரேசா)



பழைய பூங்கா வீதியைப் பிறப்பிடமாகவும் மணியந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் தற் போது புதுவீதி, கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பீதாம்பரம் திரேசம்மா (07.06.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியநாயகம் - திரேசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பீதாம்பரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையாவின் அன்பு மருமகளும் ஜேசுதாசனின் (இளைப்பாறிய தபால் அதிபர்) அன்புச் சகோதரியும் அற்புதமலர், றஞ்சிதமலர் (பிரான்ஸ்), புஸ்பமலர், அன்ரனி ஏகாம்பரம், நோபேட் ஏகாம்பரம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ் சென்ற லோறன்ஸ் சற்குணநாதன் மற்றும் நீக்கிலாப்பிள்ளை (பிரான்ஸ்), மரியதாஸ், பரமேஸ்வரி, றாஜி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் செல்வகுமார் (சுவிஸ்), அனற்சுமதி, எட்வின் ராஜ்குமார், அனற்றா சுகந்தி, மரினோ சஞ்சேய் (புனித பத்திரிசியார் கல்லூரி), மரியற்சயந்தா, றெஸ்னி (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம்), கிங்ஸ்ரன் றொகான் (யாழ்.மத்திய கல்லூரி), கிளொடியா (சுவிஸ்), ஜெயா (ஜெயா அச்சக உரிமையாளர்), தயாளன் (ICRC, வவுனியா), ரேணு (சுவிஸ்), அஜி (சுகாதார உத்தியோகத்தர், யாழ். மாநகரசபை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் யோசப், சாள்ஸ்பிலிப், சப்றிக், செறினா, ஜெனிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.06.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.39/10 A, புதுவீதி,
கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.
(85931)
தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி செல்லத்துரை தெய்வானை

மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை தெய்வானை நேற்று(08.06.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செ.கணேஸ்வரன் மற்றும் செ.பவளசேனன், செ.சற்குணம், செ.சர்வேஸ்வரி,செ.சிவராசா (ஜேர்மனி), சி.தவமலர், ச.சாந்தினி (ஜேர்மனி), இ.கடம்பமலர் (பிரான்ஸ்), செ.மோகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,க.நகுலேஸ்வரி (வவுனியா), ப.மல்லிகாதேவி, ச.நகுலாதேவி,செ.சிவநேசன், கி.நந்தகுமார்(ஜேர்மனி), மு.சிவராசா, இ.சத் தியமூர்த்தி (ஜேர்மனி), இ.இறஞ்சன்(பிரான்ஸ்), மோ.தேவகலா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.06.2009) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாதகல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதகல்.
தகவல்: செ.சற்குணம் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய சமூக வளர்ச்சிக்கு ஒருசேர வித்திட்ட ஞானசம்பந்தரின் தேவாரப் பதிகங்கள்



சமயகுரவர்களுள் ஒருவரான திருஞானசம்பந்த நாயனாரின் குருபூசைத்தினம் இன்றாகும். அதனையொட்டி இவ் ஆக்கம் பிரசுரமாகிறது.

*'பிள்ளை பாதி புராணம் பாதி'* என்ற முதுமொழி ஞானசம்பந்தருடன் தொடர்புடையது. சைவ நாயன்மார்களது பெருமைகளை விரித்துரைத்த சேக்கிழார் சம்பந்தருக்காக 1256 பாடல்களை ஒதுக்கினார். சைவ உலகு இடருற்றிருந்த காலத்தில் தனது சீரிய திட்டமிடல் மூலம் பணிசெய்து வெற்றி பெற்றவராதலால் சம்பந்தருக்கு இக்கௌரவம் அளிக்கப்பட்டிருக்கலாம். *'வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்கத்'* திருவவதாரஞ் செய்தவரல்லவா?

திருஞானசம்பந்தரது பாடல்கள் 'தேவாரம்' என்ற சிறப்பிற்குரியவை. தே- தெய்வத் தன்மை; ஆரம்-மாலை எனவே தெய்வத்தன்மையுடைய மாலை தேவாரம் எனவும் தே-தெய்வத்தன்மை; வாரம்- அன்பு தெய்வ அன்புப் பாடல்கள் எனவும் பொருள் கொள்ளலாம். இவர் பதினாயிரம் தேவாரப் பதிகங்களைப் பாடினார் என்றும் கால வெள்ளத்தில் பின்னோர் கைகளுக்குக் கிட்டாது அழிவுற்றவை போக தற்போது எஞ்சியவை 383 பதிகங்கள் என்றும் குறிப்பிடுவர்.

தமிழ் வழக்கில் காரைக்காலம்மையார் தொடக்கிவைத்த பதிக மரபைப் பல்லவர் கால நாயன்மார்கள் பெருவீச்சடையச் செய்தனர். இதில் திருஞானசம்பந்தரின் பங்கு அளப்பரியது.

பதிகம் என்பது, குறித்த ஒரு பொருள் பற்றிய பத்து அல்லது பதினொரு பாடல்களைக் கொண்ட ஒரு பிரபந்தமாகும். கோயிலை வலம் வந்து வழிபட வசதியாக, அந்த நேரத்தைச் சமன் செய்யும் விதத்தில் பதிகம் ஒன்றில் பத்து அல்லது பதினொரு பாடல்களைப் பாடினர்.

உலகீன்ற அன்னையிடம் ஞானப்பாலுண்ட சிறப்பிற்குரியவர் சம்பந்தர். "உவமை இலாக் கலை ஞானம், உணர்வு அரிய மெய்ஞ் ஞானம், தவ முதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தால் அந்நிலையில், என இவ்வனுபவத்தைச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

மேற்குறிப்பிட்ட ஞான முதிர்வு சம்பந்தருடைய ஒவ்வொரு பாடல்களும் வெளிப்படுகிறது. மூன்று வயதுப் பிள்ளைக்குப் பாடல் புனையும் ஆற்றலா எனச் சாமானியர் சந்தேகிப்பதும் இயல்பானதே. ஆயினும் இன்றும் உலகளாவிய ரீதியில் சிறுவர்கள் பலர் பற்பல சாதனைகள் புரிவதைக் காண்போர், இக்கருத்தில் அமைதி காண்பர். தமிழகத்தின் மதுரையில் 'லெவீனாஸ்ரீ' என்ற எட்டு வயதுப் பெண்பிள்ளை வள்ளுவரின் 1330 குறட்பாக்களையும் உரை விளக்கத்துடன் கூறும் ஆற்றல் பெற்றவராக விளங்குகின்றார் என்பது மிக அண்மையில் வெளியான ஆச்சரியம் தருமொரு தகவல்.

இளையவராக இருந்து சமயப் பணி செய்த சம்பந்தர், பல சவால்களைச் சந்தித்திருக்கிறார். இளையவர் ஒருவர் சவால்களைச் சந்திப்பது இயல்பானதே. தனது பதிகங்களில் 'முத்தமிழ் விரகர்', 'தமிழ் ஞான சம்பந்தன்', 'கவுணியர் குலபதி', 'காழியர் கோன்' என்றவாறு தனது முத்திரையைப் பதிக்கவேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டது. இதே தலத்தில் திருநாவுக்கரசர் முதியவராகப் பணி செய்தமையால் அத்தகைய முத்திரைக் கவி பாடவேண்டிய தேவை அவருக்கு ஏற்படவில்லை.

மேலும் 'எனதுரை தனது உரையாக' எனவும் கூறுகின்றார். அதாவது என் வாயிலிருந்து வரும் சொற்கள் - தேவாரப் பதிகங்கள்- இறைவனே நேரிடையாகக் கூறியவையாகும் என்கிறார். இச்செய்தியைத் 'திரு இலம்பையங் கோட்டூர்ப் பதிக'த்தின் மூன்றாவது பாடலில் காணலாம்.

பாடல்களை அமைப்பதிலும் ஒரு வரன்முறையைச் சம்பந்தர் பேணி இருக்கிறார். இவரது பதிகங்களில் எட்டாவது பாடல் இராவணனைப் பற்றியதாகவும், ஒன்பதாவது பாடல் பிரம்ம விஷ்ணுக்கள் அடிமுடி தேடிய செய்தி பற்றியதாகவும், பத்தாவது பாடல் பரசமயக் கண்டனமாகவும், பதினோராவது பாடல் தனது பெயரை, ஆற்றலைக் குறிப்பிடும் முத்திரை கவியாகவும் அமைத்துள்ளார்.

இத்தகைய திட்டமிடல் மனப்பாங்கு அவரிடம் வேரூன்றியிருந்தமையால், சைவ நெறிக்கு ஊறு விளைந்த போதெல்லாம் எதிர்த்து நிற்பதிலும், சைவத்தை நிலை நிறுத்துவதிலும், வெற்றிகள் கண்டார்.

'வாசி தீரவே காசு நல்குவீர்' எனப் படிக்காசு பெற்றுப் பஞ்சம் போக்கினார். இப்பணியில் முதுமையும் இளமையும் சேர்ந்து உழைத்தன. முதியவரான நாவுக்கரசரும் இளையவரான சம்பந்தரும் இணைந்து சமயப் பணியாற்றுகின்றனர். சமூகப் பணியாக ஆற்றுகின்றனர். சம்பந்தரது சிவிகையை நாவுக்கரசர் தூக்கிச் சென்றமை முதுமை, இளமைக்கு வழங்கிய அங்கீகாரத்தின் சின்னமாக விளங்குகின்றது.

நாட்டில் இடர் நேரும்போது சமயவாழ்வு என்பது முக்கியமாகச் சமூகப் பணியாகவே

**ச.லலீசன்**

அமையவேண்டும் என்பதும், அதில் இளையோரும் முதியோரும் இணைந்து பணியாற்றவேண்டும் என்பதும் இங்கு உணர்த்தப்படுகிறது.

சமணரின் வழியில் நின்ற பாண்டிய அரசனாகிய கூன்பாண்டியனின் வெப்பு நோயை நீக்கிச் சைவத்திற்கு மன்னனையும் மக்களையும் வழிப்படுத்துவதிலும், பஞ்சம் போக்கி மக்களை வாழ வைப்பதிலும் சம்பந்தரின் திட்டமிடற்திறன் வெளிப்படுகிறது.

சம்பந்தரின் திருமணத்திற்குச் சென்ற புண்ணியப் பேறு காரணமாக பெற்றோர் யாவரும் சிவசோதியும் கலந்து சிவகதியடைகின்றனர். திருநீலநக்கர், திருமுருகர், திருநீலகண்டயாழ்ப்பாணர் ஆகிய நாயன்மார்களும் வைகாசி மூல நாளில் சிவகதியடைகின்றனர். தன்னுடன் சேர்ந்தாருக்கும் சிவகதிப் பேற்றுக்கான வாய்ப்பினை நல்கும் திருவுள்ளம், பரந்த மனப்பாங்கு சம்பந்தரின் தனித்துவங்களில் ஒன்றாக விளங்குகிறது. சம்பந்தர் காட்டிய சைவவாழ்வியலின் திட்டமிடல் இன்றைய காலத்துடனும் பொருத்திப் பார்க்கத்தக்கது.

# 4 வருடங்களில் நாடு பெற்ற கடன் இரண்டரை லட்சம் கோடி ரூபா!

## ஐ.தே.க. வெளியிடும் தகவல்

கொழும்பு,ஜூன்9

இலங்கை அரசு 2005 ஆம் ஆண்டு முதல் இப்போதுவரை 2 லட்சத்து 51 ஆயிரத்து 300 கோடி ரூபாவைச் சர்வதேச மற்றும் உள்ளூர் கடனாகப் பெற்றுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கேகாலை மாவட்ட எம்.பியான கபீர் காசிம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தற்போது ராஜரட்டை பல்கலைக்கழக வைத்தியபீட மாணவர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். அம்மாணவர்கள் கல்வியைத் தொடரப் போதுமான இடவசதிகள் கூட இல்லை.

தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உடன் தீர்த்துவைக்குமாறு மாணவர்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்தும் கூட எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

உயர்கல்வி அமைச்சும், சுகாதார அமைச்சுமே இப்பிரச்சினைக்கான முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும். இரண்டு அமைச்சுகளும் மிகவும் மந்தமாகவே செயற்படுகின்றன.

சுகாதார அமைச்சின் திறமையின்மை காரணமாக நாட்டில் டெங்குநோய் பரவுவது அதிகரித்துள்ளது. கடந்த 5 மாதங்களில் மாத்திரம் 7 ஆயிரம் பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். நூறுபேர்வரை மரணித்துள்ளனர்.

சுகாதார அமைச்சர் நிமல் ஸ்ரீபால டி சில்வா உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவராக இருந்தால் மட்டும் போதாது. எமது நாட்டு சுகாதாரத்தைப் பேணிப் பாதுகாக்க அவர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த அரசு 2005 ஆம் ஆண்டு முதல் இப்போதுவரை 2 லட்சத்து 51 ஆயிரத்து 300 கோடி ரூபாவைக் கடனாகப் பெற்றுள்ளது. இந்தப் பணத்தை அரசு என்ன செய்தது? 117 அமைச்சர்களைக் கவனிப்பதற்காகவா இப்பணம் செலவிடப்பட்டது?

அரசு நாட்டில் உள்ள பிரச்சினைகளை உரிய முறையில் இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு கடனாகப் பெறப்படும் நிதி நல்ல - உரிய - திட்டங்களுக்கே செலவிடப்பட வேண்டும் - என்றார். (சி)

# பகிரங்கமாகக் குரலெழுப்பி வந்தமையே போத்தல தாக்கப்பட்டமைக்கு காரணம்

## இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்9

இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தின் பணிப்பாளர் சபையில் அண்மையில் இணைந்துகொண்டவரும், ஊடக சுதந்திரத்திற்காகவும் ஊடகவியலாளர்களின் உரிமைகளுக்காகவும் குரல் எழுப்பி வரும் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளருமான போத்தல ஜயந்த கடந்த திங்கட்கிழமை தாக்கப்பட்டமை குறித்து இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம் அதிர்ச்சியையும் கவலையையும் தெரிவித்துள்ளது.

இது குறித்துப் பத்திரிகை ஸ்தாபனம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இத்தாக்குதலுக்கு அவரது தனிப்பட்ட வாழ்க்கை எந்தவிதத்திலும் சம்மந்தப்பட்டிருக்கமுடியாது. ஏனெனில் அவர் பகிரங்கமாக ஊடகங்கள் தொடர்பாக பல்வேறு விடயங்கள் குறித்தும் கருத்து வெளியிட்டு வருவதும் குரல் எழுப்புவதுமே இத்தாக்குதலுக்கு ஒரே காரணமாக இருக்கலாம் என்று கருத முடிகின்றது.

லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஊழியரான போத்தல ஜயந்த மீதான தாக்குதல் குறித்து ஊடக அமைச்சர் லக்ஷ்மன் யாபா அபேவர்த்தன செய்தியாளர் மாநாட்டின்போது கண்டிப்பதாகக் கூறினார். அத்துடன் சில இராணுவ அதிகாரிகள், வர்த்தக பிரமுகர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் விடுதலைப் புலிகளோடு தொடர்பு வைத்திருக்கின்றமை தொடர்பாக புலனாய்வு செய்யப்படுகிறது எனவும், அந்தச் செய்தியாளர் மாநாட்டில் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் அபேவர்த்தன அது தொடர்பான பெயர்களை வெளியிட மறுத்த அதே நேரம் கடந்த 2ஆம் திகதி 'தினமின' பத்திரிகையின் முன்பக்கச் செய்தியில் 50 ஊடகவியலாளர்கள் விடுதலைப்புலிகளுடன் தொடர்பு வைத்திருந்துள்ளனர் எனவும் அவர்களுக்கு தகவல் வழங்கி வந்தனர் எனவும் அதற்காகப் பணம் செலுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் இருப்பதோடு அது தொடர்பாக இரகசியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகைய விடயங்கள் தொடர்பாகப் புலனாய்வு செய்து விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டியது அரசின் பொறுப்பாக இருக்கின்றது.

அதேநேரம் வெள்ளைவானில் வலம் வந்து இவ்வாறான தாக்குதல்களில் ஈடுபடும் நிழல் குழுக்களின் நடவடிக்கையால் பலனடையக்கூடாது. போத்தல ஜயந்த பஸ்ஸில் இருந்து இறக்கப்பட்டு கடத்தப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டு கால் உடைந்த நிலையில் இப்போது வைத்திய சாலையில் சிகிச்சை பெறுகின்றார்.

ஏற்கனவே கீத் நொயார், நாமல் பெரேரா, டி. சிவராம், லசந்த விக்கிரமதுங்க, உபாலி தென்னக்கோன் மற்றும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஐந்து ஊழியர்கள் தொடர்பான விசாரணைகள் போன்று இத்தாக்குதல் தொடர்பான விசாரணைகளும் மர்மமானதாக அமைந்துவிடக்கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பாகும் - என்றுள்ளது. (சி)




இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் வலி.கிழக்கு, கோப்பாய் பிரிவு அலுவலகம் கோப்பாயில், யாழ்.பருத்தித்துறை வீதியில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. நிகழ்வுக்கு வருகைதந்த யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கத்துக்கு உறுப்பினர் எஸ்.சந்திரலிங்கம் மாலை அணிவித்து வரவேற்பதை முதலாவது படத்திலும் - கோப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.மகேந்திரன் உரையாற்றுவதையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ்.வதிவிடப் பிரதிநிதி அஜ்மோ, பிரிவின் தலைவர் [illegible] இரண்டாவது படத்திலும் காணலாம். (படம்: கர்ணன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதியின் மறைவுக்கு தென் கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் பீடாதிபதி அனுதாபம்

கொழும்பு, ஜூன்9

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் எஸ். கிருஷ்ணராஜாவின் மறைவுச் செய்தி எம்மையெல்லாம் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியது. அவரோடு பேராதனைப் பல்கலைக்கழகத் தில் கல்விகற்ற காலங்களில் இணைந்து மேற்கொண்ட கலந்துரையாடல்கள் நிகழ்வுகள், கருத்துப் பரிமாறல்கள், விவாதங்கள் எல்லாம் இன்றும் எமது மனத்திரையில் பசுமையாக ஓடிக்கொண்டிருக்கின்றன. இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜாவின் மறைவையொட்டி வெளியிடப்பட்ட அனுதாப அறிக்கையில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசாரப் பீடத்தின் முன்னாள் பீடாதிபதி கலாநிதி மௌலவி கே.எம்.எச்.காலிதீன் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நான் விரிவுரையாளராகப் பணியாற்றிய காலங்கள் பசுமையானதும் மறக்க முடியாததுமாகும். ஏனைய பேராதனைப் பல்கலைக்கழக நண்பர்களோடு பேராசிரியர் கிருஷ்ணராஜாவும் ஒருவராக எம்முடன் அங்கு பணியாற்றினர். நான் அரபு இஸ்லாமிய பிரிவிலும் அவர் மெய்யியல் பிரிவிலும் கடமையாற்றிய காலங்களில் அவர் எமது துறைசார்ந்த மாணவர்களுக்கு மெய்யியல் பாடங்களில் ஆர்வத்தை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் எமது துறைசார்ந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்குவதிலும் முன்னின்று செயற்பட்டார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உருவானபோது அங்கு நான் கலை,கலாசார பீடாதிபதியாகக் கடமையாற்றிய காலங்களில் இப்பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டங்களை ஒழுங்கு அமைப்பதில் அவரது பங்களிப்புக்கள் மறக்கமுடியாதவை. தென்கிழக்குப் பல்கலைக்கழக மெய்யியற்துறைப் பிரிவின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும் ஆசிரியர்களின் முன்னேற்றத்துக்கும் அவர் மனமுவந்து ஆற்றிய பணிகள் மிகப் பெறுமதியானவை.

அவரது மறைவால் ஆறாத்துயரில் ஆழ்ந்துள்ள குடும்பத்தினருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நண்பர்களுக்கும் எமது சோகத்தையும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# முசலியில் மீள் குடியேற்றம்

கொழும்பு, ஜூன் 9

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின்கீழ் முசலி பிராந்தியத்திற்கான இரண்டாம் கட்ட மீள் குடியேற்ற நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை வடக்கு அபிவிருத்தி செயலணித் தலைவர் பஸில் ராஜபக்ஷவின் தலைமையில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முசலி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட அரிப்பு, சிலாபத்துறைப் பகுதிகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 216 பேர் உள்ளடங்கிய 515 குடும்பங்கள் மீள் குடியேற்றப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் மீள் குடியேற்ற அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் கலந்து கொள்ளவுள்ளார். அதேவேளை, அரச திணைக்களங்களின் தலைவர்கள், இராணுவ, பொலிஸ், கடற்படை உயரதிகாரிகளும் இதில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(சி)

## வெள்ளவாய்க்கால் புனரமைப்பு

ஆனைக்கோட்டை, ஜூன் 09

மாகியப்பிட்டியில் அமைந்துள்ள நொங்குருத்தை வெள்ளவாய்க்கால் மாகியப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் மூலமாக புனரமைக்கப்பட்டு வருவதாக அபிவிருத்திச் சங்க பொருளாளர் ஐ.மார்க்கண்டன் தெரிவித்தார்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதி உதவியுடன் பண்டத்தரிப்பு உப அலுவலக மேற்பார்வையின் கீழ் இவ்வாய்க்கால் புனரமைக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். (203-20)

# யாழ். - பண்ணை வீதியை அகலமாக்கி புனரமைப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ். - பண்ணை வீதியை அகலமாக்கிப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உயர் அதிகாரி ஒருவர் மேற்கண்ட தகவலைக் கூறினார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இந்த வீதி அகலமாக்கிப் புனரமைக்கப்படவுள்ளது.

பண்ணை வீதியின் குறிப்பிட்ட பகுதியே இவ்வாறு அகலமாக்கிப் புனரமைப்பதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போதிய வசதி இன்றி திருத்தப்படாது உள்ள இந்த வீதியை அகலமாக்கி புனரமைப்பதன் மூலம் மக்கள் தமது போக்குவரத்தை சிரமம் இன்றி மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (203-224)

## கேக் கண்காட்சி

''யோகி'' அழகுக்கலை நிறுவனத்தின் 'கேக்' மாச்சீனி மலர் அலங்காரக் கண்காட்சி 'யாழ்.பெற்றா எசன்ஸ் சப்ளையர்ஸ்' ஆதரவில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 8மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் திங்கட்கிழமை வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

மேற்படி கண்காட்சி இல.75, அம்மன் வீதி, நல்லூரில் அமைந்துள்ள ''யோகி'' அழகுக்கலை நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது. இக்கண்காட்சியை யாழ். மாவட்ட அரச அதிபர் க. கணேஷ் ஆரம்பித்து வைக்கவுள்ளார். (201)


## கொடிக்கம்பம் நடும் விழா



யாழ்ப்பாணம்
வண்ணார்பண்ணை
அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி
அம்மன் ஆலயத்தில்
எதிர்வரும் 13.06.2009
சனிக்கிழமை அன்று
ஆரம்பமாகவுள்ள
மஹோற்சவத்தை முன்னிட்டு
நாளை (10.06.2009) புதன்கிழமை முற்பகல்
10 மணியளவில் அம்பாளுக்கு விசேட
அபிஷேகம் இடம்பெற்று அதனைத்
தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு புதிதாக
அமைக்கப்பட்ட கொடிக்கம்பம் நடும்
வைபவம் நடைபெறவுள்ளது.

கொடியேற்ற திருவிழா உபயகாரர்.



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## விவசாய பீடம்
## விரிவுரைகள் ஆரம்பம்

2007/2008 ஆம் கல்வியாண்டு விவசாயபீட முதலாம், இரண்டாம் வருட மாணவர்களுக்கான இரண்டாம் அரையாண்டு விரிவுரைகளும், மூன்றாம், நான்காம் வருட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டு விரிவுரைகளும் எதிர்வரும் 22.06.2009 (திங்கட்கிழமை) ஆரம்பமாகின்றன என்பதனை அறியத் தருகின்றேன்.

பதிவாளர்
08.06.2009 (சி/558915)


# வாசகர் திருமுகம்

## வீடுகளை இழந்து நிற்கும் வளலாய் மக்களுக்கு வீட்டுத்திட்டம் எப்போது?

1990 ம் ஆண்டளவில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளில் வளலாய் கிராமத்தின் 99 சதவீதமான வீடுகள் அனைத்தும் தரை மட்டமாக்கப்பட்டு விட்டன.

இடப்பெயர்வின் பின் 1998 ம் ஆண்டளவில் கிராமத்திற்குத் திரும்பிய மக்கள் குடிசைகளை அமைத்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். வளலாய்க் கிராமத்தில் ஏற்பட்டதைப் போன்ற பேரழிவு வேறெங்கும் ஏற்படவில்லை எனலாம்.

வீடுகள் அழிவுக்குள்ளாக்கப்படாத ஏராளமான கிராமங்களில் உதவி வழங்கும் நிறுவனங்களின் ஆதரவுடன் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டு ஏராளமான மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு நிம்மதியாக வாழ்கின்றனர்.

ஆனால் வளலாய் கிராமத்திற்கென ஒதுக்கப்பட்ட இரண்டொரு வீட்டுத் திட்டங்கள் கூடச் சிலரின் வேண்டாத கடிதங்களினால் அமுல்படுத்தப்படாமல் பிற்போடப்பட்டு விட்டன. இதனால் வீடுகள் அழிவுக்குள்ளாக்கப்பட்ட பெரும்பாலான மக்கள் பெரும் இன்னல்களுக்குள்ளாகி வருகின்றனர்.

பல லட்சம் பெறுமதியான வீடுகளை இழந்த அநேகமான குடும்பத்தினர் அயல் கிராமங்களில் அநியாயமான வாடகை வீடுகளில் குடியிருந்து பெரும் பொருளாதார நஷ்டங்களுக்கும், இன்னல்களுக்கும் உள்ளாகின்றனர்.

600 மீற்றர் பாதுகாப்பு வலயம் என்ற காரணத்தைக் காட்டி போர் நிறுத்தம் ஏற்பட்ட 2002ஆம் ஆண்டுக்குப் பின் அயல் கிராமங்களில் வாடகை வீடுகளில் வசிக்கும் வளலாய்க் கிராம மக்கள் தங்களுடைய சொந்தக் கிராமத்துக்கு திரும்பி வந்து வீடு கட்டிக் கொண்டு குடியேறவும் இராணுவத்தினர் அனுமதி அளிக்காத காரணத்தினால் அவர்களுடைய காணி முழுவதும் காடாக மாறுவதுடன் பெரும் இன்னல்களுக்கும் பொருளாதாரக் கஷ்டத்திற்கும் உள்ளாகின்றனர்.

பெரும் அழிவுக்குள்ளான வளலாய்க்கிராம மக்களுக்கு வீட்டுத்திட்டங்களை வழங்கி அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய கிராம அலுவலரும், பிரதேச செயலரும், மாவட்ட அரச அதிபரும் விசமிகளின் கடிதங்களைப் பொருட்படுத்தாது மக்களின் வீடில்லாப் பிரச்சினையை உடன் நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இருபது வருடங்களுக்கு மேலாக இன்னலுறும் வளலாய் வாழ் மக்களின் துயர் தீரும் நாள் எந்நாளோ!

வளலாய், அச்சுவேலி. வே.சின்னத்துரை

## சமுர்த்தி நிவாரணமும் தனியார் கடைகளும்

பொது மக்களுக்கு சமுர்த்தி நிவாரணம் சீராகவும் ஒழுங்காகவும் கிடைப்பதனை உறுதி செய்யும் நோக்கில் தனியார் வர்த்தகர்களை முகர்வர்களாக நியமிக்க சமுர்த்தி அதிகார சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்ற செய்தி 23.05.2009 உதயனில் வெளியாகியது. அதிகார சபை மேற்கொண்ட நடவடிக்கைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆனால் தனியார் வர்த்தகர்களை முகவர்களாக நியமிப்பதில் பொது மக்களுக்கே சிரமம். அதாவது தனியார் வர்த்தக நிலையங்களிலே அதிக வியாபாரம் நடைபெறும் வேளையில் வரும் சமுர்த்திப் பயனாளிகள் பொருள்களைப் பெறுவதற்கு காத்திருக்க வேண்டியநிலை ஏற்படும். அவ்வாறு காத்திருக்காது பயனாளிகளுக்கு உடனே பொருட்களை வழங்குமாறு பணித்திருந்தாலும் அவர்களது தனிப்பட்ட வியாபாரம் பாதிக்கப்படலாம். இதனால் தனியார் வர்த்தகர்களுக்கும் சமுர்த்திப் பயனாளிகளுக்கும் கசப்புணர்வு ஏற்படலாம். சிலர், பல நோக்கு கூட்டுறவுக் கிளைகளிலேயே சமுர்த்தி நிவாரணத்தின் போது பிரத்தியேக வியாபாரங்களில் ஈடுபடுவதிலேயே அக்கறை செலுத்துகின்றனர். இவர்களே இவ்வாறானால் தனியார் வர்த்தகர்கள்?

எனவே தனியார் வர்த்தக நிலையங்களிற்கு இத்தகைய பொறுப்பை வழங்காது சமுர்த்திப் பயனாளிகள் விரும்பிய நேரத்தில் பொருள்களைப் பெற்றுக்கொள்ளும்படியாக விநியோகிக்கும் காலவரையறையை நீடித்து பல நோ.கூட்டுறவு சங்க கிளைகளை சிறந்த முறையில் இயங்க வைப்பதன் மூலமே இப்பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என எண்ணுகிறேன்.

எனவே பல நோக்குக் கூட்டுறவு கிளைகள் சிறந்த முறையில் இந் நிவாரணத்தை முன்னெடுக்க பிரதேச செயலர்களூடாக அதிகாரசபை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

[illegible] சமுர்த்தி சங்க தலைவர்
[illegible]. ச.கஜேந்திரா


## சபிண்டீகரண நிகழ்வு



நிஜமாக 20 * 07 * 1930
நினைவாக 14 * 05 * 2009

அமரர் சுப்பிரமணியம் திருஞானசம்பந்தர்

அன்புருவாய்! எம் குருவாய்!
அனைவர்க்கும் நன் மொழியாய்
எம் தலைவ! இன்நெறம்
இதயத்து ஒளி இறைவ!
நன்னெறி செய் கல்வி
நலம் சேர் துறைகளில் - உம்
சந்ததிகள் வாழச்
சகலமுமாகி நின்றீர்!
நன்றியொடு நாளும் - உங்கள்
நாமம் நிலைபெற - எம்
அப்பா! நாம் வாழ்வோம் - உம்
ஆத்மா சாந்திபெற!

அப்பையா லேன், கேணியடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
(சி/558912)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
நற்சிந்தனை
"கல்விக்காக எதையும் தியாகம் செய் எதற்காகவும் கல்வியைத் தியாகம் செய்யாதே!"

க.பொ.த.உயர்தர
கல்விச்சுடர்
16
Special Guidance For A/L 2009&2010



க. பொ.த உயர்தர மாணவர்களுக்கென தனியாக வெளிவரும்
கல்வி இணைப்பிதழ்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஓகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

மாகாணக் கல்வித்திணைக்களமும், கொழும்பு தமிழ்ச்சங்கமும் இணைந்து வழங்கும் மாதிரி வினாத்தாள்

## வணிகக்கல்வி - 01

நேரம்: 1 மணித்தியாலம்

### பகுதி-1

* பகுதி 1இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இவ்வினாப்பத்திரத்திலேயே விடைகள் எழுதப் படல் வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் உரிய புள்ளி 01 ஆகும்.

01. பின்வரும் காரணங்களுள் எதற்காக இலங்கைக்கு முயற்சியாண்மை முக்கியமானதொன்றாக அமைகின்றது?
   1) புதிய வணிகங்களை ஆரம்பிப்பதற்கு.
   2) முன்னர் உள்ள வணிகங்களை விரிவுபடுத்துவதற்கு.
   3) முகாமைத் திறனை மேம்படுத்துவதற்கு.
   4) ஏற்றுமதியை நோக்காகக்கொண்ட கைத்தொழில்களைத் தோற்றுவிப்பதற்கு
   5) ஊழிய செறிவுடைய கைத்தொழில்களைத் தோற்றுவிப்பதற்கு.

02. முயற்சியாண்மையாளரொருவர் ஒரு முகாமையாளரிடமிருந்து வேறுபட்டு காணப்படும் விடயம் யாதெனில்,
   1) வியாபாரத் தீர்மானங்களை எடுத்தலில்.
   2) வியாபார அபாயங்களை பொறுப்பேற்பதில்.
   3) திட்டமிடலில் ஈடுபடுவதில்.
   4) மேற்பார்வை வழங்குவதில்.
   5) தலைமைத்துவத்தை வழங்குவதில்.

நன்றி: மாகாணக் கல்வித்திணைக்களம், கொழும்பு தமிழ்ச்சங்கம்

03. சிறிய நடுத்தர அளவு நிறுவனங்களை இனம் காணும் பிரமாணங்களாக அமையாதது,
   1) நாடுகள் சார்ந்த பிரமாணங்கள்.
   2) நிறுவனங்கள் சார்ந்த பிரமாணங்கள்.
   3) சர்வதேச ரீதியான பொதுவான பிரமாணங்கள்.
   4) அளவு சார்ந்த பிரமாணங்கள்.
   5) பண்பு சார்ந்த பிரமாணங்கள்.

04. முகாமையில் பன்முகப்படுத்தல் என்பதன் கருத்து,
   1) நிறுவன அமைப்பில் பல பிரிவுகள் காணப்படல்.
   2) வெவ்வேறு திணைக்களங்களின் கீழ் வியாபார நடவடிக்கைகளை வைத்திருத்தல்.
   3) வெவ்வேறு முகாமை மட்டங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட விடயம் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை வைத்திருத்தல்.
   4) உயர் முகாமையோடு தீர்மானம் எடுத்தலின் மத்திய மயப்பட்ட அதிகாரத்தை வைத்திருத்தல்.
   5) பல்வேறு தொழிற்பாடுகள், நடவடிக்கைகளின் ஓர் ஒன்றிணைப்பை வைத்திருத்தல்.

05. பின்வருவனவற்றுள் எது திட்டமிடலின் ஒரு தொழிற்பாடு அன்று,
   1) சூழ்நிலைப் பகுப்பாய்வின் மூலம் வாய்ப்புக்களை இனம் காண்பது.
   2) இலக்குகளையும் நோக்கங்களையும் உருவாக்குவது.
   3) திணைக்களங்களை உருவாக்குவது.
   4) மாற்றுவழிகளை இனம் காண்பதும் மதிப்பீடு செய்வதும்.
   5) திட்டங்களை நடைமுறைப்படுத்துவது.

06. கட்டுப்படுத்தலின் நோக்கம்,
   1) விலகல்களை இனங்கண்டு இலாபகரத்தன்மையை உறுதிப்படுத்தல்.
   2) வீண்விரயங்களை இனங்கண்டு ஊழியர்களுக்கு மீள் பயிற்சியளித்தல்.
   3) விலகல்களை இனங்கண்டு செயற்பாடுகளை மீளத்திட்டமிடல்.
   4) திட்டங்கள் பெறுபேறுகளுடன் இணங்கியமைவதை உறுதிப்படுத்தல்.
   5) பெறுபேறுகள் திட்டங்களுடன் இணங்கியமைவதை உறுதிப்படுத்தல்.

07. பொருளொன்றின் விற்பனையானது தொடர்ச்சியாக குறைவடையுமானால் இச்சந்தர்ப்பத்தில் மிகவும் புத்திசாலித்தனமான சந்தைப்படுத்தல் அணுகு முறையானது,
   1) தொடர்ந்தும் இப்பொருளை உற்பத்தி செய்யும் அதேவேளை விளம்பரத்தையும் விற்பனைப் பிரதிநிதிகளையும் அதிகளவு மேம்படுத்தல்.
   2) புதியவகை பொருளை உற்பத்தி செய்து பழைய பொருளை சந்தையில் இருந்து நீக்குதல்.
   3) விற்பனையாளர்களுக்கு புதிய ஊக்குவிப்புக்களை அறிமுகம் செய்தல்.
   4) நுகர்வோருக்கு உண்மையில் என்ன தேவை என்பதைக் கண்டறிந்து அதன்படி செயற்படல்.
   5) விற்பனை அளவை அதிகரிப்பதற்காக விலையைக் குறைத்தல்.

08. நிதிச்சந்தையில் காணப்படும் பிரிவு,
   1) பணச்சந்தை.  2) மூலதன சந்தை.
   3) முதலாந்தர சந்தை.  4) இரண்டாந்தரச் சந்தை.
   5) மேலே கூறப்பட்ட அனைத்தும்.

09. ஒரு கம்பனியின் தொழிற்பாடு மூலதனத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாத காரணி,
   1) காசுக்கு விற்பனை.
   2) கடன் விற்பனை.
   3) பங்குச்சந்தையில் கம்பனியின் பங்குகளுக்கான விலை அதிகரிப்பு.
   4) பங்குதாரர்களுக்குப் பங்குலாபம் செலுத்துதல்.
   5) நிலையான சொத்தொன்றைக் கொள்வனவு செய்தல்.

10. மாற்று நிதி மூலம் ஒன்றைத் தெரிவு செய்யும் பொழுது கருத்திற் கொள்ளப்படும் காரணி அல்லாதது,
   1) கிரயம்.  2) முகாமை.  3) இடரின் தன்மை.
   4) நிபந்தனை.  5) நோக்கம்.

11. நிறுவனமொன்றில் சகல மட்டத்திலுமுள்ள முகாமையாளர்களுக்கு இருக்க வேண்டிய முக் கியத்துவம் வாய்ந்த திறன்,
   1) எண்ணக்கரு திறன்.  2) மனித வளத்தொடர்பு சார்ந்த திறன்
   3) தொழில் நுட்ப திறன்.  4) கணக்கீட்டுத் திறன்.
   5) பகுத்தாராயும் திறன்.

12. பொருள் ஒன்றின் வாழ்க்கை வட்டத்தில் பொருள் பற்றிய எண்ணத்தை உருவாக்கும் கட்டம்,
   1) அபிவிருத்திக்கட்டம்.  2) அறிமுகக்கட்டம்.
   3) வளர்ச்சிக்கட்டம்.  4) முதிர்ச்சிக்கட்டம்.
   5) வீழ்ச்சிக்கட்டம்.

13. உற்பத்தியின் ஐந்து மட்டங்களைக் காண முடியும் வாடிக்கையாளரைக் கவர்ந்தெடுப்பதற்குத் தேவையான அதிகுறைந்த உற்பத்தி மட்டம்,
   1) எதிர்பார்க்கப்படும் உற்பத்திப் பொருள் (Expected Product)
   2) அடிப்படை உற்பத்திப் பொருள் (Basic Product)
   3) மைய உற்பத்திப் பொருள் (Cone Product)
   4) சாத்தியமான உற்பத்திப் பொருள் (Potential Product)
   5) மேம்படுத்தப்பட்ட உற்பத்தி பொருள் (Augmented Produed)

14. கட்டுப்பாட்டின் விசாலம் அகன்று காணப்படும் பொழுது காணப்படும் அனுகூலங்களில் ஒன்று,
   1) கிட்டிய மேற்பார்வை.
   2) கட்டுப்பாட்டுக்கான கிரயம் குறைவு.
   3) பயிற்சி வழங்குதல் இலகு.
   4) ஊழியர்களை கட்டுப்படுத்ணதல் இலகு.
   5) ஊழியர்களை வழிநடத்தல் இலகு.

* * * இவ்வார இணைப்பிதழில்...
* வணிகக்கல்வி வினாத்தாள் 01 இன் பகுதி 1 (கொ.தமிழ்ச்சங்கம்) ...
* உயிரியல் வினாத்தாள் 01இன் பகுதி 1 இன் தொடர்ச்சி (கொ.தமிழ்ச்சங்கம்) ...
* கணக்கீடு - 02 இன் பகுதி - 11 (கொ.தமிழ்ச்சங்கம்)...
* பௌதிகவியல் 01 இன் வினாத்தாளின் தொடர்ச்சி (கொ.தமிழ்ச்சங்கம்)
* பொருளியல் 02 இன் பகுதி-11 வினாத்தாள் (கொ.தமிழ்ச்சங்கம்)

15. உற்பத்தி கருமமாக கருதப்படாதது,
   1) பொருள் கொள்வனவு.  2) பொருள் விற்பனை.
   3) உற்பத்தி திட்டம்.  4) உற்பத்தி கட்டுப்பாடு.
   5) ஆராய்ச்சி அபிவிருத்தி.

16. உற்பத்தி தொடர்ச்சியாக இடம்பெறுவதுடன் இயந்திர முறை உற்பத்திக்கமைய பேரளவில் பயன்படுத்தலை அழைக்கப்படும் முறை,
   1) வேலை உற்பத்தி.  2) தொகுதி உற்பத்தி
   3) பாய்ச்சல் உற்பத்தி.  4) செய்முறை உற்பத்தி.
   5) பேரளவு உற்பத்தி.

17. Henru Mintzrberg ஆய்வின்படி முகாமையாளர் நிறைவேற்ற வேண்டிய கருமங்களில் ஒன்றான தனிப்பட்டவர்களுக்கிடையிலான பணிகளில் (Interpersonal Roles) ஒன்றாக அமையாதது,
   1) பேச்சாளராக செயலாற்றுதல் (Spokes Person)
   2) தகவல் பரிமாற்றுபவர் (Disseminator)
   3) பேரம் பேசுபவர் (Neegoliator)
   4) தலைவராக கருமமாற்றல் (Leader)
   5) முன்னோடி (Monitor)

18. ஒரு நிறுவனத்தின் கொள்வனவு பகுதி பொருளாதார கட்டளை கணியத்தை கணிப்பதன் நோக்கம்,
   1) கணினி மயப்படுத்தப்பட்ட அறிக்கையை தயாரிப்பதற்கு.
   2) பொருள்களுக்கான மொத்த கேள்வியை தீர்மானிப்பதற்கு.
   3) களஞ்சியப்படுத்தல் செலவை குறைப்பதற்கு.
   4) கையிருப்பு கிரயத்தை குறைக்க.
   5) கட்டளை செலவை குறைப்பதற்கு.

19. வேலைக்கான ஒப்பந்தம் ஒன்றில் பின்வருவனவற்றுள் எது உள்ளடக்கப்பட மாட்டாது,
   1) பதவி பெயர்.  2) நியமன திகதி.  3) வேலை நேரம்.
   4) வரி செலுத்தப்படவேண்டிய சம்பளம்.  5) தகுதி காண்காலம்.

20. ஒரு நிறுவனத்தின் உற்பத்தி பொருட்கள், சேவைகள் நியம தரத்திற்கு அமைய காணப்படு கின்றது என்பதை வெளிப்படுத்துவது,
   1) வாடிக்கையாளர் சேவை.  2) தர உறுதி.
   3) பொருள் பரிசோதனை.  4) செயற்பாட்டுக் கட்டுப்பாடு.
   5) முகாமை கட்டுப்பாடு.

* இல. 21-30 வரையான வினாக்களுக்கு பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்புக.

21. தமது பொருட்களை போட்டி பொருட்களிலிருந்து வேறுபடுத்துவதற்கு பயன்படுத்தப்படும் சின்னம் அல்லது அடையாளம் ............................................ ஆகும்.

22. ஓய்வூதியம் பெறுவோருக்கு பணிக்கொடைக்குப் பதிலாக வழங்கப்படுவது .............................................. ஆகும்.

23. மரபுரிமைத்திட்டம் ஒரு ............................................ மூலமாகும்.

24. முயற்சியாண்மைச் செயற்பாட்டின் பிரதான படிமுறைகள்

[          ] → [செயற்பாட்டுக்கு அவசியமான பின்னணி] →
[செயற்படுத்] → [          ]

25. வணிக நிறுவனமொன்றின் பணிகளுக்கும் பதவிகளுக்கும் இடையில் ஒழுங்கு முறையான தொடர்பைக் காட்டுவது ............................................ மூலமாகும்.

26. குறித்த ஒரு நுகர்வோன் பொருளின் வியாபார பெயர் கூறிக்கேட்டல், வியாபார பெயருக்கு கூடுதலான அக்கறை காட்டுதல், வியாபாரப் பெயரை இனங்காணல் என்பன .............................................. எனக் கருதப்படும்.

27. வயதமைப்பு, பால், வருமானம், பிரதேசம் அடிப்படையில் சந்தையை வகைப்படுத்தல் ............................................ என அழைக்கப்படும்.

28. விளம்பரத்தின் நோக்கம் ............................................, ............................................, ............................................ என்பன ஆகும்.

29. வணிகம் உடமையாக்கிக்கொள்ள வேண்டிய நடைமுறை சொத்துக்கள், நிலையான சொத்துக் கள் தொடர்பான தீர்மானம் ............................................ என அழைக்கப்படும்.

30. விற்பனை, விற்பனைக் கிரயம், ஊழியர் சம்பளம் என்பன வணிக திட்டத்தின் .............................................. பிரிவுக்குரியதாகும்.

* இல. 31-40 வரையான வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடைகளை தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.

31. குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஊழியர் உள்ளீட்டுக்கும் வெளியீட்டுக்கும் இடையிலுள்ள தொடர்பு அழைக்கப்படும் முறை யாது?
32. ஊழியர்கள் தமது கருமங்களை சுதந்திரமாக நிறைவேற்றுவதற்கு துணைபுரியும் தலைவரை எவ்வாறு அழைக்கலாம்?
33. திட்டமிடல் செயற்பாட்டின் பிரதான மூன்று கருமங்களை குறிப்பிடுக.
34. ஒரு தொகுதி சரக்கிருப்பு பயன்படுத்த தொடங்கியதிலிருந்து இழிவு மட்டம் வரையுள்ள காலப் பகுதியினை எவ்வாறு அழைக்கலாம்?
35. பொருட் சந்தைப்படுத்தல் கலவையிலிருந்து சேவை சந்தைப்படுத்தல் கலவையில் காணப் படும் மேலதிக மூன்று "P"யை குறிப்பிடுக.
36. பல்வகையான சொத்துக்களில் முதலீடு செய்யப்படும் சேர்க்கை அழைக்கப்படும் முறை யாது?
37. கடன்பட்டோருடன் தொடர்புடைய இரு முக்கிய செயற்பாட்டு விகிதங்களை குறிப்பிடுக.
38. சமப்பாட்டு புள்ளி வருமானத்தை கணிப்பிடுவதற்கும் தேவைப்படும் முக்கிய தகவல் இரண்டு எவை?
39. ஊழியர் பொதியளவு வேலையின்மையில் வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்படுதல் அழைக்கப்படும் முறை யாது?
40. [illegible], நிதி சமூக ஏற்பு என்பன பற்றிய ஆய்வினை எவ்வாறு அழைக்கலாம்?

-நிறைவுபெற்றது-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஓகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August
மாகாணக் கல்வித்திணைக்களமும் கொழும்பு தமிழ்ச்சங்கமும் இணைந்து வழங்கும் மாதிரி வினாத்தாள்

# உயிரியல் - 01

நேரம்: 1 மணித்தியாலம்

கடந்தவாரத் தொடர்ச்சி (02.06.09)...

## பகுதி - 1

* 31-32 வினாக்கள் பின்வருவனவற்றை அடிப்படையாக கொண்டவை. சோளத்தில் பச்சை நாற்றுக்கள், மஞ்சள் நாற்றுக்கள் ஆட்சியுடையது. மாப்பொருள் வித்து வெல்ல வித்துக்கு ஆட்சியுடையது. மாப்பொருள் வித்துக்களையும் மஞ்சள் நாற்றுக்களையும் கொண்ட தூய விருத்தி செய்கின்ற தாவரம் வெல்ல வித்துக்களையும் பச்சை நாற்றுக்களையும் உடைய தூய விருத்தி செய்யும் தாவரத்துடன் கலக்கப்பட்டு $F_1$ பெறப்பட்டது.

31. $F_1$ தாவரங்கள் மாப்பொருளுடைய வித்துக்களையும் மஞ்சள் நாற்றுக்களையும் கொண்ட பெற்றோர் தாவரத்துடன் கலப்பினஞ் செய்து பெறப்பட்ட 200 தோன்றல்கள் பகுக்கப் பட்டது. இரண்டு இயல்புகளும் தன்வயத்தமாகாத தனியாக்கப் படுகின்றதெனின் பெறப்படும் தோன்றல்கள்

| | மா . ப | மா . ம | வெ . ப | வெ . ம |
|---|---|---|---|---|
| 1) | 48 | 52 | 51 | 49 |
| 2) | 110 | 38 | 40 | 12 |
| 3) | 108 | 00 | 00 | 92 |
| 4) | 74 | 26 | 25 | 75 |
| 5) | 104 | 96 | 00 | 00 |

32. இரு இயல்புகளும் முற்றாக இணைந்தது என்று கொண்டால் $F_1$ தாவரத்திற்கும் வெல்ல முடைய வித்துக்களையும் மஞ்சள் நிற நூற்றுக்களையும் கொண்ட தாவரத்திற்கும் இடையேயுள்ள கலப்பில் பகுக்கப்பட்ட 200 தோன்றல்களின் பரம்பல்,

| | மா . ப | மா . ம | வெ . ப | வெ . ம |
|---|---|---|---|---|
| 1) | 200 | 00 | 00 | 00 |
| 2) | 00 | 104 | 96 | 00 |
| 3) | 108 | 92 | 00 | 00 |
| 4) | 00 | 00 | 100 | 100 |
| 5) | 48 | 52 | 49 | 51 |

33. Klinefilters Syndrome என்பது,
1) பெண்ணில் இலிங்க நிறமூர்த்தத்தில் x நிறமூர்த்தம் தவறுதல்.
2) பெண்ணில் இலிங்க நிறமூர்த்தத்தில் x நிறமூர்த்தம் மேலதிகமாதல்.
3) ஆணில் இலிங்க நிறமூர்த்தத்தில் x நிறமூர்த்தம் தவறுதல்.
4) ஆணில் இலிங்க நிறமூர்த்தத்தில் x நிறமூர்த்தம் மேலதிகமாதல்.
5) ஆணில் தன்னிறமூர்த்தம் மேலதிகமாதல்.

34. நிறமூர்த்தங்கள் மென்டலால் கண்டு பிடிக்கப்பட்ட பிறப்புரிமையியற் காரணிகள் போல் நடந்து கொள்கின்றது என்பது,
1) தனிப்படுத்துகை விதி. 2) தன்வயத் தொகுப்பு விதி.
3) தலைமுறையுரிமை நிறமூர்த்த கொள்கை. 4) கார்டி வேயின்பேக் விதி.
5) விகாரக் கொள்கை.

35. சனத்தொகை அதிகரிப்பின் காரணமாக ஏற்படக்கூடிய சூழலியல் பிரச்சினைகளில் நகரங்களில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையாவது,
1) இயற்கை வளங்களுக்கான கேள்வி அதிகரித்தல்.
2) சூழலின் தரம் குறைந்த ஆரோக்கிய மற்ற சூழல் உருவாதல்.
3) மாசுக்கள் ஒன்று திரளுதலும் அவற்றை அகற்றுவதில் ஏற்படும் பிரச்சினை உச்ச நிலையை அடைதல்.
4) குடிதண்ணீர்த் தட்டுப்பாடு உச்சநிலையை அடைதல்.
5) இரைச்சல் அதிகரித்தல்.


36. மனித செயற்பாடுகளின் விளைவால் சூழலில் விடப்படும் வாயுக்களில் எது ஓசோன் படையில் பாதிப்பை ஏற்படுத்தும்,
1) $CH_4$ 2) $CO_2$ 3) CFC
4) $H_2O(g)$ 5) CO

37. அட்டவணையில் உள்ளத்தில் ABC இன் சரியான ஒழுங்கைத் தருக.

| சமவாயம் | சூழற் பிரச்சினை |
|---|---|
| A - CITES | X - நாட்டு குறுக்காக ஆபத்தான கழிவுகளின் அசைவு. |
| B - பேசல் | Y - ஆபத்தை எதிர்நோக்கும் விலங்கு, தாவர வியாபாரம். |
| C - ரம்சார் | Z - ஈர நிலங்களை அழித்தல். |

1) X, Y, Z 2) Z, Y, X 3) Z, X, Y
4) Y, X, Z 5) X, Z, Y

38.




நன்றி: மாகாணக் கல்வித்திணைக்களம், கொழும்பு தமிழ்ச்சங்கம்

தரப்பட்ட படத்தை சரியாக விவரிப்பது எது,
1) உயிர்த்திணிவுக்கூம்பகம், முதலாம் நுகரி உண்ணும் விதத்தின் அடிப்படையில் ஆனது.
2) எண் - கூம்பகம் - நுகரிகளின் இனப்பெருக்க வேகத்தின் அடிப்படையில் ஆனது.
3) ஒது சக்திக் கூம்பத்தை சரியாக விளக்குகிறது.
4) தலைகீழ் எண் கூம்பகத்தில் தெள்ளு, புரட்டோசோவா ஒட்டுண்ணியாகும்.
5) ஒரு தலை கீழ் உயிர்த்திணிவு கூம்பகத்தை விளக்குகிறது.

39. நற்போசணையாக்கத்தின் ஒரு விளைவாக கருதமுடியாது,
1) உயிர்ப்பல்லகைமை குறைதல்.
2) உயிர் இரசாயன ஒட்சிசன் தேவை (BOD) அதிகரிக்கும்.
3) நீரின் கலங்கள் தன்மை அதிகரிக்கும்.
4) சயனே பற்றீரியாக்களின் பெருக்கம் ஏற்படும்.
5) காற்றின்றிய பிரிகையாக்கம்.

40. பின்வருவனவற்றில் உயிருள்ள நுண்ணங்கிகளைக் கொண்டிராதது எது?
1) கடல்நீர். 2) ஊற்று நீர். 3) போலியோ வக்சீன்.
4) ஈர்ப்புவலி தொட்சினுரு. 5) பாச்சராக்கிய பால்.

41. அக நஞ்சுப் பொருட்களாக அமையக்கூடியது,
1) Salmonella typhi வின் Lipopoly Saccharide
2) Clostridium tetani இன் Protein
3) Vibrio cholera இன் Protein
4) Corynebacterium deph theriae இன் Portein
5) Pseudomonao aeruginosa இன் Protein

42. இயற்கை நைதரசன் வட்டத்தின் செயற்பாடுகளில் நைதரசன் நாட்டலில் ஈடுபடக்கூடியவை,
1) Nitrobacter உம் Azotobacter உம் 2) Anabaena உம் Pseudomonas உம்
3) Rhizobium உம் Azotobacter உம் 4) Rhizobium உம் Acetobacter உம்
5) Nitrosomonas உம் Acetobcter உம்

43. பொலிமெக்சின் (Polymyxine)
1) பற்றீரியாவின் கலச்சுவர் தொகுப்பின் நிரோதி.
2) பற்றீரியாவின் கலமென்சவ்வு சேதப்படுத்தல்.
3) பங்கசுவின் கலமென்சவ்வு சேதப்படுத்தல்.
4) பங்கசுவின் புரதத்தொகுப்பை நிரோதித்தல்.
5) பற்றீரியாவின் புரதத்தொகுப்பை நிரோதித்தல்.

44. வளர்ப்பு ஊடகம் ஆய்வு கூடத்தில் கிருமியழித்தலுக்கு வழக்கமாக பயன்படும் முறை எது?
1) 10 நிமிடங்களுக்கு ஊதா கடந்த ஒளி பட வைத்தல்.
2) உயர் வெப்பநிலை குறுகிய கால முறை பயன்படுத்தல்.
3) பற்றீரியா வடிகட்டியைப் பயன்படுத்தல்.
4) அமுக்கவடுகலனின் 15 நிமிடங்களில் 121°C வெப்பநிலையில் [illegible]
5) 100°C வெப்பநிலையில் கொதிக்கவைத்தல்.

45. வினாகிரி கைத்தொழில் உற்பத்தியில் பின்வரும் அங்கிகளின் எதனுடைய அனுசேபச் செயற்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன.
1) Acetobacter, Azotobacter 2) Saccharomyces, Lactobacillus
3) Sacchoromyces, Acetobactor 4) Saccharomyces, Azotobacter
5) Lactobacillus, Acetobacter

46. ஒட்டுண்ணி தொடர்பாக சரியான கூற்று எது?
1) Ascaris lumbricoids - மிகப்பெரிய மனித குடல் ஒட்டுண்ணி.
2) Wuchereria bancrofti - கலத்தக ஒட்டுண்ணி.
3) Necator americanus - இடைவிருந்து வழங்கி மூலம் பரவும்.
4) Plasmodium vivax - மூளை மலேரியா மூலம் இறப்பு ஏற்படுத்தும்.
5) Entamoeba histolytica - மனித குடல் கலத்தக ஒட்டுண்ணி.

47. சேதனப்பொஸ்போற்று, சேதன குளோரைட்டிலிருந்து வேறுபடுவது,
1) அவை சூழலில் நிலைபேறாக இருக்கும்.
2) அவை கொழுப்பில் கரையும்.
3) அவை கோலின் எசுத்தரேசை செயலின்மைப்படுத்தும்.
4) அவை உணவுத்தொடரில் செறிவடையும்.
5) அவை நரம்பு நாருறையில் செயற்படும்.

48. இலங்கையில் உள்ள சில தென்னைப் பீடைகளின் பொதுப்பெயரும் அவற்றின் சேத அறிகுறியும் தரப்பட்டுள்ளது.
A - செவ்விள நீள் மூஞ்சி - இளம் இலை உச்சி.
B - தென்னங் கருவண்டு - முடி சரிதல்.
C - தென்னை மயிர்கொட்டி - இளம் இலை சிதறிய சாம்பல் கலந்த கபிலநிறப் பொட்டு
மேற்கூறியதில் சரியானது எவை?
1) A மட்டும். 2) B மட்டும். 3) C மட்டும்.
4) A யும் C யும். 5) A யும் B யும்.

49. பின்வருவன களைகளின் பெயர் தரப்பட்டுள்ளது,
A - Echinochlop sp
B - Cynodon sp
C - Cyperus sp
பின்வரும் இயல்புகளில் சரியான இயல்பை காட்டும் தொடரினைத் தருக.
1) துரித வளர்ச்சி, விதைகள் சிறியவை. வினைத்திறனான பரம்பல்.
2) விதைகள் சிறியவை, வினைத்திறனான பரம்பல், துரித வளர்ச்சி.
3) விதைகள் சிறியவை, துரித வளர்ச்சி, வினைத்திறனான பரம்பல்.
4) வினைத்திறனான பரம்பல், துரித வளர்ச்சி, விதைகள் சிறியன.
5) வினைத்திறளான. பரம்பல், விதைகள் சிறியவை, துரித வளர்ச்சி.

50. ஒரு வகுப்பில் 40 மாணவர்கள் பெற்ற புள்ளிகளில் இடை 45, நியமவிலகல் 12 ஆகும். இப்புள்ளிகளின் செவ்வனாக பரம்பியிருந்தால் 69 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப்பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை அண்ணளவாக,
1) 5 2) 10 3) 15
4) 20 5) 25

* 51 தொடக்கம் 60 வரையுள்ள வினாக்கள் தரப்பட்ட அட்டவணையை அடிப்படையாக கொண்டது.

பொழிப்பாக்கிய பணிப்புரைகள்

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| ABD சரி | ACD சரி | AB சரி | CD சரி | வேறுவிடை |

51. பின்வரும் Taxa க்களில் ஒட்டுண்ணி காணப்படுபவை,
A. Arthropada. B. Echinodermata C. Platyhelminthes
D. Nemotoda E. Chidaria

52. தவறான கூற்றுக்களைத் தெரிந்தெடுக்குக.
A. இயற்கையான தாவர வளர்ச்சிப்பதார்த்தம் MCPA ஆகும்.
B. தாவர அங்குர நுனிகளின் IAA இனது பரம்பரை ஒளித்தாக்க மேற்படுத்தாது.
C. தாவர அசைவுகளின் சீராக்கலில் தாவர வளர்ச்சிப்பதார்த்தம் செல்வாக்கு செலுத்தும்.
D. சைற்றோகைகனின் ஒட்சினுடன் இடைத்தாக்கம் புரிந்து கலப்பிரிவைத்தூண்டும்.
E. எதலீன் பூத்தலை நிரோதிக்கும்.

53. மனித இதயத்தசை தொடர்பாக சரியானவை,
A. அவை வரிகொண்டவை. B. அவை இச்சைக்குரியவை.
C. இவை களைப்படையாது.
D. இவை சந்தத்துக்குரிய நீடித்த சுருக்கம் காட்டும்.
E. அவை பொதுமைக் குழியம் கொண்டவை.

54. மனித கபச்சுரப்பி ஓமோன் தொடர்பாக சரியானவை,
A. GHRIH, PIH என்பவை கபச்சுரப்பியில் தொழிற்படும்.
B. இடைச்சோனை ஓமோன் சுரப்பதில்லை.
C. பிற்சோனை ADH தொகுத்து சேமித்து வெளிவிடும்.
D. GnRH முற்பக்க சோனையில் சுரக்கப்படும்.
E. Oxytocin பிற்பக்க சோனையால் சுரக்கப்படுவதில்லை.

55. வைரசுக்கள் தொடர்பாக பிழையானது எவை?
A. எல்லா வைரசுக்களும் கட்டுப்பட்ட ஒட்டுண்ணியாகும்.
B. எல்லா வைரசுக்களும் RNA மட்டும் கொண்டவையாகும்.
C. எல்லா வைரசுக்கும் விருந்து வழங்கியில் இனம் பெருகும்.
D. எல்லா வைரசுக்கும் அனுசேபத் தொழில் ஆற்றமாட்டாது.
E. பற்றீரியம் விழுங்கி சுயாதீனமாக இனப்பெருக்கம்.

56. மனிதனின் பரிவு நரம்புத்தொகுதி ஏவல் பற்றி பிழையானது,
A. கண்மணியை ஒடுக்குகின்றது.
B. கண்ணீர் உற்பத்தியை தூண்டுகிறது.
C. இதய வடிப்பின் வீதத்தை அதிகரிக்கச் செய்யும்.
D. சுற்றுச்சுருக்கை மந்தமாக்குகின்றது.
E. சுவாசக் குழாயை விரிவாக்கும்.

57. பின்வரும் அங்கிகளில் இரசாயன தற்போசணி எது?
A. Anabaena B. Chlamydomonas C. Nitrobacter
D. Nitrosomonos E. Aspergillus

58. தொழிற்சாலை கழிவு நீர் பரிகரிப்பு பற்றிய பின்வருவனவற்றில் சரியானது எது?
A. முதல் பரிகரிப்பில் எல்லா நுண்ணங்கிகளுக்கும் அளிக்கப்படும்.
B. துணை பரிகரிப்பில் நுண்ணங்கிகளில் செயற்பாடு நடைபெறுவதில்லை.
C. சுறுசுறுப்பான சேற்று முறையில் இயந்திரத்தில் காற்று சேர்க்கப்படும்.
D. சிறு தாரையாக வடிய விடுதலில் பாறைப்படுக்கையில் நீர் விசிறப்படும்.
E. முழுச் செயன் முறையிலும் 25% - 35% சேதனப்பொருள் அகற்றப்படும்.

59. பின்வரும் பீடைகளில் எது Lepidoptera வுக்குரியது,
A. கபிலத்தத்தி. B. தென்னோலை சுரங்கமறுப்பான்.
C. மஞ்சள் தண்டு கோதி. D. தென்னை மயிர்க்கொட்டி.
E. கருவண்டு.

60. விகாரங்கள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானவை,
A. பெரும்பாலான விகாரங்கள் பின்னடைவாக தோற்றம் பெறுகின்றன.
B. DNA இன் நைதரசன் மூலத்தின் மாற்றத்தால் விகாரம் உண்டாகலாம்.
C. விகாரங்களை X கதிர்களால் ஏற்படுத்த முடியாது.
D. கலத்தில் நிறமூர்த்த மொத்த எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றம் விகாரத்தை உண்டு
E. ஒடுக்கற் பிரிவு நிகழ்வால் ஒரு போதும் விகாரம் ஏற்பட முடியாது.

-நிறைவுபெற்றது-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஓகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

மாகாணக் கல்வித்திணைக்களமும் கொழும்பு தமிழ்ச்சங்கமும் இணைந்து வழங்கும் மாதிரி வினாத்தாள்

# கணக்கீடு - 02

நேரம்:2மணித்தியாலம்

பகுதி 2

**முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்குமாக மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடைதருக.**

01. வரையறுக்கப்பட்ட அஜித் கம்பனியின் புத்தகங்களிலிருந்து. 31.12.08 ல் எடுக்கப்பட்ட பரீட்சை மீதி பின்வருமாறு.

| | ரூபா '000' | ரூபா '000' |
|---|---|---|
| விற்பனை | | 10100 |
| 1.1.08 ல் இருப்பு | 310 | |
| காப்புறுதி | 90 | |
| மின்கட்டணம் | 240 | |
| கணக்காய்வுக் கட்டணம் | 100 | |
| உட்திருப்பம் | 80 | |
| கொள்வனவு | 4200 | |
| அ.மு.கடன் | 140 | |
| விளம்பரம் | 380 | |
| இயக்குனர் கட்டணம் | 225 | |
| கடன்பட்டோர் | 140 | |
| வங்கி | 167 | |
| பெ.கழிவு | | 130 |
| நானாவித வருமானம் | | 300 |
| 1.1.08 ல் காணி- கிரயம் | 3600 | |
| கட்டிடம்- கிரயம் | 3200 | |
| விநியோக வான் | 1800 | |
| தளபாடம்- கிரயம் | 1200 | |
| 1.1.08 ல் பெ.தே. ஏற்பாடு | | |
| கட்டிடம் | | 430 |
| வி.வான் | | 340 |
| தளபாடம் | | 280 |
| நன்மதிப்பு | 400 | |
| தொகுதிக்கடன் 15% | | 1200 |
| வருமானவரி 2007 ம் ஆண்டு ஏற்பாடு | | 120 |
| செலுத்தியவருமானவரி | 250 | |
| கடன் கொடுநர் | | 90 |
| கூறப்பட்ட மூலதனம் சா. ப | | 3100 |
| 1.1.08 ல் இ/ந. க/கு மீதி | | 360 |
| பொது ஒதுக்கம் | | 240 |
| தொ. கடன் வட்டி | 120 | |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 200 |
| சம்பளம் (தேறியது) | 138 | |
| இடைக்காலப் பங்கிலாபம் | 110 | |
| | 16890 | 16890 |

மேலதிக விவரங்கள்

1. 31.12.08ல் இருப்பு கிரயத்தில் 400,000 ரூபா. இதன் தேறிய நிகரப்பெறுமதி 350,000 ரூபா ஆகும்.
2. நிதியாண்டின் போது 80,000 கிரயமான பண்டங்கள் வவுனியா நலன்புரி முகாமிற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது இது பற்றிய பதிவு ஏடுகளில் இடம் பெறவில்லை.
3. இயக்குநர் பொது ஒதுக்கத்திற்கு 40,000 ரூபா மாற்றுவதெனவும், இறுதிப்பங்கிலாபம் 5% வழங்குவதெனவும் பிரேரித்துள்ளனர்.
4. பெ.தேய்வு பின்வருமாறு இடப்படவேண்டும்
   கட்டிடம் கிரயத்தில் 5%
   தளபாடம் கிரயத்தில் 10%
   விநியோகவான் 5% குன்றும் நிலுவை முறை
5. 31.12.08ல் முற்பணமும், அட்டுறுவும் பின்வருமாறு

| | முற்பணம் | அட்டுறு |
|---|---|---|
| மின்சாரம் | 50,000 | 40,000 |
| காப்புறுதி | 40,000 | |

6. சம்பளமானது ஊழியர் சேமலாபநிதி பங்களிப்பு 8% த்தினை கழித்து செலுத்திய தொகையாகும்.
7. செலுத்திய வருமானவரியினுள் 2007ம் ஆண்டுக்கான செலுத்திய வரித்தொகை 100,000 ரூபாவை உள்ளடக்கியுள்ளது. இவ்வாண்டு வரி 300,000 ரூபாவாக மதிப்பிடப்பட்டது.
8. 1.1.06ல் 300,000/=க்கு வாங்கிய வநியோக வான் ஒன்று 30.06.08ல் 200,000 விலையிட்டு பகுதி மாற்றாக கொடுத்தும் மீதி காசாகக் கொடுத்ததும் புதிய வான் ஒன்று 500,000 விலையில் வாங்கப்பட்டது. காசாகக் கொடுத்தது தவிர வேறு எப்பதிவும் இடம் பெறவில்லை.

தேவைப்படுவது
1. 31.12.08ல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று
2. 31.12.08ல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமைமாற்றக் கூற்று
3. 31.12.08ல் உள்ளவாறான ஐந்தொகை. (20 புள்ளிகள்)

02. வரையறுத்த பிரபா கம்பனி 2007 January 1ல் பங்கொன்று 15/= வீதம் 50,000 சாதாரண பங்குகளை பொதுமக்களுக்கு பின்வரும் அடிப்படையில் வழங்கியது.
மனு 5 ரூபா
ஒதுக்கல் 7 ரூபா
அழைப்பு 3 ரூபா
70,000 பங்குகளுக்கு ஜனவரி 20ம் திகதி விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. இதில் 10,000 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு மீதி விகிதாசார அடிப்படையில் Feb20ம் திகதிக்கு முன் பணம் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் January 31ல் ஒதுக்கியது.
ஒதுக்கலின் போது 600 பங்குகளுக்கு விண்ணப்பித்த ஒருவர் தவிர ஏனையோரிடம் Feb 20ல் பணம் பெறப்பட்டது. Mar 30க்கு முன் அழைப்புப்பணம் செலுத்த வேண்டுமென்ற அடிப்படையில் Mar1ல் அழைப்பு விடப்பட்டது. ஒதுக்கலில் நிலுவையான பங்குகளும், 200 பங்குகள் ஒதுக்கிய சதாவும் தவிர ஏனையோரிடம் பணம் பெறப்பட்டது.
நிலுவைகள் யாவும் Apirl 15ம் திகதிக்கு முன் 8% வட்டியுடன் செலுத்தப்படல் வேண்டும் எனவும் செலுத்தாதது விடின் Apirl 16ம் திகதி பங்குகள் மீள்விற்பனை செய்யப்படும் என பங்குதாரருக்கு அறிவிக்கப்பட்டது. ஒதுக்கலில் நிலுவையாகவுள்ள பங்குகளுக்குரிய தொகையும் வட்டியும் Apirl 15ல் பெறப்பட்டது.
சதாவின் பங்குகள் 200 ரூபா செலவுடன் பங்கொன்று 15/= வீதம் மீள்விற்பனை செய்யப் பட்டது. சதாவிற்கு செலுத்த வேண்டிய தொகை செலுத்தப்பட்டது.
காசுட்பட நாட்குறிப்பு பதிவுகளைத் தருக. (10 புள்ளிகள்)

03. அ) உற்பத்தி நிறுவனம் ஒன்றின் தரவுகள் பின்வருமாறு
உச்சப்பயன்பாடு 450 உச்ச இருப்பு மட்டம் 3600
இழிவுப் பயன்பாடு 150 மறுகட்டளையிடும் காலம் 3 - 5 மாதம்
வேண்டப்படுவது
1. மறுகட்டளை மட்டம் 2. இழிவு இருப்பு மட்டம்
3. சிக்கன கட்டளையிடும் தொகை. (03 புள்ளிகள்)

ஆ) ரொசான் உற்பத்தி நிறுவனம் ஒன்றின் ஜனவரிமாத குறித்த பொருள் கொள்வனவு வழங்கல் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு

| | | | அலகு | அலகு விலை |
|---|---|---|---|---|
| January 1 | ஆரம்ப இருப்பு | 50 | | 7/= |
| January 4 | கொள்வனவு | | 250 | 8/= |
| January 10 | வழங்கல் | 300 | | - |
| January 15 | கொள்வனவு | | 400 | 9/= |
| January 20 | கொள்வனவு | | 200 | 8/= |
| January 24 | வழங்கல் | 250 | | - |
| January 28 | கொள்வனவு | | 300 | 8/= |
| January 31 | வழங்கல் | 180 | | - |

January 31 ல் இறுதி இருப்பினைக் FIFO , LIFOமுறையில் கணிக்குக. (04 புள்ளிகள்)

இ) நீர் விரும்பிய தரவுகளைக் கொண்டு நான்கு ஊழியர்களுக்கான சம்பளப்பட்டியலைத் தயாரித்து (பெயர், அடிப்படைச்சம்பளம் , O.T, EPF , சம்பள முற்பணம் உள்ளடங்கியிருப்பது அவசியம்) பேரேட்டில் பதிக. (03 புள்ளிகள்)

04. மின்குமிழ்களை உற்பத்தி செய்யும் ராஜா மின்உபகரண கம்பனி A,B எனும் இரு உற்பத்தி திணைக்களத்தினையும், X எனும் சேவைத் திணைக்களத்தையும் கொண்டுள்ளது. 2008ல் December மாத மேந்தலைத் தரவுகள் பின்வருமாறு

| | |
|---|---|
| வாடகை | 16,000 |
| இயந்திரப் பெ.தேய்வு | 9,000 |
| நேரில் கூலி | 180,000 |
| மின்சாரம் | 4,000 |
| இயந்திர திருத்தம் | 18,000 |
| தொழிலாளர் காப்பபுறுதி | 4,000 |
| ஊழியர் நலன்புரி சேவைகள் | 12,000 |

ஏனைய தரவுகள்

| | திணைக்களம் | | |
|---|---|---|---|
| | A | B | X |
| ஊழியர் எண்ணிக்கை | 20 | 20 | 10 |
| இயந்திரம் | 280,000 | 120,000 | 10,000 |
| தளப்பரப்பு சதுரமீற்றர் | 1,000 | 1,400 | 400 |
| இயந்திரம் வேலை செய்த மணி | 3, 000 | 1,200 | - |

தேவைப்படுவது
1. ஒவ்வொரு திணைக்களத்திற்கும் பொருத்தமான அடிப்படையில் மேந்தலையைப் பகிர்க
2. சேவைத்திணைக்கள மேந்தலையை உற்பத்தி திணைக்களங்களுக்கிடையே வேலை செய்தமணி அடிப்படையில் மீள் பங்கீடு செய்க? (06 புள்ளிகள்)

ஆ) Ragul நிறுவனம் ஒன்றின் தரவுகள் பின்வருமாறு

| | |
|---|---|
| விற்பனை | 140,000 ரூபா |
| ஆரம்ப இருப்பு | 12,000 ரூபா |
| கொள்வனவு | 101,000 ரூபா |
| சம்பளம் | 10,000 ரூபா |
| மின்சாரம் | 5,000 ரூபா |
| காகிதாதி | 1,000 ரூபா |
| தொகுதிக்கடன் 5% | 100,000 ரூபா |

விற்பனையில் 25% இலாபமாகும்.

நன்றி: மாகாணக் கல்வித்திணைக்களம், கொழும்பு தமிழ்ச்சங்கம்

பின்வரும் வீதங்களைக் கணிக்குக?
1. தேறிய இலாபம் வீதம் 2. இருப்பு புரள்வு விகிதம்
3. சரக்கிருப்பு சுழற்சிக்காலம் 4. வட்டிக்காப்பு விகிதம்
(04 புள்ளிகள்)

05. KBCபாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கம் வருடாந்த ஒன்றுகூடல் வைபவம் ஒன்றை ஒழுங்கு செய்து அதற்கான வருமானம் கிரயம் என்பவற்றை மதிப்பிட்டது. இச்சங்கமானது 150 பேர் பங்குபற்றுவார்கள் எனவும், ஒரு ரிக்கற் 3000/= எனவும் எதிர்பார்த்தது மாறும் கிரயம் (பங்குபற்றும் ஒருவருக்கு)

| | |
|---|---|
| உணவும் குடிவகை | 1100 |
| சஞ்சிகை | 225 |
| விசேட பரிசு | 775 |

நிலையான கிரயம்

| | |
|---|---|
| மண்டப கட்டணம் | 25,000 |
| இசைக்குழு | 9,000 |
| அச்சிடல் விளம்பரம் | 3,000 |
| மண்டப ஒழுங்குச் செலவு | 2,000 |
| ஒலிபெருக்கி | 1,000 |
| ஏனைய செலவுகள் | 4,000 |

1. பங்குபற்றும் ஒருவருக்கான பங்களிப்பு
2. இலாபநட்டமற்ற புள்ளி (ஆட்களின் எண்ணிக்கை)
3. இலாபநட்டமற்ற புள்ளி (ரூபா)
4. பாதுகாப்பு எல்லை (ஆட்களின் எண்ணிக்கை)
5. 150 பேர் இவ்வைபவத்தில் பங்குபற்றினால் இலாபத்தைக் கணிப்பிடுக.
6. 75 பேர் மட்டும் பங்குபற்றினால் இலாபத்தைக் கணிப்பிடுக. (10 புள்ளிகள்)

06. கலை நிறுவனம் செயற்றிட்டங்கள் A,B ஆகிய இரண்டினை நடைமுறைப் படுத்துகின்றது.
A செயற்றிட்ட கிரயம் 50,000
B செயற்றிட்ட கிரயம் 70,000
நான்கு வருடங்களுக்கான இரு செயற்றிட்டங்களுக்கான வருமானம் பின்வருமாறு

| வருடம் | A | B |
|---|---|---|
| 1 | 20,000 | 20,000 |
| 2 | 25,000 | 25,000 |
| 3 | 20,000 | 20,000 |
| 4 | 10,000 | 15,000 |
| எஞ்சிய பெறுமதி | 5,000 | 4,000 |

தேவைப்படுவது
1. திரும்ப அளித்தல் கால முறையின் கீழ் செயற்றிட்டத்தை மதிப்பிடுக.
2. முதலீட்டுக்கான கழிவுக்காரணி 9% எனின்

| வருடம் | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| | 0.917 | 0.842 | 0.772 | 0.708 |

செயற்றிட்டத்திற்கான தேறிய நிகழ்காலப் பெறுமதிகளை மதிப்பிடுக? (10 புள்ளிகள்)

நிறைவு பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August
மாகாணக் கல்வித்திணைக்களமும் கொழும்பு தமிழ்ச்சங்கமும் இணைந்து வழங்கும்
மாதிரி வினாத்தாள்

## பௌதிகவியல் - 01


கடந்தவாரத்தொடர்ச்சி (26.05.09).....

51. தரப்பட்ட வலை வேலைப்பாட்டில் X, Yஇன் குறுக்கேயுள்ள சமவலுத்தடை,





1) R 2) R/3 3) 4R/3
4) 6R 5) 0

52. படத்திலுள்ளவாறு சுற்றொன்று அமைக்கப்பட்டது. 30,000Ω தட்டையுடைய வோல்ற்றுமானி ஒன்று A, Bஇல் தொடுக்கப்படின் (சமாந்தரமாக) அது காட்டும் வாசிப்பு,




1) 28V 2) 120V 3) 24V
4) 48V 5) 0V

53. கம்பி ஒன்றின் I எதிர் V சிறிப்பியல்பினை மாணவனொருவன் வரைபுபடுத்தினான். அவ் வரைபு வருவாறு அமைந்தது.





A - பிளாற்றினம்
B - காபன்
C - மங்கனன்

கம்பி ஆக்கப்பட்ட திரவியமானது
1) A 2) B 3) C
4) A, C 5) எவையுமன்று.

54. இலத்திரனொன்று 10m ஆரையுடைய வட்டப்பாதையில் நிமிடத்துக்கு $3\times10^{22}$ தரங்கள் எனும் வீதத்தில் சுழலுமெனின் தடத்திலுள்ள மின்னோட்டம் ($e^-$ இன் ஏற்றம் = $1.6\times10^{-19}$C)
1) 5A 2) 50A 3) 8A
4) 80A 5) 10A

55. படத்திலுளளவாறு இரு தடவைகள் இணைத்துள்ளன. 10Ω தடையில் விரயமான வலு 50w எனில், இரண்டு தடையிலும் விரயமான வலு,




1) 75w 2) 50w 3) 25w
4) 30w 5) 50/3w


56. ஒரு மின் அடுப்பின் மூலகம் சிவப்பாகவும் ஒரு மின் விளக்கின் இழை வெள்ளையாகவும் தோன்றுகிறது. பின்வரும் கூற்றுக்களை கருதுக.
A - அடுப்பின் மூலகம் மின் விளக்கின் இழையை விட குறைவான வெப்பநிலையில் உள்ளது.
B - வெப்பநிலை கூட குறுகிய அலைகளின் செறிவு அதிகரிக்கிறது.
C - வெள்ளை நிற ஒளி சிவப்பு நிற ஒளியைவிட குறைந்த அலைநீளங்களை உள்ளடக்கியது.


இவற்றுள் மேல் அவதானிக்கப்பட்ட நிற வித்தியாசத்தை விளக்கக்கூடியவை,
1) A மட்டும். 2) Aயும் Bயும் மட்டும். 3) Aயும் Cயும் மட்டும்.
4) Bயும் Cயும் மட்டும். 5) ABC எல்லாம்.


57. β கதிர்பற்றி பின்வரும் கூற்றுக்களில் உண்மையல்லாதது எது?
1) அவை வேகமாக செல்லும் மறை ஏற்ற காவிகள்.
2) அவற்றின் பாதையை காந்தபுலத்தினால் திசை திருப்பலாம்.
3) P உடன் ஒப்பிடும்போது அவற்றின் திணிவு புறக்கணிக்கத்தக்கது.
4) அவை அணுவின் மீட்புற ஓட்டிலிருந்து விடுவிக்கபபடும்.
5) கருவிலுள்ள In, P ஆக மாறும்போது β கதிர் வெளியிடப்படும்.

58. ஒரு துணிக்கையின் டிபுறொக்லி அலை நீளம் $10^{-10}$m எனின், அத்துணிக்கை இன் உந்தம் ($n = 6.63 \times 10^{-34}$Js)
1) $19.8\times10^{-16}$Ns 2) $6.6\times10^{-24}$Ns 3) $2.2\times10^{-32}$Ns
4) $6.6\times10^{-34}$Ns 5) $6.6\times10^{-44}$Ns

59.





படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு சீரான காந்தப்புலம் ஒன்றுக்குச் செங்குத்தாக வைக்கப்பட்டு உள்ள இரு சமாந்தரக் தண்டவாளங்களின் மீது PQ, RS என்ற கடத்திகள் சறுக்குகின்றன. இக்கடத்திகள் காட்டப்பட்டுள்ள திசையில் V வேகத்துடன் அசைகின்றன. A என்பது சிறிய தடையைக் கொண்டுள்ள அம்பியர்மானியாகும். இக்கடத்திகளும் தண்டவாளமும் புறக்கணிக்கத்தக்க தடைகளையுடையன. Ix, Iy, Iz என்பன முறையே (X), (Y), (Z) ஆகிய சுற்றுக்களில் உள்ள அம்பியர்மானி வாசிப்புகளாயின.
1) Ix = Iy = Iz 2) Ix = 2Iy ; Iz = 0 3) Iy = Iz = 0 ; Ix≠0
4) Ix = Iy ; Iz = 0 5) Iy = 2Ix ; Iz = 0

60.




ஓர் ஒப்பமான தடைக்கம்பியிலிருந்து செய்யப்பட்டுள்ள ஒரு செவ்வகக்கம்பிச் சட்டம் உருவில் காணப்படுகின்றவாறு புறக்கணிக்கத்தக்க அகத்தடையையும் மின் இயக்கவிசை Eயையும் உடைய ஒரு பற்றரியுடன் தொடுக்கப்பட்டுள்ளது. XY என்பது அதே கம்பியிலிருந்து வெட்டப்பட்டதும் கம்பிச்சட்டத்தின் வழியே வழுக்கத்தக்கதுமான ஒரு துண்டாகும். பிரதேசம் CDXYயினுள்ளே பரப்பிழுவை I யை உடைய ஒரு கடதாசித்திரவப்படலம் உண்டாக்கப்பட்டிருக்கும். அதே வேளை முழு அமைப்பும் உருவில் காட்டப்பட்டுள்ள திசையில் தாக்கும் பாய அடர்த்தி Bயை உடைய ஒரு சீர் காந்தப்புலத்தில் வைக்கப்பட்டுள்ளது. XY = XD = CD = CY ஆகவும் AX இனூடாக உள்ள மின்னோட்டம் I ஆகவும் இருப்பின் கம்பி XY வலப்பக்கமாக இயங்க நாடு,
1) B > 8T/3I ஆக இருக்கும் போதாகும்.
2) B > 4T/I ஆக இருக்கும் போதாகும்.
3) B < 8T/3I ஆக இருக்கும் போதாகும்.
4) B > 4T/3I ஆக இருக்கும் போதாகும்.
4) B <4T/3I ஆக இருக்கும் போதாகும்.

நன்றி: மாகாணக் கல்வித்திணைக்களம், கொழும்பு தமிழ்ச்சங்கம்

நிறைவு பெற்றன.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஓகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August
மாகாணக் கல்வித்திணைக்களமும் கொழும்பு தமிழ்ச்சங்கமும் இணைந்து வழங்கும்
மாதிரி வினாத்தாள்

## பொருளியல் 02

நேரம்:2மணித்தியாலம்

பிரிவு 'அ' விலிருந்து இருவினாக்களையும் பிரிவு 'ஆ' விலிருந்து இரு வினாக்களையும் தெரிவுசெய்து நான்கு வினாக்குளுக்கு விடை தருக.

### பிரிவு 'அ'

01. 1. "வணிக வங்கிகளின் பிரதான பணிகளின் ஒன்று நிதி இடைத்தரகராகத் தொழிற்படுவதாகும்"இதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது? (05 புள்ளி)

2. 2002 இல் நாணயச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டு மத்திய வங்கியின் குறிக்கோள்கள் இரண்டாக வரையறை செய்யப்பட்டன. அவ்விரு உறுதிகோள்களும் எவை? (04 புள்ளி)

3. திறந்த சந்தைத் தொழிற்பாட்டு முறைமைகளின் கீழ் வங்கிகளுக்கு இடையில் வட்டி வீதங்களின் தளம்பல்களைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் மீள்கொள்வனவு, நேர்மாற்று மீள் கொள்வனவு நடவடிக்கைகளை விளக்குக. (06 புள்ளி)

02. 1. பொதுவிலை மட்டத்தை அளவிட இலங்கையில் பயன்படுத்தப்படும் குறிகாட்டிகள் எவை?
2. நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் நன்மைகள் எவை?

3. 1952 ஆம் ஆண்டை அடியாண்டாகக் கொண்ட கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் உருவாக்கப்பட்டது. இதன் முக்கிய அம்சங்களை ஒப்பிடுக. (15 புள்ளி)

03. 1. சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கில் உள்ளடக்கப்படும் விடயங்கள் எவை? (03 புள்ளி)

2. சென்மதி நிலுவைப் பற்றாக்குறைக்கும், வர்த்தக நிலுவைக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை விளக்குக. (06 புள்ளி)

3. சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கு ரீதியில் குறைநிலையினைப் போக்க மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் எவை? (06 புள்ளி)

04. 1. ஒப்பீட்டு நன்மை, முழு நன்மை என்பவற்றை வேறுபடுத்துக.(04 புள்ளி)

2. ஒப்பீட்டு நன்மைளைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை? (03 புள்ளி)

3. இங்கிலாந்தும் அவுஸ்திரேலியாவும் கோதுமை, துணி ஆகிய பொருட்களில் ஓர் அலகை உற்பத்தி செய்வதற்கு எடுக்கும் ஊழிய நிரம்பலின் அளவுகள் தரப்பட்டுள்ளன.

| நாடுகள் | கோதுமை | துணி |
|---|---|---|
| | (ஊழிய மணித்தியாலங்கள்) | |
| இங்கிலாந்து | 2 | 4 |
| அவுஸ்திரேலியா | 8 | 10 |

a. கோதுமை, துணி ஆகியவற்றின் உற்பத்தியில் முழுநன்மையைக் கொண்டுள்ள நாடு எது? (02 புள்ளி)
b. இவ்விரு நாடுகளிலும் கோதுமை, துணி என்பவற்றுக்கான அமையச் செலவுகளைக் கணிப்பிடுக. (04 புள்ளி)
c. கோதுமை, துணி உற்பத்தியில் ஒப்பிட்டு நன்மையைக் கொண்டிருக்கும் நாடு எது? (02 புள்ளி)

### பிரிவு 'ஆ'

05. 1. வெளிப்படையான வேலையின்மை, மறைமுக வேலையின்மை என்பவற்றை வேறுபடுத்துக. (04 புள்ளி)

2. கீழ் உழைப்பின் பொருளாதார விளைவுகள் யாவை? (03 புள்ளி)

3. "இலங்கையில் வேலையின்மை கூடுதலாகக் காணப்படுவதற்குக் காரணமாக அமைவது கல்விக்கும் வேலை வாய்ப்பிற்கும் இடையிலான பொருத்தப்பாட்டின்மையாகும்" இக்கூற்றை விளக்குக. (04 புள்ளி)

4. எதிர்வரும் காலங்களில் இலங்கையிலும் வேலையின்மை அதிகரிக்கலாம் என எதிர்வு கூறப்படுகின்றது. இக்கூற்றுக்கு அடிப்படையாக அமைந்த காரணிகளை விளக்குக. (04 புள்ளி)

06. 1. பொருளாதார வளர்ச்சியூடாக நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்படும் விதத்தை விளக்குக. (04 புள்ளி)

2. பொருளாதார வளர்ச்சி மூலம் பொருளாதார அபிவிருத்தி ஏற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எவை? (05 புள்ளி)

3. 1977 இன் பின் இலங்கையின் பொருளாதாரத்தில் காணப்பட்ட பிரதான பண்புகள் எவை? (06 புள்ளி)

07. 1. இலங்கையின் கிராமிய விவசாயத்துறை சமூக பொருளாதார ரீதியில் பின்னடைந்தான போக்கைக் கொண்டுள்ளது. அதன் பின்னணியிலுள்ள காரணங்களை ஆய்வு செய்க. (05 புள்ளி)

2. இலங்கைப் பொருளாதாரத்தின் ஒரு அபிவிருத்தி உபாயமாக ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழில் கொள்கையை நடைமுறைப்படுத்தும்போது அதனை மட்டுப்படுத்துகின்ற காரணிகளைத் தருக. (05 புள்ளி)
3. வளர்ந்து வரும் நாடுகளில் சேவைத்துறையானது ஏனைய துறைகளைவிட உயர்வாக வளர்ச்சியடைகின்றது. இதனால் ஏற்படக்கூடிய சாதகபாதக விளைவுகளைக் கூறுக. (05 புள்ளி)

08. 1. புத்தாயிரம் ஆண்டு (மில்லேனியம்) அபிவிருத்திக் குறிக்கோள்கள் எவை? (07 புள்ளி)
2. இலங்கையின் அபிவிருத்தி தொடர்பான உலகவங்கியின் மீளாய்வு அறிக்கை (2004) யில் இலங்கையின் அபிவிருத்தி மேம்பாடு தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் எவை? (08 புள்ளி)

நிறைவு பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துளு குடிதண்ணீர்த் திட்டத்தை மேலும் விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்9

அத்துளு நீர்த்திட்டத்தை மேலும் விஸ்தரிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இக்குளத்திற்கு அருகில் உள்ள குழாய்க் கிணற்றின் மூலம் கரவெட்டிப் பிரதேசத்தில் ஆயிரம் பேருக்கு குழாய் வசதி மூலம் குடிதண்ணீர் விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனைவிட மாயக்கை பகுதியில் உள்ள நன்னீர் கிணற்றில் இருந்தும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் கரவெட்டி பிரதேசத்திற்கான குடிதண்ணீர் விநியோகம் விரைவில் விஸ்தரிக்கப்படவுள்ளது என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

அத்துளு குளப்பகுதியில் உள்ள நீர் தாங்கியூடாக மக்களுக்கு நிலத்தடிக் குழாய் மூலம் இந்த குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த விநியோகத்திற்கான ஆரம்பப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

நிலத்தடி குழாய் மூலம் இடம்பெறவுள்ள இந்த குடிதண்ணீர் விநியோகத்திற்கென கொழும்பில் இருந்து பொருள்கள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (203-224)

## தீவக வலய ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்9

தீவக வலய ஆங்கிலதின நாடகம், பாட்டுப் போட்டிகள் அண்மையில் புனித அந்தோனியார் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றன.

போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

* *பாட்டு ஆண்கள் கீழ் பிரிவு* - புனித அந்தோனியார் கல்லூரி.

* *பாட்டு ஆண்கள் மேற்பிரிவு* - புனித அந்தோனியார் கல்லூரி.

* *பாட்டு பெண்கள்' கீழ்பிரிவு* - ஊர்காவற்றுறை மரியாள் பாடசாலை, கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம்.

* *பாட்டு பெண்கள் மேற்பிரிவு* - ஊர்காவற்றுறை மரியாள் பாடசாலை, கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

* *நாடகம் ஆண்கள்* - புனித அந்தோனியார் கல்லூரி, காரை.வியாவில் சைவ வித்தியாலயம்.

* *நாடகம் பெண்கள்* - கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம். (203-325)

## தென்மராட்சி வலய வினாவிடைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்9

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கான தமிழ்மொழி மூலமான கணித, விஞ்ஞான பாட வினாவிடைப் போட்டிகள் எதிர்வரும் 20ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)

## பால் உணவுப் பொருள் உற்பத்தி நிலையம் அச்சுவேலியில் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்9

வலி.கிழக்குக் கால்நடை வள்ர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலியில் பால் உணவுப் பொருள் உற்பத்தி விற்பனை நிலையம் ஒன்றை திறந்துவைத்துள்ளது.

இந்த பால் உணவுப் பொருள் உற்பத்தி விற்பனை நிலையம் அச்சுவேலிப் பிரதேச வைத்தியசாலை வளாகத்தில் கடந்த சனிக்கிழமை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

கோப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையில் நடைபெற்ற இந்தப் பால் உற்பத்தி விற்பனை நிலையத் திறப்பு விழாவில் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு விற்பனை நிலையத்தைத் திறந்துவைத்தார். (203-224)

# நயினாதீவு திருவிழாக் காலங்களில் உறவினர் வீடுகளில் தங்க விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும்

யாழ்ப்பாணம்,ஜூன்9

நயினை நாகபூசணி அம்மன் ஆலய திருவிழாவுக்குச் செல்வோர் இரவு நேரங்களில் அங்கு தங்கநேரும் பட்சத்தில் அது தொடர்பான விவரங்களை இறங்குதுறையில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் பதிவுசெய்ய வேண்டும்.

ஆலயத் திருவிழா தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போதே கடற்படை அதிகாரியால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத் திருவிழாவுக்குச் சென்று இரவில் தங்க விரும்பும் பட்சத்தில் தங்கவுள்ள உறவினர்கள், நண்பர்களின் விவரங்கள் குறித்து நயினாதீவுக்குச் சென்ற அன்றைய தினம் மாலைநேரத்தில் இறங்குதுறையில் உள்ள சோதனைச் சாவடியில் பதிவுசெய்து கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஆலயச் சூழலில் உள்ள மதுபான நிலையம், தவறணைகள் என்பன திருவிழா நிறைவடையும் காலம்வரை மூடப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் இதற்குத் தனது முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாகத் தீர்மானித்துள்ளது. (203-111)

## புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூன் 9

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறை கலைவட்டமும் புத்தகக்கூடமும் இணைந்து நடத்தும் 'நூல்வேனில்' புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நேற்று ஆரம்பமாகின.

எதிர்வரும் 23ஆம் திகதி வரை இது நடைபெறவுள்ளது. (203)

## சம்பந்தர் குருபூசைகள்

யாழ்ப்பாணம்,ஜூன்9

மட்டுவில் கமலாசனி வித்தியாலய இந்துமாமன்றத்தின் ஏற்பாட்டில் திருஞானசம்பந்தர் குருபூசை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குப பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் சே.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகத் தென்மராட்சிக் கல்வி வலய இந்துசமய ஆசிரிய ஆலோசகர் செல்வி இ.இராமலிங்கம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி எல்.சுதமதி ஆகியோர் கலந்துகொள்வர். (201)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்9

வழக்கம்பரை சுழிபுரத்திலுள்ள சிவபூமி முதியோர் இல்லத்தில் திருஞானசம்பந்தர் குருபூசை இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குச் செஞ்சொற்செல்வா ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வட்டு.மத்திய கல்லூரி மாணவர்களின் வில்லிசை, பேச்சு, நடனம், நாடகம், தனிஇசை, தேவாரம் ஆகிய கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (201)

## போசாக்கு மாதத்தை முன்னிட்டு விழிப்புணர்வுக் கண்காட்சி

கோப்பாய்,ஜூன்9

போசாக்கு மாதத்தை முன்னிட்டு கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பாடசாலை மாணவர்களிடையே சுகாதார மற்றும் போசாக்குச் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக மாணவர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட ஆக்கங்களின் கண்காட்சியும் மற்றும் விளக்க நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி, இருபாலை ஆகிய பகுதி பாடசாலை மாணவர்களின் கண்காட்சி எதிர்வரும் 19ஆம், 20ஆம் திகதிகளில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் அச்சுவேலி, புத்தூர், சிறுப்பிட்டி ஆகிய பகுதி மாணவர்களின் கண்காட்சி எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரியிலும் நல்லூர், கொக்குவில், கோண்டாவில் ஆகிய பகுதி பாடசாலை மாணவர்களின் கண்காட்சி எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-72)

## கைப்பணிப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம்

நல்லூர்,ஜூன்9

பனம்பொருள் அபிவிருத்திச் சபை கைப்பணிப் பொருள்கள் தொடர்பான சந்தைக் கூடை, 'வீ' வடிவமைப்புக் கூடைகள் பொதுமக்களைக் கவரக்கூடியதான தயாரிப்புக்களைக் கொண்ட கூடைப்போட்டிகள் கடந்த 5ஆம் திகதி நடைபெற்றது.

போட்டிகளில் கலந்துகொண்டவர்களில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

*சந்தைக்கூடை* - ஜெயபாலசிங்கம் பிரியா - கிழுவானை ஒழுங்கை, கோப்பாய், யோகபால்வாணி - கோப்பாய் மத்தி, மகேந்திரன் அனுஷ்டிகா - மோகனதாஸ் சனசமூக நிலைய வீதி, மட்டுவில் கிழக்கு.

*'வீ' வடிவமைப்புக் கூடை* - தர்மநாதன் சஞ்சீவிதா - சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம், அருளானந்தம் சுஜாத்தா - சிவன் பண்ணை வீதி, யாழ்., அருமைராசா அனுத்தியா - அம்மன் கோயிலடி, அல்வாய் வடக்கு.

*போத்தல்கூடை* - நேசேந்திரன் சஜிதா- அளவெட்டி தெற்கு, குருவளை.

*பொதுமக்களைக் கவரக்கூடியதான வித்தியாசமான வடிவமைப்புக் கூடைகள்*- நவரத்தினராசா காமராஜி - குருவளை நலன்புரிநிலையம், அளவெட்டி, தேவஞானசீலன் ஜெயா - குருவளை நலன்புரி நிலையம், அளவெட்டி. (203-111)




## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்9

இணுவில் கந்தசுவாமி ஆலய திருமஞ்சத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு 1008 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை 5 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து சண்முகர் அர்ச்சனை நடைபெறும். மாலை 6.30 மணிக்கு திருமஞ்சத்தில் சண்முகர் வள்ளி, தெய்வானை சமேதராக வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும். (201)

* * *

வடமராட்சி,ஜூன்9

புலோலி கிழக்கு திகரி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும். (201-236)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்9

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று திங்கட்கிழமை பொங்கல் விழாவுடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 14 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (9-201)



தேசிய மட்டத்தில் இடம்பெற்ற தமிழ்த்தினப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கரவெட்டி, தச்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் உரையாற்றுவதையும் ஆக்கத்திறன் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற மாணிக்கவாசகர் வித்தியாலய மாணவன் பா.விநோதனுக்கு வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா பாராட்டுப் பத்திரம் வழங்குவதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

மாணிக்கவாசகர் வித்தியாலய ஆசிரியர் ஆனந்தநாயகி கந்தசாமி, விக்னேஸ்வரா கல்லூரி ஆசிரியை நளினி கணபதிப்பிள்ளை ஆகியோருக்கு மாணவர்களைப் பயிற்றுவித்தமைக்கான பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப்படுவதை அடுத்துள்ள இரண்டு படங்களிலும் காணலாம்.

(படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தும்பளை யோகசாந்தி நிலையத்தின் ஆசிரியர் ரி.தேவராஜேந்திரனால் பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்கள் கலட்டி றோ.க. ஆண்கள் பாடசாலையில் யோகாசனக் கண்காட்சியைச் செய்து காண்பித்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

# அதிபர் சேவையில் தரம் உயர்வு வழங்குவதற்கு இன்று தொடக்கம் கல்வி அமைச்சில் நேர்முகத் தேர்வு

அச்சுவேலி, ஜூன் 9

இலங்கை அதிபர் சேவையில் உள்ளவர்களை சேவை மூப்பு தகைமை அடிப்படையில் அடுத்த தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சை இந்த வாரத்தில் இருந்து கல்வியமைச்சில் நடைபெறவுள்ளது.

மாகாணம், மாகாணமாகக் கல்வியமைச்சில் நடைபெறவுள்ள நேர்முகப்பரீட்சைக்கு முதலாவதாக தென்மாகாணத்தைச் சேர்ந்த அதிபர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதனை அடுத்து மேல்மாகாணத்தை சேர்ந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்கு செல்பவர்க்ள் எட்டு வகையான ஆவணங்களை உரிய முறையிலான அத்தாட்சிப்படுத்தலுடன் சமர்ப்பிக்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு 3இல் உள்ளவர்களை வகுப்பு 2:II இற்கும் வகுப்ப 2:II இல் உள்ளவர்களை 2:Iஇற்கும் வகுப்பு 2:I இல் உள்ளவர்களை அதிபர் சேவை தரம் I இற்கும் சேவை மூப்புதிறமை அடிப்படையில் பதவி உயர்வு வழங்குவதற்கு இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பில் வகை செய்யப்பட்டுள்ளது.

இந்த வகையில் பதவி உயர்வுகளை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை கொழும்பு கல்வியமைச்சில் இன்று தொடக்கம் நடைபெறவுள்ளது.

முதற் கட்டமாக அதிபர் சேவை வகுப்பு 2 இல் உள்ளவர்கள் தரம் I இற்கும் பதவியுர்த்தப்படவுள்ளனர்.

நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களில் அதிபர் சேவையில் பதவியேற்றது தொடர்பாக ''சம்பவத்திரட்டின்'' பிரதி வலயக் கல்விப்பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் உட்பட 8 வகையான ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் களுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் முற்பகுதியில் ஆரம்பமாகலாம் எனக் கூறப்படுகின்றது.

அதிபர் சேவையில் பதவி உயர்வு வழங்கும் நடைமுறையில் இதுவரை காலமும் பின்பற்றுப்பட்டு வந்த 40 வீதம் சேவை மூப்பு 60 வீதம் பரீட்சை என்ற நடைமுறை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு 100 வீதமும் பாடசாலைகளின் ஆளணியளவைக் கருத்தில் கொண்டு சேவை மூப்புத் திறமை அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

இலங்கை அதிபர் சேவை பதவி உயர்வு தொடர்பான விடயங்களுக்கு பொறுப்பான கல்வியமைச்சில் மேலதிக செயலாளராக அனோஜா குருகே நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிபர் சேவை நியமனம் வழங்குவது தொடர்பான அதிகாரம் கல்வி அமைச்சரின் அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் கல்வியமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. இலங்கைப் பொதுச் சேவை குழுவுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படும் வரை பதவி உயர்வுகள் கல்வியமைச்சின் செயலாளரால் மேற்கொள்ளப்படவுள்ளன.

(203-11)

# ஆக்கத்திறன் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ். கல்விவலயப்பாடசாலைகளில் கற்கும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டி நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

மேற்படி போட்டியில் பங்குபற்றவுள்ள மாணவர்கள் உரிய நேரத்திற்கு 30 நிமிடத்திற்கு முன்பதாக தேவையான உபகரணங்களுடன் வருகை தருமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(201)

# மாணவரிடையே தகவல் தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்யும் யாழ்ப்பாண விஞ்ஞானச்சங்கம்

பாடசாலை மாணவர்களிடையே விஞ்ஞானம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தல் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும். அந்த வகையிலே பாடசாலை மாணவரிடையே பல சுற்றுப் பேச்சுப்போட்டிகள், கட்டுரைப் போட் டிகள், வினாடி வினாப் போட்டிகள் நடத்தப்பட்டு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டு வந்தன. இவற்றிற்குச் சிகரம் வைத்தாற் போல மாணவரிடையேயான விஞ்ஞான தொழில்நுட்ப அறிவு மற்றும் புத்தாக்க முயற்சிகளை ஊக்குவிக்கும் முகமாகவும் கண்காட்சிப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டு வந்தன. கடந்த சில வருடங்களாகத் தவிர்க்க முடியாத காரணங்களால் மேற்படி போட்டிகள் நடத்தமுடியாமல் போனது.

ஆனால் 2008 ஆம் ஆண்டு தெரிவான யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் புதிய உறுப்பினர்கள் இப்போட்டிகளை நடத்துவதற்குத் தீர்மானித்து பல்வேறு தரப்பினருடன் கலந்தாலோசித்தனர். மேற்படி போட்டிகள் வலய மற்றும் மாவட்ட மட்டங்களில் தற்போது நடத்தப்பட்டு வருவதால் பாடசாலை சமூகத்தினிடையே மேற்படி போட்டிகளுக்கான வரவேற்பு மிகவும் குறைவாகவே காணப்பட்டது. ஆனாலும் புதிதாக அறிமுகமான தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான விழிப்புணர்வு தேவைப்படுவதாக ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இவ்வருடத்திற்கான பாடசாலை விஞ்ஞான நிகழ்ச்சித் திட்டம் இதனடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது.

இது இரண்டு பகுதிகளாக நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

முதலில் மாணவரிடையே விழிப் புணர்வை ஏற்படுத்து முகமாக ஒரு பரீட்சை நடத்துவதெனவும் இரண்டாவ தாக அப்பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவரிடையே மீண்டும் ஒரு பரீட்சை நடத்தி அவர்களில் முதலாவதாக வரும் மாணவருக்கு பதக்கமும் ஏனையோருக்கு சான்றிதழ்களும் வழங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி முதலாவது பரீட்சை யாழ் மாவட்டத்திலுள்ள 2010ஆம் ஆண்டு ஜீ.சி.ஈ. உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து மாணவரிடையே (கணிதம், விஞ்ஞானம், கலை மற்றும் வர்த்தகம்) நடத்தப்பட்டது. யாழ். மாவட்ட மேலதிக கல்விப்பணிப்பாளர் வே. தி.செல்வரட்ணம் ஒருங்கிணைப்பில் கல்விப் பணிப்பாளர்களின் ஒத்துழைப்புடன் அனைத்துப் பாடசாலைகளிலிருந்து 4733 மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற் றினர்.

இவர்களில் 78 மாணவர்கள் இரண்டாவது பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் 53 மாணவர்களே தோற்றினர். இவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். அவர்களில் ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன். ஸ்ரீபவன் ரஜீபவன் அதியுயர் புள்ளிகளைப் பெற்ற மாணவராவார். இவருக்கான பதக்கமும் ஏனைய மாணவருக்கான சான்றிதழ்களும் எதிர்வரும் 12ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள யாழ்ப்பாண விஞ் ஞான சங்கத்தின் மூன்றாம் நாள் அமர்வில் பி.ப 2 மணியளவில் நிகழ வுள்ள தலைவருரையைத் தொடர்ந்து நடை பெறும் பரிசளிப்பு விழாவில் வழங்கப்படும்.

அரச அதிபருடனான கலந்துரையா டல். அரச சார்பற்ற நிறுவனமான UNDP நோக்கிய அவரது வழிகாட்டல் இன்னொரு அத்தியாயத்தை திறந்துள்ளது. UNDPயானது இந் நிகழ்ச்சியின் அடுத்த கட்டமாக தகவல் தொழில்நுட்ப பாடத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திக்கான பயிற்சியினைப் பல்கலைக்கழக வளவாளர்களைக் கொண்டு பயிற்சியளிக்க அனுசரணை வழங்க ஒத்துக்கொண்டுள்ளது.

**Dr.செ.கண்ணதாசன்,**
**உதவிப் பொதுச் செயலாளர்,**
**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,**


## சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா



அகில உலகமெங்கும் ஆரம்பத்தில் வணங்கும் ஆனைமுகக் கடவுளின் அளவற்ற அருளால் டென்மார்க் கேணிங் பதியில் அமைந்துள்ள சித்தி விநாயகர் ஆலயத்திற்குப் புதிதாக அமைய இருக்கும் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா ஆவணி மாதம் 5 ஆம் நாள் வெள்ளிக்கிழமை (21.08.2009) இல் சிறப்பாக நடைபெறவுள்ளது.

ஈழத்தின் தலைசிறந்த ஸ்தபதி 'சிற்பக் கலா வாருதி'
**பத்மநாதன் சுரேந்திரன்**
அவர்களின் கலைவண்ண நெறியில் இளங்கலைஞர் ஸ்தபதி
**முத்துலிங்கம் சுபாகர்**
அவர்களால் உருவாக்கப்பெற்ற ராஜ கம்பீர சிற்பவேலைகள் அமைந்த இத் திருத்தேர் பவனியில் அனைத்து அடியார்களும் பங்குகொண்டு இறை சக்திக்கு ஆளாகுங்கள். திருத்தேர் பவனியைக் காணுதல் இறை சக்தியை ஏற்படுத்துவதுடன் துன்ப வினையை நீக்கும் என்றும் தேர் வடிவமானது ஜோதி போன்று பிரகாசிப்பதாகவும் நூல்கள் கூறுகின்றன. அவ்வாறான ஜோதி வடிவமும் இறைவனின் திருவடிவமேயாகும்.

**சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா**
21.08.2009 வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணி

**தேர்த் திருவிழா**
22.08.2009 சனிக்கிழமை மு.ப.10.00 மணி

சித்தி விநாயகர் பெருமானின் மகோற்சவ விழாக்களிலும் தேர் வெள்ளோட்ட விழா, தேர்த் திருவிழா நிகழ்வுகளிலும் கலந்து விநாயகப் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

ஆலய பரிபாலன சபை, கேணிங், டென்மார்க்.



## பாராட்டி வாழ்த்துகிறோம்



திருமதி
**ரூபினி வரதலிங்கம்**
(இலங்கை நிர்வாகசேவை, தரம் I)

திருமதி ரூபினி வரதலிங்கம் அவர்கள் வலி.தென் மேற்கு பிரதேச செயலாளராகக் கடமையாற்றி யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபராகப் பதவி உயர்வுபெற்றுப் பணியாற்றும் அவரை மென்மேலும் பதவியுயர்வு பெற்றுச் சிறப்பான சேவை ஆற்றவும் சீரும் சிறப்புடனும் வாழவும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவதுடன் அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கிராம அபிவிருத்திச் சங்கம், வடலியடைப்பு.
(C/558914)
நிர்வாகத்தினரும் பொதுமக்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழையிலுள்ள றேடியோ கதிர்வீச்சு சிகிச்சை நிலையம் புற்று நோயாளர்களின் சிரமங்களை வெகுவாகக் குறைத்துள்ளது!

**புற்றுநோயாளர்களின் நலன்கருதி தெல்லிப்பழையில் றேடியோக் கதிர்வீச்சு நிலையம் அமைக்கப்பட்டு இன்றுடன் நான்கு வருடங்கள் பூர்த்தியாகின்றன. அதனையொட்டி இச்சிகிச்சை நிலையத்தின் செயற்பாடுகள் பற்றி யாழ்.போதனா வைத்தியசாலை, புற்றுநோய் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி என்.ஜெயக்குமாரனுடன் உதயன் வாசகர்களுக்காக நடத்திய விசேட நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.**



## வைத்திய நிபுணர் என் .ஜெயக்குமார் சொல்கிறார்

**கேள்வி:** யாழ்.குடாநாட்டில் புற்றுநோயின் தாக்கம் தற்போது எந்த நிலையில் இருப்பதாக கருதுகிறீர்கள்?

**பதில்:** அண்மைக்காலமாக புற்றுநோயின் தாக்கம் யாழ்.குடாநாட்டில் அதிகரித்துள் ளதை இங்கே குறிப்பிட்டேயாக வேண்டும். அதிலும் குறிப்பாக குறித்த சில உடற் பாகங்களில் மட்டுமே புற்றுநோய்த்தாக் கம் அதிகமாக ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. ஆண்களுக்கு தொண்டை, வாய் போன்ற பகுதிகளிலும் பெண்களுக்கு மார்பகம் மற்றும் கருப்பைக் கழுத்துப் பகுதிகளிலும் சிறுவர்களுக்கு இரத்தத்திலும் அண்மைக்காலமாக அதிகளவில் புற்று நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது. தற்போது சுமார் 45 சிறுவர்கள் புற்றுநோயால் பாதிக்கப் பட்ட நிலையில் இங்கு சிகிச்சை மற்றும் மாதாந்த வைத்திய கவனிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மூன்று தொடக்கம் மூன்றரை வருடங்கள் ஒழுங்கு முறையான சிகிச்சை தேவைப்படும். அதன் பின்னர் இவர்கள் இயல்பான வாழ்வினை வாழ முடியும். எனினும் புற்றுநோயின் தாக் கம் அதிகரித்தபோதிலும் அதற்கேற்ற வகையில் புற்றுநோய் தொடர்பான சிகிச்சைகளையும் நாங்கள் எங்களால் இயன்றளவு செய்துவருகிறோம். இதன் ஒரு அம்சமாகத் தான் தெல்லிப்பழையில் றேடியோ கதிர்வீச்சு சிகிச்சை நிலையத்தை ஆரம்பித்து அதனூடாக நோயாளர்களுக்கு தகுந்த சிகிச்சையினைக் கடந்த நான்கு வருடங்களாக வழங்கி வருகிறோம்.

**கேள்வி:** தெல்லிப்பழையில் அமைந்துள்ள றேடியோ கதிர்வீச்சு சிகிச்சை நிலையத்தினால் குடாநாட்டிலுள்ள புற்றுநோயாளர்களுக்கு உண்டாகியுள்ள அனுகூலங்கள் பற்றி கூறமுடியுமா?

**பதில்:** முன்பெல்லாம் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு றேடியோக் கதிர்வீச்சு முறையிலான சிகிச்சையினை வழங்குவதற்கு அவர்களை பலத்த சிரமத்தின் மத்தியில் மஹரகம புற்றுநோய் வைத்திய சாலைக்கு அனுப்பவேண்டியிருந்தது. ஆனால் தெல்லிப்பழையில் நாங்கள் இத்தகைய றேடியோக் கதிர்வீச்சு சிகிச்சை நிலையத்தை அமைத்த பின்னர் நோயாளர்கள் மஹரகமவிற்குச் செல்லவேண்டிய அவசியம் இல்லாமலே போய்விட்டதென்றுதான் கூறவேண்டும். ஆயினும் புற்றுநோய்த்தாக்கம் மிகவும் அதிகரித்த நிலையிலுள்ள நோயாளர்கள் அங்குதான் அனுப்பப்படுகிறார்கள். 2005ஆம் ஆண்டு ஜூன் 9ஆம் திகதி றேடியோக் கதிர்வீச்சு நிலையத்தை தெல்லிப்பழையில் ஆரம்பித்தோம். இன்று நான்கு வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் ஏராளமான நோயாளர்கள் இந்நிலையத்தின் ஊடாக சிகிச்சை பெற்றுள்ளார்கள்.

## நவீன மயப்படுத்தப்பட்ட புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் அமைத்தால் வடமாகாண மக்கள் மிகுந்த பயன்பெற வாய்ப்புண்டு

**கேள்வி:** இச்சிகிச்சை நிலையத்தில் இதுவரை காலமும் சிகிச்சை பெற்ற நோயாளர்களின் எண்ணிக்கையை தெரிவிக்க முடியுமா?

**பதில்:** நிச்சயமாக. 2005ஆம் ஆண்டு - ஜூன் முதல் டிசெம்பர் வரை - 295 புற்றுநோயாளர்களும், 2006ஆம் ஆண்டு 440 புற்றுநோயாளிகளும், 2007ஆம் ஆண்டு 388 புற்றுநோயாளிகளும், 2008ஆம் ஆண்டு 375 புற்றுநோயாளிகளும், 2009ஆம் ஆண்டு - ஜனவரி முதல் ஜூன் வரை - 181 புற்றுநோயாளிகளுமாக இதுவரையும் 1679 பேர் சிகிச்சை பெற்றுள்ளார்கள். மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக் கொண்டுள்ள எமக்கு இவ்வளவு பெரும் எண்ணிக்கையான நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கமுடிந்ததை எண்ணி நான் திருப்தி கொள்கிறேன். எனினும் இந்த நிலையம் உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ளதால் நோயாளர்களும் பணியாளர்களும் சில அசௌகரியங்களையும் சந்திக்கவேண்டியுள்ளது.

**கேள்வி:** அத்தகைய அசௌகரியங்கள் எவை என்பது பற்றிக் குறிப்பிட முடியுமா?

**பதில்:** அதியுயர் பாதுகாப்பு பிரதேசத்தில் - தெல்லிப்பழையில் - றேடியோக் கதிர்வீச்சு நிலையம் அமைந்துள்ளதால் சுதந்திரமான நடமாட்டங்களுக்கு அனுமதி இருப்பதில்லை. இந்நிலையத்தில் பணியாற்றுவதற்கு தினசரி 18 உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே அனுமதியளிக்கப்படுகின்றது. இன்று யுத்தம் நிறைவடைந்துவிட்டதாக கூறப்படும் நிலையில் எதிர்வரும் காலங்களில் இத்தகைய இறுக்கமான பாதுகாப்பு நடைமுறைகள் நீக்கப்பட்டு, சிகிச்சை நிலையத்தில் ஊழியர்களின் சுயாதீனமான நடமாட்டத்துக்கு அனுமதியளிக்கப்படும் பட்சத்தில் எமது சேவையை இன்னும் அதிகமாக்கலாம் என நம்புகின்றேன்.

அத்தோடு இச்சிகிச்சை நிலையத்திற்கு செல்வதற்குப் பயன்படுத்தப்படும் வீதி குன்றும்குழியுமாகவே காணப்படுகின்றது. இது தற்போது சீர்செய்யப்பட்டு வந்தாலும் அப்பணி மந்தகதியிலேயே நடைபெறுகிறது. எனவே குறித்த வீதியை துரிதகதியில் சீர்படுத்தினால் அது நோயாளர்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

**கேள்வி:** யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள புற்றுநோயாளர் விடுதி பற்றியும் அதன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் விளக்க முடியுமா?

**பதில்:** ஏ-9 வீதி மூடப்பட்ட பின்னர் குடாநாட்டின் புற்றுநோயாளர்கள் அனைவரும் இங்கேயே சிகிச்சை பெறவேண்டியுள்ளது. தற்போது ஒரு அறையில் ஐந்து நோயாளர்கள் வீதம் தங்கியுள்ளனர். எனினும் இது ஆரோக்கியமானதல்ல. இதனால் எமது குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு யாழ். அரச அதிபரின் பெரு முயற்சியினால் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவப் பிரிவின் மேல் கட்டப்படும் கட்டடத்தின் அரைப்பகுதி புற்றுநோயாளர் விடுதிக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஆண், பெண் புற்றுநோயாளர்களுக்கு தனித்தனியாக விடுதிகள் அமையவுள்ளன. இனிவரும் காலங்களில் ஏ-9 வீதி மீளத் திறக்கப்படும் பட்சத்தில் வடமாகாணத்திலுள்ள இன்னும் பல புற்றுநோயாளர்கள் போதனா வைத்தியசாலைக்கே சிகிச்சைக்காக வரவேண்டியுள்ள சூழலில் புதிய விடுதி அமைய விருப்பது பொருத்தமானதாகும்.

இதேவேளை நவீன வசதிகளைக் கொண்ட புற்றுநோயாளர் சிகிச்சை நிலையமொன்றை அரச அதிபரினால் பண்ணைப் பகுதியில் ஒதுக்கப்பட்ட காணியில் நிறுவுவதற்கு யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியக்லாநிதி ஏ.தேவநேசன் தீவிர முயற்சி எடுத்து வருகிறார். நாட்டில் அரசியல் சூழ்நிலை சீராகும் நிலையில் புற்றுநோயாளர்களுக்கெனத் தனியாக நவீனமயப்படுத்தப்பட்ட வைத்தியநிலையமொன்று, யாழ். போதனா வைத்தியசாலையின் ஓர் அங்கமாக அதனருகே அமையப்பெறுமாயின் அது வடமாகாணத்திலுள்ளபுற்று நோயாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமையும்.

**நேர்காணல்: ஔவியன்**





கைத்தொழில் விஞ்ஞானத்துறை அமைச்சர் குமார வெல்கம நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.
குருநகர், சீநோர் நிறுவனத்துக்கு சென்ற அமைச்சர் தொழிற்சாலையை பார்வையிடுவதையும் எதிர்காலத்திட்டங்கள் குறித்து யாழ். அரச அதிபர் கே.கணேஷ், நிறுவனத்தின் பிரதிப் பொதுமுகாமையாளர் பி.கேதீஸ்வரலிங்கம் ஆகியோருடன் கலந்துரையாடுவதையும் முதலிருபடங்களில் காணலாம்.
இணுவிலில் உள்ள லங்கா சிமெந்து நிறுவன அலுவலகத்துக்கு சென்ற அமைச்சரை சிமெந்துக் கூட்டுஸ்தாபன, லங்காசிமெந்து நிறுவன ஊழியர்கள் வரவேற்பதை மூன்றாவது படத்தில் காணலாம்.
(படங்கள்: லக்ஸ்மன்)

# விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பொது மன்னிப்பை நடைமுறைப்படுத்த வேண்டும்

## ஜனாதிபதியிடம் டக்ளஸ் வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 9

அரச படைகளிடம் சரண் அடைந்துள்ள விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படுவதை நடைமுறையில் வெளிப்படுத்த வேண்டும். தொடர்ந்து எஞ்சியுள்ள உறுப்பினர்களும் நம்பிக்கை யோடு சரண் அடைவார்கள்.

ஜனாதிபதியிடம் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

அமைதி வழிக்கும் அரசியல் தீர்விற்கும் விருப்பமின்றி அழிவு யுத்தத்தில் மட்டும் குறியாக இருந்த புலிகளின் தலைமை இல்லாதொழிக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்த அமைப்பின் உறுப்பினர்கள் பலரும் இன்று வரை சரணடைந்து வருகிறார்கள்.

இவ்வாறு சரணடைந்து வரும் புலிகளின் உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வும், பொது மன்னிப்பும் வழங்கப்படுவது உறுதி செய்யப்படவேண்டும்.

தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகள் வேறு,புலித்தலைமையின் பிரச்சினை வேறு என இருவேறாக தாம் கருதுவது போலவே புலிகளின் உறுப்பினர்களையும் புலிகளின் தலைமையினையும் இரு வேறாகப் பிரித்துப் பார்க்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் எடுத்து விளக்கியிருந்த செயலாளர் நாயகம்;புலிகளின் தலைமை புரிந்த தவறுகளுக்காகப் புலிகள் உறுப்பினர்கள் எந்த வகையிலும் தண்டிக்கப்பட்டு விடக்கூடாது என்று வலியுறுத்திக் கூறியுள்ளார்.

விரும்பியோ விரும்பாமலோ புலிகளின் தலைமையை ஏற்று அந்த அமைப்பின் உறுப்பினர்களாக செயற்பட்டிருந்தவர்கள் அனைவருமே தமிழ் பேசும் மக்களின் பிள்ளைகள் என்றும் தமது பிள்ளைகள் யாவரும் பொதுவாழ்வில் ஈடுபட வேண்டும் என்பதையே தமிழ் பேசும் மக்கள் விரும்புகிறார்கள் என்பதையும் ஜனாதிபதியிடம் எடுத்து விளக்கியிருந்த செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இந்த விருப் பங்களை ஜனாதிபதி நிறைவேற்றும் பட்சத்தில் தமிழ் பேசும் மக்களின் மனங் களை முழுமையாக வெற்றிகொள்ள முடியும் என்றும் தெரிவித்திருந்ததோடு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் அரசி யல் தீர்வு முயற்சிகளிலும் எமது தேசத்தை கட்டி எழுப்பும் அபிவிருத்திப் பணிகளிலும் சரணடைந்து வரும் புலிகளின் உறுப்பினர்கள் பலரும் இணைந்து செயலாற்றுவதற்கான சூழல் ஒன்று கனிந்து வரும் என்றும் அமைச்சர் ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளார் -என்றும் அவரது அமைச்சின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (1)

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 9

இலங்கை உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்திற்கு முகாமைத்துவ உதவியாளர்களை ஆள்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளதால் இதற்கான மூன்று நாள் வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்று இடம்பெறவுள்ளது.

நாளை நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகும் இக்கருத்தரங்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கும் வெள்ளிக்'கிழமை நண்பகல் 12 மணிக்கும் பட்டப் படிப்புகள் கல்லூரியில் இடம்பெறும் என் றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்குகளில் பங்கு பற்ற விரும்புவோர் நாளை முற்பகல் 11 மணி முதல் பதிவு செய்யுமாறும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பரீட்சைக்கு விண்ணப்பித்தோரும் இக்கருத்தரங்குகளில் கலந்துகொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்குச் சம உரிமைகள் கிடைக்க இந்தியா முக்கிய பங்காற்றவேண்டும்

## மார்க்சிஸ்ட் கட்சி வலியுறுத்து

சென்னை, ஜூன் 09

இலங்கையில் தமிழர்களுக்குச் சம உரிமை கிடைக்கச் செய்ய இந்தியா முக்கிய பங்காற்ற வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கட்சியின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் கடந்த இரண்டு நாள்களாகச் சென்னையில் நடைபெற்றது. கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு -

இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அங்குள்ள அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை அந்த நாட்டு அரசு கூட்ட வேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகளை அந்த நாட்டு அரசு கேட்கத் தவறியதன் விளைவே விடுதலைப் புலிகள் இயக்கம் உருவானது. எனவே, சிங்கள மக்களுக்கு இணையாக இலங்கைத் தமிழர்களுக்கு அனைத்து உரிமைகளும் கிடைக்கச் செய்ய வேண்டும்.

நிவாரண முகாம்களில் உள்ள மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்களுக்கு குடிநீர், உணவு, உடை, சுகாதாரம், மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகள் கிடைக்க வேண்டும். இந்தப் பணிகள் ஐ.நா. அமைப்பின் நேரடிக் கண்காணிப்புடன் செய்யப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் சொந்த வாழ்விடங்களிலேயே அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதோடு, உடனடி வருமானத்துக்காக வேலைவாய்ப்பும் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். தமிழர் பகுதிகளில் உள்ள கெடுபிடிகள் நிறுத்தப்பட வேண்டும்.

விசாரணையின்றி சிறையில் உள்ள அப்பாவித் தமிழர்கள் விடுவிக்கப்பட வேண்டும். தமிழர்களுக்கு சிறப்புப் பொருளாதார திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவும், தமிழர்கள் சம உரிமையுடன் அமைதியாக வாழவும், அவர்களுக்கு புதுவாழ்வு ஏற்படவும் இலங்கை அரசும், சர்வதேச சமூகமும் பங்காற்ற வேண்டும். அதில், இந்திய அரசு முக்கிய பாங்காற்றிட வேண்டும் போன்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.



மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் நேற்றுமுன்தினம் முதல்வர் கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்து சால்வை அணிவித்தபோது.........



இந்தியாவின் வட மாநிலங்களில் சாவித்ரி நோன்பு நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த நாளில் நோன்பு இருந்து ஆலமரத்துக்கு புனித நூலைக் கட்டினால் கணவனின் ஆயுள் அதிகரிக்கும் என்பது ஐதீகம். குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் ஆலமரத்துக்கு புனித நூலை பெண்கள் கட்டுகின்றபோது.......

# துரோகிகளாலேயே தமிழினம் தொடர்ந்து வீழ்த்தப்படுகிறது

## அக்கினிப்புயல் சீமான் வேதனை

பெங்களூர், ஜூன் 9



துரோகிகளாலேயே தமிழினம் தொடர்ந்து வீழ்த்தப்படுகிறது. அன்று பண்டார வன்னியனுக்கு ஒரு காக்கை வன்னியன், கட்டபொம்மனுக்கு ஒரு எட்டப்பன். அதுபோல்தான் இன்றும் துரோகிகளாலேயே தமிழினம் வீழ்த்தப்படுகிறது - என்று இயக்குநர் சீமான் ஆவேசமாகப் பேசினார்.

ஈழத்தமிழர்களை காக்கக்கோரி பெங்களூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

குடும்ப நலனுக்காக, இனம் அழிவதை வேடிக்கை பார்ப்பவன் தலைவனா? இனத்தைக் காக்க, குடும்பமே அழிந்தாலும் களமாடுகிறவன் தலைவனா?

இலங்கை அரசு, சீனாவும், பாகிஸ்தானும் கொடுத்த ஆயுதத்தையும், இந்தியா கொடுத்த ஆயுதத்தையும், பயிற்சியையும் பயன்படுத்தி தமிழினத்தை முற்றாக அழிக்கப் பார்க்கிறது. தமிழ் நிலத்தை சுடுகாடாக்கிவிட்டு, நாடு அமைதியாக இருக்கிறது என இலங்கை அரசு கூறுகிறது.

மனித உரிமை பற்றிப் பேச எந்த வல்லாதிக்க அரசுக்கும் அருகதை கிடையாது. தமிழர்கள் சொந்த மண்ணிலே, முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு ஆதரவாக, ஐ.நா. மன்றத்தில் முதல் கையெழுத்துப் போட்டு ஆதரவு தெரிவிக்கிறது இந்தியா. மலையாளி ஒருவர் கொல்லப்பட்டிருந்தால், நாராயணன் பல்லிளித்துக் கொண்டு மஹிந்தவுடன் கை குலுக்குவாரா?

வழக்கை முடிக்க இறப்பு பத்திரம் கேட்கின்றனர். உங்களுக்கு வழக்கு முடிக்க தமிழினத்தின் வாழ்க்கையா முடியவேண்டும்? ஒரு மலையாளி கொல்லப்பட்டிருந்தால், ஏ.கே.அந்தோனி ஆயுதம் கொடுப்பாரா?

மே 17 ஆம் திகதி பிரபாகரன் இறந்துவிட்டார் என செய்தி வந்தவுடன் தமிழ்நாடே இழவு வீடாகி போனது. தமிழினமே செத்துப் போனது. பிரபாகரன் நலமாக உள்ளார் என்ற செய்தி கிடைத்தவுடனே, தமிழினமே உயிர்த்தெழுந்தது. இப்போது புரிந்து கொள்ளுங்கள். தமிழினத்தின் உயிர் யார் என்பதை. தமிழினத்தின் ஜீவநாடி, பிரபாகரனின் கையில்தான் உள்ளது" என்றார்.




# உண்மை நிலையைக் கண்டறிவதற்கு தமிழகக் குழு இலங்கை செல்ல வாய்ப்பு

## கனிமொழி எம்.பி. பேட்டி

சென்னை, ஜூன் 09



இலங்கையில் போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில், அங்குள்ள உண்மை நிலையை அறிவதற்காக தமிழக அரசியல் குழு செல்ல வாய்ப்பிருக்கிறது - என்று கனிமொழி எம்.பி. கூறினார்.

இலங்கை அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், இலங்கைத் துணைத் தூதர் அம்சா ஆகியோர் சென்னையில் கனிமொழி எம்.பி.யை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினர்.

பின்னர் கனிமொழி எம்.பி. செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அளித்த பதில்கள் வருமாறு -

கே - இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய அரசு என்னென்ன உதவிகளைச் செய்யவுள்ளது?

ப - இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்காக ஏற்கனவே இந்திய அரசு ரூ.500 கோடி வழங்கப்படும் என அறிவித்துள்ளது. மேலும், அவர்களுக்கு என்னென்ன தேவை என்பது குறித்து முழு ஈடுபாட்டுடன் அறிந்து நிறைவேற்றி வைக்கப்படும் எனக் கூறியுள்ளது.

கே - இலங்கையில் போர் முடிந்துள்ள சூழ்நிலையில், அங்குள்ள உண்மை நிலையை அறிய தமிழகத்திலிருந்து அனைத்துக் கட்சி தலைவர்கள் அடங்கிய அரசியல் குழு அனுப்பப்படுமா?.

ப - இதுகுறித்து தமிழக அரசுதான் முடிவு செய்யும். அதற்கான வாய்ப்பு உள்ளது - என்றார்.

முன்னதாக அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானிடம் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு -

கே - கனிமொழி எம்.பி.யை சந்தித்ததற்கான நோக்கம் என்ன?.

ப - போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில், இலங்கையில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளது. அங்கு 20 லட்சம் மலையகத் தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்களின் எதிர்காலம் பற்றிப் பேச வந்தோம். இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்க 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தைச் செயற்படுத்த இருக்கிறார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருக்கிறார்.

அரசியல் சட்ட திருத்தத்தை உடனே நிறைவேற்ற இந்தியாவை வலியுறுத்தக் கோரி வந்தோம்.

கே - இலங்கை ஜனாதிபதி, அங்குள்ள தமிழர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவார் என்று நம்புகிறீர்களா?

ப - நம்பிக்கைதான் எல்லாமே.

கே - இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்கு இந்தியா எந்த மாதிரியான உதவியைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்?.

ப - இந்தியா தான் அனைத்து உதவிகளையும் செய்து பாதுகாக்க வேண்டும் - என்றார்.

# மதுரையருகே ஆடு வெட்டும் திருவிழா 10,000 ஆடுகளைப் பலியிட்டு விருந்து

மதுரை உசிலம்பட்டி அருகே உள்ள ஆரியபட்டி கிராமத்தை சேர்ந்த கல்யாண கருப்புசாமி கோயிலில் நேற்றுமுன்தினம் 45 ஆண்டுகளுக்கு பின்னர் கடா வெட்டும் விழா நடந்தது.

ஆரியபட்டியை தலைக்கிராமமாக கொண்ட இராமநாதபுரம், குப்பணம்பட்டி, மேலப்பட்டி, புதுப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் ஆடுகள் பலியிடப்பட்டன. ஒரு குடும்பத்துக்கு ஒரு ஆடு முதல் 15 ஆடுகள் வரை வசதிக்கேற்ப பலியிடப்படுகிறது.

இந்த விழாவை முன்னிட்டு இந்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் இங்கிருந்து வேலைக்காக வெளியூர் சென்றிருந்தவர்கள் என அனைவரும் குவிந்தனர். 10 ஆயிரத்துக்கும் அதிகமான ஆடுகள் பலியிடப்பட்டன. விழாவுக்கு வந்திருந்த உறவினர்கள், நண்பர்களுக்கு கடாவிருந்தளிக்கப்பட்டது. சுமார் 5 கிலோ மீற்றர் சுற்றளவுக்கு எங்கு திரும்பினாலும் பந்தல்களும், விருந்துமாகக் காட்சியளித்தது.

இதுகுறித்து கோயில் அறக்கட்டளை செயலர் சின்னக்கண்ணன் கூறியவை வருமாறு -

கிராமக் காவல் தெய்வங்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக இத்திருவிழா நடத்தப்படுகிறது. 1964ஆம் ஆண்டுக்குப் பின்னர் நேற்றுமுன்தினம் திருவிழா தொடங்கப்பட்டது. 10 ஆயிரம் ஆடுகள் பலியிடப்பட்டன - என்றார்.

# பெண்கள் இட ஒதுக்கீட்டுப் பிரேரணை சபையில் நிறைவேறுவதில் புதிய சிக்கல்

புதுடில்லி, ஜூன் 09

பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கும் பிரேரணையை ஆய்வு செய்யும் குழுவின் பதவிக் காலம் முடிவதால் நாடாளுமன்ற வரவு - செலவுத் திட்டக் கூட்டத்தொடரில் பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றம், மாநில சட்டசபைகளில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு அளிக்க, வாஜ்பாய் ஆட்சிக் காலத்திலேயே சட்டப் பிரேரணை தயாரிக்கப்பட்டது.

பல்வேறு கட்சிகளின் எதிர்ப்பு காரணமாக அதை நிறைவேற்றுவதில் சிக்கல் ஏற்பட்டது. எனினும், கடந்த முறை மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது, தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன் டில்லி மேல் சபையில் அந்தப் பிரேரணை தாக்கல் செய்யப்பட்டது.

ஆனால், அந்தப் பிரேரணையை நிறைவேற்றுவதில் ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்காக சட்டம் மற்றும் நீதித் துறைக்கான நாடாளுமன்ற நிலைக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது.

தற்போது, புதிய நாடாளுமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. முந்தைய நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட உடனேயே பழைய நிலைக்குழுவின் பதவிக் காலமும் தானாகவே முடிந்து விட்டது. அதனால், புதிய நிலைக்குழு அமைக்கப்படுகி[illegible]

இதற்கிடையே, பதவியேற்ற 100 நாள்களுக்குள் பெண்கள் இட ஒதுக்கீட்டுப் பிரேரணையை நிறைவேற்ற புதிதாக அமைந்துள்ள மத்திய அரசு உறுதி பூண்டுள்ளது. ஜனாதிபதி உரையிலும் இதுகுறித்து அறிவித்திருக்கிறது. ஆனால், புதிதாக நிலைக்குழு அமைக்கப்பட இருப்பதால், 100 நாள்களுக்குள் மசோதாவை நிறைவேற்றுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

புதிதாக அமைக்கப்படும் குழு, மீதமுள்ள பணிகளை முடித்து அறிக்கை அளிப்பதற்கு கால அவகாசம் ஏற்படும். எனவே, 100 நாள்களுக்குள் அந்தக் குழுவால் அறிக்கை அளிக்க முடியாது. அதனால், வருகின்ற பட்ஜெட் கூட்டத்தொடரின்போது பெண்கள் இட ஒதுக்கீட்டுப் பிரேரணை நிறைவேற்றப்பட வாய்ப்பில்லை என்று மத்திய அமைச்சர் ஒருவர் கூறினார்.

# ஹொலிவுட் படத்திற்கு முதல் முறையாக இசையமைக்கிறார் ஒஸ்கார் ரஹ்மான்

அலிகார், ஜூன் 09



ஹொலிவுட் படத்துக்கு முதல் முறையாக, இசையமைக்கிறேன் என்றும், இந்திய இசைக்கு வெளிநாடுகளில் நல்ல மரியாதை ஏற்பட்டிருக்கிறது என்றும் ஒஸ்கார் தமிழன் ஏ.ஆர்.ரஹ்மான் கூறியுள்ளார்.

இசைத் துறையில் சிறந்து விளங்கும் 43 வயதான ஏ.ஆர்.ரஹ்மானுக்கு, அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கியது. இதற்கான விழா நேற்றுமுன்தினம் நடந்தது.

விழாவில் கலந்துகொண்டு பட்டம் பெற்ற பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு -

[illegible] துறையில், சர்வதேச அளவில் சிறப்பான இடத்தை பெற்றிருக்கும் ஹொலிவுட்டில் தயாராகும் 'கப்புள்ஸ் ரிட்ரீட்' என்ற படத்துக்கு நான் இசையமைக்கிறேன். நான் இசையமைக்கும் முதல் ஹொலிவுட் படம் இதுதான்.

இந்தப் படத்தில் இசையமைப்பதில் வேறு யாருடைய குறுக்கீடும் கிடையாது. அனைத்தும் எனது முழு விருப்பத்தின் படி செய்து வருகிறேன். எனது முழுமையான திறமையின் வெளிப்பாடாக இந்த சினிமா அமையும்.

இந்தப் படத்தில், என்னைத் தவிர வேறு இந்தியர் யாரும் பங்கு கொள்ளவில்லை. இந்த ஆண்டு இறுதிக்குள், இந்த படம் திரைக்கு வரும். அப்போது எனது பங்களிப்பு சிறப்பானதாக அமைந்திருப்பது உலகுக்குத் தெரியவரும்.

இந்திய இசைக்கு, வெளிநாடுகளில் நல்ல மரியாதை ஏற்பட்டு இருக்கிறது. ஸ்லம்டாக் மில்லினர் படத்தில் இடம் பெற்ற 'ஜெய் ஹோ' பாடல், வெளிநாட்டு இசைத்துறையிலும் முத்திரை பதித்து இருக்கிறது - என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பொசன் தினத்தையொட்டி சுன்னாகம் இராணுவ முகாமில் நிர்மாணிக்கப்பட்டு இருந்த புத்தரின் ஏழு நிலைகளை சிருஷ்டிக்கும் மிகிந்தலைக் குன்றின் தோற்றத்தையும் சமாதானப் புறாவையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: நேசன்)

# யாழ்., வவுனியா தேர்தல்களில் தனித்துக் களமிறங்குகிறது மு.கா

கொழும்பு, ஜூன் 09

யாழ். மாநகர சபை மற்றும் வவுனியா நகரசபைக்கு இடம்பெறவுள்ள தேர்தல்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் அதியுயர் பீடம் இந்த முடிவை எடுத்துள்ளது என அக்கட்சியின் பிரதித் தலைவரும் முன்னாள் அமைச்சருமான நூர்டீன் மசூர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கோட்டையாகவுள்ள வன்னி மாவட்டத்தில் மீண்டும் கட்சியின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வரையிலான முன்னோடித் தேர்தலாக இந்த உள்ளூராட்சித் தேர்தல் அமையுமென அவர் குறிப்பிட்டார்.

முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்து அக்கட்சிக்கு பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொடுத்து வரும் மாவட்டமாக இனங்காணப்பட்டுள்ள இந்த மாவட்டம் எதிர்வரும் உள்ளூராட்சி மற்றும் பொதுத் தேர்தல்களில் தமது பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சித் தேர்தல்களில் முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் மேலும் கூறினார்.

அண்மையில் வவுனியாவுக்கு விஜயம் செய்த முன்னாள் அமைச்சர் நூர்டீன் மசூர் அந்தப் பிரதேசத்திலுள்ள கட்சியின் கிளைக் காரியாலயங்களுக்கும் விஜயம் செய்து முக்கியஸ்தர்களுடன் பேச்சு நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

# கண்டி அக்குறணையிலும் கொள்ளையர் கைவரிசை

கண்டி, ஜூன் 09

கண்டி, அக்குறணைப் பகுதியிலுள்ள நகைக்கடையொன்றைக் கொள்ளையிட முற்பட்ட கொள்ளையர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஊழியர்கள் இருவர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்த இரு ஊழியர்களும் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கொள்ளையர்களில் ஒருவரைப் பொது மக்கள் பிடித்து கட்டுக்கஸ்தோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்றும், மற்றைய நபர் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

# மொறட்டுவவில் கொள்ளையர்கள் சூடு; ஒருவர் பலி; 17 லட்சம் ரூபா பணம் அபேஸ்

கொழும்பு, ஜூன் 09

மொறட்டுவ,ராவத்தைப் பகுதியிலுள்ள தனியார் வங்கியில் பணத்தை வைப்பிலிடச் சென்றவர்கள் மீது நேற்று முற்பகல் கொள்ளையர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார்.17 இலட்சம் ரூபா பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என்று மொறட்டுவப் பொலிஸார் தெரிவித்தனர்.

வான் ஒன்றில் பணத்தை வைப்பிலிடச் சென்றவர்களைப் பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் சென்ற கொள்ளையர்கள் வானின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதன்போது அந்த வானின் சாரதி உயிரிழந்தார். வானிலிருந்த சுமார் 17 இலட்சம் ரூபா பணத்தையும் கொள்ளையர்கள் எடுத்துச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-சி)

# புத்தளம், குருநாகலில் நேற்று மினிசூறாவளி

கொழும்பு, ஜூன் 09

புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் நேற்று அதிகாலை வீசிய மினி சூறாவளி காரணமாக சுமார் 75 வீடுகள் சேதமாகியதுடன் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

புத்தளம், குளியாப்பிட்டி தொகுதியில் உள்ள வாதாகொட்டுவ என்னும் முஸ்லிம் கிராமத்தில் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் சூறாவளி வீசியது. இதனால் அப்பகுதியில் 45 வீடுகள் சேதமானதோடு 4 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சூறாவளி சுமார் 03 நிமிடங்கள் நீடித்தது என்றும் இதனால் பெரும்பாலான வீடுகளின் கூரைகள் காற்றில் பறந்தன என்றும் கூறப்பட்டது. 200இற்கும் மேற்பட்ட தென்னை மற்றும் தேக்கு மரங்களும் மின்கம்பங்கள் சிலவும் முறிந்து விழுந்தன. இதனால் அப் பகுதி மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கினர்.

இதேவேளை, நேற்று அதிகாலை குருநாகல் மாவட்டத்திலும் மினிசூறாவளி ஏற்பட்டது. இதனால் அங்கு 30 வீடுகள் சேதமடைந்தன. அதிர்ஷ்டவசமாக அங்கு எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (அ-சி)

# பங்களாதேஷை வெளியேற்றியது அயர்லாந்து சுப்பர் - 8க்குள் இந்தியாவுடன் நுழைந்தது

நோட்டிங்ஹாம், ஜூன் 09

ருவென்ரி - 20 உலகக் கிண்ணத் தொடரிலிருந்து முதலாவது அணியாக வெளியேறிச் சென்றது பங்களாதேஷ்.

நேற்று நோட்டிங்ஹாமில் நடந்த ஏழாவது போட்டியில் பங்களாதேஷ் அணியும் ருவென்ரி - 20 அறிமுக அணியான அயர்லாந்தும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அயர்லாந்து முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய மோற்ரஷா ஆட்டமிழக்காது 2 சிக்சர்களுடன் 33 ஓட்டங்களையும் ஆரம்ப வீரர் தமிம் இக்பால் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

அயர்லாந்து சார்பில் பந்து வீசிய ஜோன்ஸ்ரன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 18.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (138 ஓட்டங்கள்) அடைந்தது. துடுப்பாட்டத்தில் நியால் ஓ பிரைன் 3 சிக்சர்கள் 3 பௌண்டறிகள் அடங்க லாக 40 ஓட்டங் களையும் கெவின் ஓ பிரைன் 2 சிக்சர்கள் 4 பௌண்டறிகளுடன் 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

பங்களாதேஷ் அணி சார்பில் பந்து வீசிய மோற் ரஷா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

அயர்லாந்து பெற்ற வெற்றி யின் மூலம் குழு- 'ஏ' யில் இருக்கும் இந்தியாவும் அயர்லாந்தும் சுப்பர் - 8 சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன. இந்தியாவுடனான முதல் போட்டியிலும் பங்களாதேஷ் தோல்வியுற்றதனால் ருவெண்ரி - 20 உலகக்கிண்ணத் தொடரில் இருந்து பங்களாதேஷ் முதலாவது அணியாக வெளியேறியுள்ளது. (06)

# ஸ்கொட்லாந்து அணியை இலகுவாக வீழ்த்தி 'சூப்பர் 8'க்கு தகுதி பெற்றது தென்னாபிரிக்கா

லண்டன், ஜூன்.8-

'ருவென்ரி-20' உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் ஸ்கொட்லாந்தை வென்று தென்னாபிரிக்கா, முதல் அணியாக 'சூப்பர்-8' சுற்றுக்குள் நுழைந்தது.

'ருவென்ரி-20' தொடரின் 3ஆவது நாளான நேற்றுமுன்தினம் 'டி' பிரிவில் நடந்த ஓர் ஆட்டத்தில் தென்னாபிரிக்காவும், ஸ்கொட்லாந்து அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற ஸ்கொட்லாந்து அணி, முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி அணித்தலைவர் ஸ்மித்தும், கலிஸூம் தென்னாபிரிக்கா சார்பில் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினார்கள். இருவரும் ஸ்கொட்லாந்து வீரர்களின் பந்து வீச்சுகளை நொறுக்கித் தள்ளினார்கள். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்காக 87 ஓட்டங்களைக் குவித்து அசத்தியது. கலிஸ் 48 ஓட்டங்களுடனும் (31 பந்துகள், 8 பௌண்டறிகள்), ஸ்மித் 38 ஓட்டங்களுடனும் (29 பந்துகள், 6 பௌண்டறிகள், ஒரு சிக்ஸர்) சுழற்பந்து வீச்சாளர் மஜீத் ஹக்கின் ஒரே ஓவரில் 'பெவிலியன்' திரும்பினர்.

பின்னர் இறுதிக் கட்டத்தில் டி வில்லியர்ஸ் (79) தொடுத்த பயங்கரத் தாக்குதல் காரணமாக தென்னாபிரிக்க அணி, 200 ஓட்டங்களைக் கடந்தது. 20 ஓவர் முடிவில் தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 211 ஓட்டங்களைக் குவித்தது.

தொடர்ந்து ஆடிய ஸ்கொட்லாந்து அணி, தென்னாபிரிக்காவின் பந்து வீச்சுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் திக்கித் திணறியது. விக்கெட்டுக்கள் மளமளவென சரிந்தன. 15.4 ஓவர்களில் ஸ்கொட்லாந்து அணி 81 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதன்மூலம் 130 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணி இமாலய வெற்றியை ருசித்தது.

டி' பிரிவில் தென்னாபிரிக்காவும் நியூஸிலாந்து அணியும் தங்களது கடைசி லீக் ஆட்டத்தில் இன்று மோதுகின்றன. ஆனால், இந்த ஆட்டத்தின் முடிவு இவ்விரு அணிகளுக்கும் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது.


பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி ரூபினி வரதலிங்கம்
(இலங்கை நிர்வாகசேவை, தரம் 01)



வலி.தென்மேற்குப் பிரதேச செயலாளராகப் பணியாற்றி தற்போது யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகப் பதவியேற்றிருக்கும்
திருமதி ரூபினி வரதலிங்கம்
(இலங்கை நிர்வாகசேவை, தரம் 01)
அவர்கள் யாழ்.மண்ணிற்கு பற்பல பணிகளை சீருடன் ஆற்றி மேலும் பலபதவிஉயர்வுகள்பெற வேண்டும் என எமது சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
மானிப்பாய் கோயில்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

திருமண சேவை: எம்மிடம்உள்நாட்டு, வெளிநாட்டு, டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் மற்றும்உத்தியோகம், சொந்தத்தொழில் பார்க்கும்மணமக்கள் உண்டு.பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது. தொடர்பு கொள்ளவும்.
இல -9, சங்கிலியன் வீதி
0214591417

அழியா நினைவுகளுடன்
ஆண்டு ஒன்பதில்....



அமரர்
அரியகுட்டி சித்திரவடிவேலு
(குகன்)
உரிமையாளர்:-
குகன் ஸ்ரூடியோ
சாவகச்சேரி

ஆண்டவன் படைப்பில் 23.10.1927
திதி:-துதியை
யுத்தத்தின் பிடியில் 20.05.2000

உள்ளத்து உணர்வில் பதியிட்ட
உங்கள் இனிய முகத்தெழில்
உணர்வு உள்ளவரை தங்கும்.

புகையிரத நிலைய வீதி,
சாவகச்சேரி.
மனைவி,மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்

# இலங்கை ஆறு விக்கெட்டுகளினால் அபார வெற்றி! வெறுங்கையுடன் வீடுதிரும்புகிறது அவுஸ்திரேலியா

நேட்டிங்ஹாம், ஜூன் 9

அவுஸ்திரேலியா அணியினை 6விக்கெட்டுகளால் வீழ்த்தி அதனை வீட்டுக்கு அனுப்பியது இலங்கையணி.

டில்சான், சங்கக்காரவின் அதிரடியான துடுப்பாட்டத்தினால் இலங்கை அணிக்கு இரண்டாவது ருவெண்ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் முதல் வெற்றி கிடைத் துள்ளது.

ருவெண்ரி -20 உலக கிண்ணப் போட்டித் தொடரின் எட்டாவது ஆட்டத்தில் குழு 'சி' பிரிவுக்கான அணிகளான அவுஸ் திரேலியாவும் இலங்கையும் நேற்றிரவு நேட்டிங்ஹாம் மைதானத்தில பலப்பரீட்சை நடத்தின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கையணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அவுஸ்ரேலிய அணியின் ஆரம்ப வீரர்களாக ஷேன் வட்சனும் வோர்னரும் களமிறங் கினர். வோர்னர் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் மத்தியூஸின் (அறிமுக வீரர்) பந்தில் டில்சானிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அடுத்து வந்த பொண்டிங் 15பந்துகளில் 25 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மெண்டிஸின் சுழலில்'போல்டானார்' வட்சன் 22 ஓட்டங்களில் மெண்டிஸின் சுழலில் 'எல்.பீ.டபிள்யூ' முறையில் வெளியேறினார்.

அடுத்து வந்த ஹடின் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அறிமுக வீரர் உதனவின் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து கிளார்க் அவரின் முதலாவது விக்கெட்டாக வீழ்ந்தார். ஜோன்சன் ஆட்டமிழக்காமல்2 சிக்ஸர்கள் 2 பௌண்டறிகள் உள்ளடங்கலாக 28 ஓட்டங்களை பெற்றார்.

அவுஸ்ரேலிய அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கையணி சார்பில் பந்து வீசிய மலிங்க, மெண்டிஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டு க்களையும் அறிமுக வீரர் உதன 2விக்கட்டுகளையும்வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இலங்கை அணியின் ஆரம்ப வீரர்களாக டில்சானும், ஜெயசூரியாவும் களமிறங்கினர். ஜெயசூரியா 2 ஓட்டங்களுடன் லீயிடம் தனது விக்கெட்டைப் பறிகொடுக்க, சிறப்பாக ஆடிய டில்சான் 10பௌண்டறிகளை விளாசி அரைச் சதம் (53) கடந்து ஆட்டமிழந்தார்.

அணித் தலைவர் சங்கக்கார 55 ஓட்டங்களையும் முபாரக் 21 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

இலங்கை அணி 19 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திம் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்று அபார வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா சார்பில் பந்து வீசிய பிரட்லீ 2விக்கெட்டுக்களையும் ஹசி, ஹாரிட்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இலங்கையணி பெற்ற வெற்றியின் மூலம் முன்னர் மேற்கிந்தியத் தீவுகளிடம் தோல்வி கண்ட அவுஸ்திரேலியா அடுத்த சுற்றான சுப்பர் - 8க்கு செல்லும் வாய்ப்பினை இழந்தது. இலங்கை பெற்ற வெற் றியின் மூலம் சுப்பர்-8க்கு இலங்கையும் மேற்கிந்தியத் தீவுகளும் தகுதி பெற்றுள்ளன.

இவ்விரு அணிகளும் நாளை பலப் பரீட்சை நடத்துகின்றன. (6)

## அகாஷி வருகையின் நோக்கம் என்ன? கேள்வி எழுப்புகின்றார் மனோ எம்.பி.

கொழும்பு, ஜூன் 9

ஜப்பானியா விஷேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி பதினெட்டாவது முறையாக கொழும்பு வந்துள்ளார். கடந்த காலங்களில் அகாஷி வந்து சென்ற ஒவ்வொரு முறையின் பின்னரும் அவரது வருகையின் நோக்கங்கள் தொடர்பில் இந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் விளக்கமின்மை நிலவிவந்துள்ளது என்பதை ஜப்பானிய அரசும் இந்நாட்டிலுள் ஜப்பானியத் தூதுவரும் புரிந்துகொள்ள வேண்டும்

- இவ்வாறு மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டாளரும், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய விஷேட தூதுவர் அகாஷியின் வருகை தொடர்பில் மனோ எம்.பி. மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் மிகப் பெரிய பொருளாதார பங்காளி நாடு ஜப்பானாகும். இதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோழ். ஆனால், ஜப்பானின் இலங்கை தொடர்பிலான நோக்கங்கள் பொருளாதார ஒத்துழைப்பிற்கு அப்பால் இருக்கின்றதா - என்பது பற்றி எங்களுக்குப் பலத்த சந்தேகங்கள் இருக்கின்றன.

தீராத தேசிய இனப்பிரச்சினை காரணமாகவும் போர்ச்சூழல் காரணமாகவும் இலங்கையில் வேறு எந்தவொரு பிரிவினரையும் விட அதிக துன்பங்களை அடைந்துள்ளவர்கள் தமிழ் மக்களே என்ற அடிப்படை உண்மையை சமாதானத்திற்கான விஷேட தூதுவர் யசூசி அகாஷி புரிந்து கொண்டுள்ளாரா என்பது பற்றி எமக்கு நியாயமான கருத்து வேறுபாடுகள் இருக் கின்றன.

வர்த்தக பொருளாதார தூதுவராக அல்லாமல் சமாதானத் தூதுவர் என்ற அடிப்படையில் யசூசி அகாஷியின் பயணங்கள் அடையாளப்படுத்தப்படுவதால் எமக்கு இந்தச் சந்தேகங்களை எழுப்புவதற்கு உரிமை இருக்கின்றது. ஜப்பான் ஒரு பௌத்த நாடு. இதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம் - என்றார்.

### ஈழத்தமிழருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து ஆர்வம் காட்டப்படவில்லை.

அவர் தனது உண்ணாவிரதப் போராட்டத்தின் போது தமக்கு உற்சாகமளித்து ஆதரவளித்த லண்டன்வாழ் தமிழ்மக்களுக்கு தனது பதில் உரையின்போது நன்றியினைத் தெரிவித்தார்.

ரிம் மார்டினின் அனுதாபிகள் முன்வைத்த வன்னி மக்கள் ஆதரவான ஐந்து அம்ச நிகழ்வுகளை - நடவடிக்கைகளை- பரிசீலித்த பின்னரே அவர் தமது போராட்டத்தை நிறுத்தினார்.

ரிம் மார்டினின் உண்ணாவிரதத்தின் 19 ஆம் நாளன்று தொலைக்காட்சி ஊடகவியலாளர்கள் எடுத்த வீடியோக் காட்சி, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஆன்மீக ஆலோசகர் வண.மைக்கல் எபக்கித்திடம் ஒப்படைக்கப்பட்டி ருக்கிறது எனவும் அதனை ஒபாமாவிடம் கையளித்து பார்க்கச் செய்வதாக ஆன்மீக ஆலோசகர் உறுதியளித்திருப்பதாக ஐந்து அம்சங்களில் ஒன்றில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை-

மாணவர்கள் லண்டனில் மேற்கொண்டு வரும் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்து நடைபெறுவதாகத் தகவல்கள் தெரிவித்தன. (அ)

### இந்தியப் பிரதமர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது இலங்கையில் உள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இன்று தமிழ்நாடு சென்று கூட்டமைப்புக் குழுவுடன் இணைவார் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இச் சந்திப்பை நிறைவு செய்துகொண்டு, கூட்டமைப்பினர் 13 ஆம் திகதி நாடு திரும்புவர் என்று கூட்டமைப்பின் எம்.பி. ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் கூட்டமைப்பினர் தமிழக முதல்வர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சி)

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
இணைந்த கணிதம் - 2011
சமனிலிகள், சார்புகள்
ஆரம்பம் - 09.06.2009 (இன்று)
TUE, THU - 4.15 - 5.15pm
TUE, THU - 5.15 - 6.15pm
By - AINHARAN

### ஏ - 9 வீதியூடாக.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பொருள்கள் அனைத்தும் அநுராதபுரத்தில் சோதனைக்குட்படுத்தப் பட்டு பாதுகாப்புப் பிரிவினரால் லொறிகளில் முத்திரை இடப்படும். மீண்டும் முகமாலையில் லொறிகள் பரிசோதிக்கப்பட் டதன் பின்னர் இந்த முத்திரைகள் அகற்றப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

### ஈழத்தமிழருக்கு அதிகாரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்.

தமிழர்கள் இலங்கை நாட்டின் சமபிரஜைகளாக நடத்தப்படுவர் என்று மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதியும் நிறைவேற்றப்பட வேண்டும்.

இலங்கை அரசு இவற்றையெல்லாம் முழுமையாக நிறைவேற்றவேண்டும். இவற்றுக்கு குறைவாக எதையும் வழங்கினால் எம்மால் திருப்திப்பட முடியாது- என்றார். (அ)

### இந்திய வைத்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனிக் பாம் நலன்புரி முகாம் பகுதிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

இது குறித்து இலங்கைக்கான இந்தியத் தூதரகம் நேற்றுத் திங்கட்கிழமை வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில், எட்டு வைத்தியர்கள் உள்ளிட்ட 65 பேர் கொண்ட இந்த இந்திய வைத்தியக்குழு, மோதல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இரண்டாவது கட்ட சேவைகளை வழங்குவதற்காகவே இப்போது மனிக் பாம் நலன்புரி முகாமுக்கு மாற் றப்பட்டிருக்கிறது எனவும் தெரிவித்திருக்கிறது.

சத்திர சிகிச்சை உட்பட சகல வைத்திய சேவைகளையும் வழங்கி வந்த இந்த புல்மோட்டை இந்திய நடமாடும் வைத்தியசாலை ஏற்கனவே சுமார் 2,000 இடம் பெயர்ந்த மக்களுக்கு வைத்திய சேவைகளை வழங்கியிருக்கிறது. (சி)

## வன்னிப் பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் திறக்கப்படுமாம்

இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கி உள்ளவர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொடுப்பதற்கான விசேட திட்டம் ஒன்றை மேற்கோள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் அடிப்படையில் வடக்கிலும் கிழக்கிலும் இரண்டு வேலைவாய்ப்புப் பணியக அலுவலகங்களைத் திறப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. முதலாவது அலுவலகத்தை மட்டக்களப்பில் அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் இரண்டாவது அலுவலகத்தை வன்னிப் பகுதியில் அமைக்க பணியகம் ஆலோசித்து வருகிறது என்றும் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## ஐரோப்பிய நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழ்ப் பெண் ஜனனி தோல்வி

### எனினும் 50,000 வாக்குகளுக்கு அதிகமாகப் பெற்றார்



லண்டன்,ஜூன்9

ஐரோப்பிய யூனியன் நாடாளு மன்றத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட இலங்கைத் தமிழ்ப் பெண் ஜனனி ஜனநாயகம் வெற்றி பெறத் தவறினார். இருப்பினும் 50 ஆயிரம் வாக்குகளுக்கும் மேலாகப் பெற்று புதிய சாதனையைப் படைத்திருக்கிறார்.

லண்டன் பகுதியிலிருந்து சுயேச்சையாகப் போட்டியிட்டிருந்தார் ஜனனி. அவருக்கு புலம் பெயர்ந்த தமிழர்கள் பேராதரவு தெரிவித்திருந்தனர். இலங்கைப் பெண்ணான பிரபல பாடகி மாதங்கி மாயா அருட்பிரகாசமும் ஆதரவு தெரிவித்திருந்தார்.

ஜனனி வெற்றி பெற்றால் இலங்கைத் தமிழர்களின் அவலத்திற்கு ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் அவர் மூலமாக விடிவு காலம் பிறக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

ஆனால் துரதிஷ்டவசமாக ஜனனி தோல்வியுற்றார். இருப்பினும் கூட 50 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று புதிய சாதனை படைத்துவிட்டார் ஜனனி.

ஐரோப்பிய நாடாளுமன்றத் தேர்தல் வரலாற்றிலேயே, ஒரு சுயேச்சை வேட்பாளருக்கு இவ்வளவு வாக்குகள் இதுவரை கிடைத்ததில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்த வகையில் ஜனனி வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனையை நிகழ்த்தியுள்ளார் என்றும் கூறப்பட்டது.

இங்கிலாந்தைச் சேர்ந்த சில கட்சிகளின் வேட்பாளர்களை விட ஜனனி அதிக வாக்குகளைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், அனைத்து சுயேச்சை வேட்பாளர்களும் மொத்தமாகப் பெற்ற வாக்குகளை விட 2 மடங்கு அதிக வாக்குகளையும் ஜனனி பெற்றுள்ளார்.

லண்டன் பகுதியில் எட்டு எம்.பி. இடங்கள் உள்ளன. இதில், 3 இடங்களை கன்சர்வேட்டிவ் கட்சியும், ஆளும் தொழிலாளர் கட்சி 2 இடங்களையும் பெற்றன. லிபரல் டெமாக்ரட்ஸ், கிரீன் கட்சி, இங்கிலாந்து சுயேச்சைக் கட்சி ஆகிவற்றுக்கு தலா ஓர் இடம் கிடைத்தது.

ஜனனிக்கு ஒரு லட்சம் வாக்குகள் கிடைத்திருந்தால் அவர் எம்.பி. ஆகியிருப்பார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

### திருப்பி அனுப்பப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினரால் மறித்து அழைத்துச் செல்லப்பட்ட அந்தக் கப்பலில், சிரியா மற்றும் எகிப்திய மாலுமிகளும், பிரிட்டிஷ் தமிழர் ஒருவரும் மற்றும் ஐஸ்லாந்தைச் சேர்ந்த ஒருவரும் இருந்தனர்.

'கப்டன் அலி' (வணங்காமண்) என்னும் அந்தக் கப்பல் இலங்கைக் கடற்பரப்பை விட்டு வெளியே செல்லவேண்டும் என்றும், அது கொழும்புத் துறைமுகத்துக்குள் சென்று பொருள்களை இறக்கக் கூடாது என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது எனக் கடற்படையின் சார்பிலான அதிகாரி ஒருவர் பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

அந்தக் கப்பலை அனுமதிக்காத காரணத்தால் அதிலிருந்த நூற்றுக்கணக்கான தொன் எடை கொண்ட பொருள்கள் வீணாகப் போகாதா - என்று கேட்டதற்குப் பதிலளித்த அவர், அந்த முடிவு பாதுகாப்பு அமைச்சினால் எடுக்கப்பட்டது எனவும், தன்னால் அது குறித்து எதுவும் கூறமுடியாது என்றும் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

தமிழ் சமூகத்தினரால் நல்லிணக்க நோக்கில் அனுப்பப்பட்ட இந்தக் கப்பலில் வந்த பொருள்களை பயன்படுத்துவதில்லை என்று எடுக்கப்பட்ட அந்த முடிவு தமக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது என அந்தக் கப்பலை அனுப்பிய புலம்பெயர் தமிழர் குழுவைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

அந்தக் கப்பலில் அனுப்பப்பட்ட பொருள்கள் வடக்கில் அகதிகளாகியுள்ள மக்களுக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படும் பொருள்களாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

முன்னதாக அந்தக் கப்பலை விடுதலைப் புலிகளின் கப்பல் என்று பாதுகாப்பு அமைச்சுக் கூறியிருந்தது. (சி)

### இலங்கைப் போர்க்குற்ற.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தின் ஆட்சியில் இருந்து தங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக எந்த அரசும் கருதக்கூடாது. சிறிலங்கா அரசு சொல்வது உண்மை என்றால், அனைத்துலக விசாரணை குறித்து அது அஞ்சுவதற்கு எதுவும் இல்லை என்று அது சுட்டிக் காட்டியுள்ளது.

அத்தகைய விசாரணைக்கு உட்படுத்திக் கொள்ள சிறிலங்கா அரசு முன்வருவது தான், சிறிலங்காவில் மெய்யான நல்லிணக்கத்துக்கும், நிலையான அமைதிக்கும் முக்கியமான முதல் நடவடிக்கையாக இருக்கும் என்று; 'ஜப்பான் ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

இலங்கையில், இடம்பெயர்ந்த மக்களுக்கான முகாம்களில் தங்கியுள்ள மூன்று லட்சம் அப்பாவித் தமிழ் மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவது, அவர்களை மீண்டும் அவர்களின் வாழ்விடங்களில் குடியமர்த்துவது உள்ளிட்ட சிக்கல்கள் குறித்து விவாதிப்பதற்காக, ஜப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி சிறிலங்காவுக்கு மூன்று நாள் பயணமாகச் சென்றிருக்கும் வேளையில் 'ஜப்பான் ரைம்ஸ்' பத்திரிக்கை அதன் தலையங்கத்தில் இவ்வாறு வலியுறுத்தி உள்ளது.

சிறிலங்காவுக்கு மிகப் பெரிய அளவுக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளில் ஜப்பானும் ஒன்று. (அ)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.06.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org